
அன்று வந்ததும்
இதே நிலா
குகனேந்திரன்



# அன்று வந்ததும் இதே நிலா



யாழ்ப்பாணம்
அன்னையே
வணங்குகின்றோம்
தாயே.



## குகனேந்திரன்

நிலாமலர்

காங்கேசன்துறைச்சாலை, கொக்குவில்.

# நூல் விபரம்


நூல் தலைப்பு : **அன்று வந்ததும் இதே நிலா**

ஆசிரியர் : குகனேந்திரன்

மொழி : தமிழ்

முதல் பதிப்பு : ஆவணி 2001

நிலாமலர் பதிப்பு : **02**

அச்சு எழுத்து : 12 புள்ளி

நூலின் அளவு ; 1 × 8 கிறவுண்

மொத்தப் பக்கங்கள் : 172

பிரதிகள் : 1000



உரிமை : ஆசிரியருக்கு



வெளியீடு : நிலா மலர்

அட்டைப்படம் : கே. ரவி

அச்சிட்டோர் : ஷாமளி அச்சகம்

நூலின் விலை : **95 - 00 ரூபா**

**வாசகர்களுக்கு வணக்கம்!**

மக்களுக்காகத்தான் அரசாங்கம் அரசாங்கத்துக் காக மக்களல்ல மக்களுக்காத்தான் சட்டங்கள். சட்டங்களுக்காக மக்களல்ல. மக்கள் ஏற்றுக்கொண் டால் தான் கொள்கைகள் வாழும் இல்லாவிட்டால் கொள்கைகள் தான் மாற்றப்பட வேண்டும். அது போலத்தான் நாவல்கள் மக்களுக்காகத்தான். அவர் கள் ஏற்றுக் கொண்டால்தான் அவை வெற்றிபெற் றதாகச் சொல்லமுடியும்.

எங்களுடைய முதல் வெளியீடான ''நெஞ் செல்லாம் நினைவு தான்'' நாவல் வெற்றி பெற்ற தற்கு வாசகர்களாகிய நீங்களே தான் காரணம் அதற்காக நாங்கள் நன்றி சொல்கிறோம்.

''அன்று வந்ததும் இதே நிலா'' வான இந்த நாவலும் நிச்சயம் வெற்றி பெறும் என்ற நம்பிக்கை இருக்கிறது. இதுவரை யாழ்ப்பாணத்து நாவல் ஆசிரியர்கள் தொடாத புதிய கருவை மையமாக வைத்து நாவல் நடத்திச் செல்லப்பட்டிருக்கிறது என்பதை நாவலை வாசிக்கும் போது நீங்கள் புரிந்து கொள்வீர்கள்.

''நெஞ்செல்லாம் நினைவு தான்'' நாவலை மிக அழகாக நூலுருவாக்கித் தந்த ஷாமளி அச்சகத்தினரும் அட்டைப்படத்தை சிறந்த முறையில் வரைந்த கே. ரவி அவர்களும் இந்த நாவலும் நூல்வடிவம் பெற உதவியிருக்கிறார்கள் இவர்களுக்கு எங்கள் மனம் நிறைந்த நன்றிகள்.

இனிய வாசகர்களே தாயில்லாமல் சேயில்லை. நீங்கள் இல்லாமல் எழுத்தாளர் இல்லை. இந்த நாவலையும் வாசித்துவிட்டு உங்கள் கருத்துக்களை எங்களுக்கு எழுதுங்கள் நன்றியோடு வரவேற்கிறோம்.

என்றும் அன்புடன்
**நிலாமலர் பதிப்பகம்**
**கொக்குவில்**

எல்லோரிடத்தும் அன்புடனும் பண்புடனும் பழகுவோம் சின்னச்சின்னக் குறைகளையும் பிழைகளையும் பெரிது படுத்தாமல் உறவுகளைப் பிரியாதிருப்போம்.

## வாசகர்களுக்கு!

என் நேசமுள்ள வணக்கங்கள். என் முதலாவது ''நெஞ்செல்லாம் நினைவு தான்'' என்ற நாவலுக்கு நீங்கள் காட்டிய ஆதரவும் மகிழ்ச்சியான விமரிசனமும் என்னை மகிழச் செய்தது நன்றி. தென்னிந்திய நாவல்களை வாசித்துப் பழக்கப்பட்டுப் போன யாழ்ப்பாண வாசகர்கள், அவர்கள் பழக்கப்பட்ட அதே பாணியில் நாவலை நடத்திச் சென்றது தான் நாவலின் தனிச்சிறப்பாக அமைந்து நாவல் வரவேற்பைப் பெறக் காரணமாக இருந்தது என்று பலர் கடிதம் மூலமும் நேரிலும் தெரியப் படுத்தியிருந்தார்கள். உங்களுடைய கருத்தை நானும் ஏற்றுக் கொள்கிறேன்.

சில மணித்துளிகள் உங்கள் இதயத்தைத் தன்னோடு தற்காலிகமாக ஐக்கியப்படுத்திவிட்டுமுற்றும் என்ற சொல்லைப் பார்க்கும்போது நிறைவான மனஉணர்வை உங்களுக்குத் தந்திருந்தால் அந்த நாவல் தன் இலக்கை அடைந்து விட்டது என்று கூறலாம்.

''நெஞ்செல்லாம் நினைவு தான்'' நாவலைத் தொடர்ந்து ''அன்று வந்ததும் இதேநிலா'' என்ற இந்த நாவலும் தன் இலக்கை அடையும் என்ற நம்பிக்கையோடு உங்கள் கைகளில் சேர்ந்திருக்கிறது உங்கள் கருத்துக்களை நேரிலோ அல்லது கடிதம் மூலமோ தெரியப்படுத்துவீர்கள் என்ற நம்பிக்கை யோடு ................................ நாவல் உங்களை அழைக்கிறது. படியுங்கள்.

என்றும் நேசமுடன்
**குகனேந்திரன்**
நிலாமலர்
கொக்குவில்

''யாழ்ப்பாணம் எங்கள் தாய்மண் இதை அழகாக வைத்திருப்பது எங்கள் ஒவ்வொரு வருடைய மறுக்கமுடியாத கடமை அலட்சியப்படுத்தாமல் கடமையைச் செய்வோம்.''

# அன்று வந்ததும் இதே நிலா

நீலவானில் பஞ்சு போன்ற மேகங்கள் மெல்ல நீந்திக்கொண்டிருந்தன. ''பச்சைப் பட்டாடையால் போர்த்துக் கொண்டிருக்கும் யாழ்ப்பாணம் எவ்வளவு அழகாக இருக்கிறது பார்த்தாயா?'' என்று அதிகாலையில் தன்னைக் கடந்து போகும் வெண் முகில்களைப் பார்த்துப் பால்நிலா கேட்டது. இரவில் கள்ளனைப் போல் வந்து பகலில் ஒளிந்து கொள்ளும் உனக்கு எங்கே தெரியப்போகிறது அந்தப் பச்சைப்பட்டாடைக்குக் கீழே எத்தனை ஆயிரம் ஆயிரம் கண்ணீர்க் கதைகள் தினமும் நடந்து கொண்டிருக்கின்றன என்பது.

இயற்கை அழிவிலும் பார்க்க மனிதன் தனக்குத் தானே நடத்தும் அழிவுகள் தான் கொடுமையானது.

போர் அரக்கன் தன் அகன்ற கால்களை ஆழமாகவே யாழ்ப்பாணத்தில் பதித்திருப்பது உனக்குத் தெரியவில்லையா? அழிவுகளிலும் இன்பம் காணும் வக்கிர மனம் படைத்த மனிதர்கள் இருக்கும்வரை இந்த அவனி அழுது கொண்டே தான் இருக்கும்;

அழுகுரல்கள் தொடர்ந்துகொண்டு தான் இருக்கும்.

அடுத்தவனும் என்னைப்போல் மனிதன் தான்; அவனுக்கும் என்னைப்போல் வாழும் உரிமை இருக்கிறது மறுப்பதற்கு எனக்கு உரிமை இல்லை என்று ஒவ்வொரு மனிதனும் சிந்திக்கும்வரை மானிடத்தின்மரணஓலம் மண்ணை விட்டு ஓயப்போவதில்லை!

அன்பைத்தான் விதைத்தான் இந்த அவனியெல்லாம் அந்தப் போதிமரத்துச் சித்தன். கண்மணிகளை செம்மணியில் புதைக்கச் சொல்லியா புத்தன் போதனை செய்தான்?

புலம் பெயரவைத்தவர்களே புரியவில்லை எங்களுக்கு. மானிடத்தின் மரண அழுகுரல் கேட்கவில்லையா உங்களுக்கு. வரலாற்றின் காலடிச்சுவடுகளைத் திரும்பிப் பாருங்கள் அது சொல்லும் கதை கதையாக. பந்தை விட்டு எறியாதீர்கள் சுவரின் மேலே பட்டுத் திரும்பி வரும் உங்களிடமே எறிந்த அதே வேகத்துடன். பாவங்களைச் செய்யாதீர்கள் உங்கள் பரம்பரையே தீர்ப்புக்களைச் சுமக்கவேண்டி இருக்கும்.

யாழ்ப்பாணம் அன்னையே எத்தனை அந்நியப் படையெடுப்புகளைச் சந்தித்து விட்டாய். ஒல்லாந்தர், போர்த்துக்கீசர், வெள்ளையர், இந்தியர்......... என்று அத்தனையையும் கடந்து நீ நிமிர்ந்துதான் நின்றாய். ஐயோ என்ன செய்வது என்று நீ கை பிசைந்து நிற்கவில்லை; துணிந்துதான் நின்றாய்.

இந்த வையகமே வியக்கும்படி காலதேவனின் தீர்ப்புப்படி. மீண்டும் வசந்தங்கள் உன்மேல் வண்ண மலர்களைத் தூவும்; தென்றலும் இன்பகீதம் பாடும் அந்த வானமே உன்னை வாழ்த்தும். இன்ப வானில் அன்புச்சிறகுகளை விரித்து.........................

''வித்யா''

தாய் கமலாவின் குரல் கண்களைத் தடுத்து நிறுத்தியது.

''சீ வாசிக்கக் கூட விடமாட்டாங்க இந்த வீட்டில்.

என்னம்மா?''

பதில் இல்லாததால் மீண்டும் வாசிக்க முயற்சித்தாள்.

''அம்மா சீனிபோத்தலை யார் திறந்தது?'' பாமினி கேட்டாள்.

''நான் இல்லை ஏன்?''

''போத்தல் நிறையக் கட்டெறும்பு எப்படி கோப்பி போடுவது?''

''எங்கே'' என்று கேட்டபடி கமலா சமையல் அறைக்குள் வந்தாள்.

போத்தலைப் பார்த்ததும் விர் என்று கோபம் வந்தது.

''வித்யா வித்யா''

''என்னம்மா?''

''வாடி இங்கே''

எழுந்து வந்தாள்.

''சீனிப்போத்தலை நீ தானே திறந்தது.''

''ஓம்''..................

''ஏன்டி மூடிவைக்கவில்லை? போத்தல் நிறைய எறும்பு; வாடி இங்கே! கொண்டுபோய் எறும்பை எல்லாம் வெளியே தட்டி விட்டுக் கொண்டா.''

''அவள் தட்டிக் கொண்டு வருவதற்குள் நேரம் போய்விடும் நான் போகிறேன்.''

''அக்கா கொஞ்சம் போறேன் ஒருநிமிசத்தில் ....................''

''நீயே வைச்சுக்குடி''

கமலா, வித்யாவை வாயில் அகப்பட்ட வார்த்தைகளால் ஏசினாள்.

வித்யாவுக்கு அழுகையே வந்து விட்டது. இந்த வீட்டில் இருப்பதிலும் பார்க்கச் செத்துத் தொலையலாம் என்று மனசுக்குள் குமுறினாள்.

எறும்புகளை வெளியே தட்டிவிட்டு சீனிப்போத்தலை சமையல் அறைக்குள் கொண்டு வந்து வைத்தாள். நேரம் அவளை விரட்ட அவசரமாகக்குளித்து விட்டு கல்லூரிக்குப் புறப்பட்டாள்.

''சாப்பிட்டியாடி?''

தாயின் கேள்வி காதில் விழுந்தும் பதில் சொல்

லாமல் நடந்தாள் வெறுப்பும் ,விரக்தியும்மேலோங்கி மனசை அழுத்தியது. ஏன் இந்த வீட்டில் பிறந் தோம் சாப்பாட்டுக்கு கஷ்டப்படும் ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்திருந்தால் நிம்மதியாவது இருந்தி ருக்கும்; நடுத்தரக்குடும்பத்தில்பிறப்பதே தொல்லை அதிலும் பெண்ணாய்ப் பிறப்பது அதைவிடத் துன் பம்.

"வித்யா கைவிளக்கை அணைத்துவிட்டுப்படு! மண்ணெண்ணை விற்கின்ற விலையில் உனக்கு கண் கடைதெரியவில்லை.''

ஒளியை மேலும் குறைத்துவிட்டுப் படுத்தாள்.

''ஏன்டி உனக்கு நான் சொன்னது விளங்க வில்லையா?'' அறைக்குள் வந்தாள் கமலா.

''அம்மா விளக்கை அணைக்காதீங்க''

அறைக்குள் இருள் பரவியது.

''பயமா இருக்குதம்மா''

''என்ன பயம் நாங்கள் எல்லாம் இருக்கிறோம் போர்வையை இழுத்து போர்த்திக் கொண்டு தூங்கு.''

''கழுத்தில் சுருக்கைப் போட்டுக் கொண்டு தூங்கினால் ஒரே அடியாய் போய்விடலாம் நிம்மதி என்று சொல்ல வேண்டும் போல் இருந்தது.

சின்ன வயசில் இருந்தே அவளுடன் தாய் இசை வாக நடப்பதே இல்லை. அடிக்கடி கண்டிப்பும் ஏச்

சுக்களும் சாதாரணம். அதனால் தாயின் மேல் அவளுக்கு இருக்கவேண்டிய அன்பும்பாசமும் ரொம்ப ரொம்பக் குறைவு.

அக்கா சாந்தி மீதும் பாமினி மீதும் இருக்கின்ற அன்பும் பாசமும் தன்மேல் அம்மாவுக்கு ஏன் இல்லாமல் போச்சு என்று அடிக்கடி எண்ணி வேதனைப் படுவாள் ஆரம்பகாலங்களில். வயசு ஏற நாளா வட்டத்தில் நான் கொடுத்து வைச்சது அவ்வளவு தான் என்று மனசை ஆறுதல் படுத்திக்கொண்டாள். ஆனாலும் அந்த வேதனை நெஞ்சை விட்டு ஒரே அடியாக விலகவில்லை. சாந்தியும் பாமினியும் பல்கலைக்கழகத்துக்கு எடுபட்டது எல்லை இல்லாத மகிழ்ச்சி அம்மாவுக்கு. நான் பல்கலைக்கழகத்துக்கு தெரிவாவேன் என்ற நம்பிக்கை அம்மாவுக்குத் துளி கூட இல்லை. என்படிப்புக்கு செலவழிப்பது வீண் தண்டம் என்று அம்மா நினைக்கிறாள். என்ன செய்வது? நானும் எவ்வளவோ முயற்சி செய்கிறேன் ஆனால் பல்கலைக் கழகத்துக்கு போகக்கூடியதாக பரீட்சையில் சித்தி எய்துவேன் என்ற நம்பிக்கை எனக்கும் இல்லை. சரி பகலில்தான் அம்மா சகோதரங்கள் பிரச்சினை என்றால் இரவில் கனவில் வரும் இளைஞன் யார் என்றே தெரியவில்லை.

தை பதிநாலாந் திகதியா? இல்லை பதினைந்தாம் திகதிதான் அந்த இளைஞன் உருவம் முதன் முதலில் அவள் கனவில் தோன்றியது. கனவில் ரொம்ப இன்பமாகவே இருந்தது. கனவுதானே என்று அமைதியாக மறந்து விட்டாள். ஆனால்

தினமும் அதே இளைஞன் கனவில் வரத் தொடங்கி னான். மனங்களின் எண்ணங்கள், விருப்பங்கள், இச்சைகள் தான் இரவில் மனம் அமைதியாகத் தூங் கும்போது கனவுகளாக வெளிப்படுகின்றன என்று உளவியல் டாக்டர் வில்லியம் ஹென்ஸ்மன் ஒரு நூலில் எழுதியதை படித்திருந்ததினால் பருவவயசில் அதிலும் ரீன்ஏஜ் வயசில் வருகின்ற எதிர்பால் உணர்ச்சியின் வெளிப்பாடாக இருக்கலாம் என்று பெரிதுபடுத்தாமல் இருந்தாள்.

ஆனால் தொடர்ச்சியாக ஒரே கனவு நிச்சயம் வராதுஎன்று வில்லியம் ஹென்ஸ்மன் எழுதியிருந்தது ஞாபகத்துக்கு வந்ததும் யோசிக்கத் தொடங்கினாள் வித்யா. கனவில் வரும் அந்த இளைஞன் தெருவில் போகும்போது தென்படுகிறானா என்று பார்க்கத் தொடங்கினாள். ஊகும் அந்த இளைஞன் உருவிலே யாரும் தென்படவில்லை. அவள் பார்வையில். வெளியே யாரிடமாவது சொல்லிக் காரணம் கேட் கலாமா என்றால் தப்பாக எடுத்து விடுவார்களோ என்று பயமாக இருந்தது. சில நிமிடங்களில் தூங் கிப் போனாள் அதே இளைஞனின் உருவம். சிறிது நேரம் செல்ல உருவம் மறைந்து ஓர் ஆலமரமும், தாமரைக்குளமும் தெளிவாகத் தெரிந்தது. சிறிது நேரத்தில் அதுவும் மறையத் தூங்கினாள் அமைதி யாக.

விடிந்ததும் இரவில் கனவில் வந்த ஆலமர மும் தாமரைக்குளமும் எங்கேயோ பார்த்ததுபோல்

இருந்தது. நல்ல பரீட்சயமான இடமாகவும் தோன்றியது. எங்கே பார்த்தேன் எப்போ பார்த்தேன் என்று மீண்டும் மீண்டும் ஞாபகப்படுத்த முயற்சித்தாள்; ஞாபகம் வரவில்லை.

''ஏன்டி விடியாமூஞ்சி! எழுந்து போய் முகத்தை அலம்பேன். மாடு மாதிரி தூங்கிறது விடிஞ்ச பிறகும் எழுந்திருக்கிறதில்லை'' கமலா ஏசினாள்.

எழுந்து கிணற்றடிக்குப் போனாள்.

கிணற்றுக்கட்டில் இருந்து கொண்டு தனக்குத் தெரிந்த கோயில்களை கனவில் வந்த கோயிலுடன் ஒப்பிட்டுப் பார்த்தாள் எதுவுமே நன்றாகப் பொருந்தவில்லை.

''ஏன்டி ஸ்கூலுக்குப் போகவில்லையா?''

அவசரமாகக் குளித்து முடித்தாள்.

''வித்யா! இன்றுஉன்முகம் களையாகஇல்லை''

''சாப்பிடவில்லையா?''

''பாண் சாப்பிட்டேன்''

''அப்போ ஏன் சோர்வாக இருக்கிறாய்?''

''ரீன்ஏஜ் பெண் இப்படியா இருப்பாள். கலகலப்பாக இருக்கணும் அதுதான் ரீன் ஏஜ்ஜுக்கே அழகு.''

''மனசில அமைதி இருந்தால்தான் முகம்அதைப் பிரதிபலிக்கும் மதுரா.''

"என்ன வசனமா? எந்தப் படத்தில் வருகுது?"

"உனக்கென்ன அதிஸ்டத்தோடு பிறந்திருக்கிறாய்! எதுவும் கொடுத்து வைச்சுப் பிறக்கனும்"

"ஏய் என்னடி பேச்சே ஒருமாதிரியா இருக்கு? என்னடி ஆச்சு. வீட்டில் ஏதாவது புதிய பிரச்சினையா?"

இவளிடம் சொல்லிக் காரணம் கேட்போமா?

"என்னடி யோசிக்கிறாய்?"

"பிறகு சொல்கிறேன்."

"பிறகு என்ன பிறகு இப்பவே சொல்லு?"

"சொல்ல் ஒருமாதிரியாக இருக்கு."

எழுந்து கொண்டாள் மதுரா.

"வாடி"

"எங்கே?"

"எழுந்து வாயேன் சொல்கிறேன்."

எழுந்து அவள் பின்னே சென்றாள்.

"இரு இப்படி."

"சரி இப்ப சொல்லு வழமையான அம்மா என் மேல் அன்பு இல்லை அக்காமாரில் தான் அன்பு, பாசம் என்னோடு ஏனோ தானோ என்று நடக்கிறா அதுதானே வித்யா. சில தாய்மாருக்கு எல்லாப் பிள்ளைகளிலும் பார்க்க ஒன்றிலோ இரண்டிலோ அன்பு அதிகமாக இருப்பது இயல்பு தான்.

இதற்குப் போய் ஏன்டி மனசைப்போட்டு அலட்டிக் கிறாய்! உன் கவனத்தை வேறு விஷயங்களில் செலுத்து; இது ஒரு பெரிய பிரச்சினையாகவே தோன்றாது. எல்லாத்துக்கும் மனசுதான்டி காரணம்!''

''அம்மா விசயம் பழகிப் போச்சு. இது வேறு விசயம்.''

''வேறு விஷயமா? சரி என்ன சொல்லு''

''வேண்டாம் மதுரா.''

''ஐயோ! நீ ஒருஅலுப்புக் கேஸடி! பட்டென்று சொல்லடி மணி அடிக்கப் போகுது.''

''யாருக்கும் சொல்லக்கூடாது.''

''இத்தனை காலம் என்கூடப் பழகுகிறாய். என்னைப் புரிஞ்சு கொண்டது இவ்வளவு தானா?''

''இல்லை மதுரா வந்து.........................''

''என்மேல் உனக்கு நம்பிக்கை இருந்தால் சொல்லு இல்லாவிட்டால் வேண்டாம்.''

''ஏன் கோவிச்சுக்கிறாய் மதுரா?''

''பின்னே என்னடி! வகுப்பிலேயே எனக்குப் பிடிச்சவள் நீதான். ஒன்று அமைதியான சுபாவம் மற்றது ஆடம்பரம் இல்லாத இயற்கையான அழகு.''

''போடி! நான் அவ்வளவு அழகாடி?''

''உன் அழகு உனக்குத் தெரியாது மற்றவங்

களுக்குத்தான் தெரியும். அதைவிடு விசயத்தைச் சொல்லு.''

''கொஞ்ச நாளா ஓர் இளைஞன் கனவில் வாறான்.''

''ஆரம்பிச்சிட்டுதா? சரி நீ உருப்பட்டால் போலத்தான்.''

''அவசரப்படாமல் கேள். இது காதலோ கத் தரிக்காயோ அல்ல.''

''என்னை நம்பச் சொல்கிறாயா?''

''மதுரா இது விளையாட்டல்ல சீரியஸ்ஸாகத் தான் சொல்கிறேன்.''

''ஸாரி வித்யா! விளையாட்டாகச் சொல்கி றாய் என்று நினைத்தேன்.''

''இரவு 12 மணிக்கு மேல்தான் கனவு வரும் ஆரம் பத்தில் ஒன்று இரண்டு நாள்கள் தெளிவில்லாமல் இருந்த உருவம் மூன்றாம் நாள் பளிச்சென்று தெளி வாய் தெரிஞ்சுது. இப்ப ஒரு கோயில் தெரியுது. ஒரு ஆலமரமும், தாமரைக்குளமும் தெரியுது ஆல மரமும் பரந்து விரிந்து விழுதுகள் விட்டுத் தெரிஞ் சுது. ஆலமரத்தின் பின்னணியில் அதே இளைஞன் மிகத் தெளிவாகத் தெரிஞ்சுது.''

''ஏதாவது அவன் பேசினானா?''

''இல்லை எதுவுமே பேசவில்லை.''

''எனக்கு ஒரே குழப்பமாக இருக்கு மதுரா.''

மறுபடியும் மறுபடியும் ஒரே இளைஞன் முகம் ஏன் தெரியணும்? அதே ஆலமரம் அதே தாமரைக் குளம் அதே கோயில்!''

''இந்த மூன்றுக்கும் ஏதாவது தொடர்புகள் இருக்குமோ?''

''அந்தக் கோயிலை எங்கேயாவது பார்த்திருக்கிறாயா?''

''இல்லையே!''

''ஆலமரம்?''

''அதையும் இல்லை''

''தாமரைக்குளம்?''

''இல்லை மதுரா. எவ்வளவோ யோசித்துப் பார்த்தேன். அதே மாதிரி கோயிலை ஒருநாள்கூட நான் பார்த்ததில்லை.''

ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தனர்.

''ஆனால் அந்த இளைஞன் ரொம்பப் பரிட்சையமானவன் போல இருக்கு. ஆனால் எங்கே அவனைச் சந்தித்தேன் பழகினேன் என்று தான் தெரியவில்லை.''

''வித்யா! யாரையாவது விரும்புகிறாயா?''

''இல்லை மதுரா''

''என்னிடம் ஏன்டி மறைக்கிறாய் உண்மையைச் சொல்லு சத்தியமா வெளியே யாருக்கும் சொல்ல மாட்டேன் முடிந்தால் நான் உதவி செய்கிறேன்.''

''சத்தியமா அப்படி ஒன்றுமில்லை மதுரா.''

''ம் ஆச்சரியமாக இருக்கே! எனக்கும் புரியவில்லை யாரையாவது கேட்டுப் பார்ப்போமா?''

''ஐயோ வேண்டாம் மதுரா பேய் பிசாசு பிடித்து விட்டது என்று கோயில் குளத்துக்கு கூட்டிக் கொண்டு போயிடுவாங்க. பேய் ஓட்டுறது, திருநீறு போடுகிறது, மந்திரிச்ச தண்ணீர் தெளிக்கிறது என்று என்னவெல்லாமோ செய்யப் பார்ப்பாங்க வீண் தொல்லை.''

''அப்ப என்ன செய்யப் போகிறாய்?''

பொறுத்துப் பார்ப்போம் ஏதோ ஒரு முடிவு தெரியவரும் தானே!''

''வித்யா இதற்கு ஒரு தீர்வு காணவேண்டும் இல்லாவிட்டால் வேறு ஏதாவது பிரச்சனைக்குள் அகப்பட்டு விடுவாய்.''

''உண்மைதான் கொஞ்சநாள் பொறுத்துப் பார்ப்போம் நீ யாரிடமும் சொல்லிவிடாதே.''

''நான் சொல்ல மாட்டேன். ஐந்து நிமிசம் தான் இருக்கு மணி அடிக்க வா போகலாம். எதற்கும் அவதானமாக இரு வித்யா.''

''அட கதைத்துக் கொண்டிருந்ததில் ஒன்றைச் சொல்ல மறந்திட்டேன் 19ம் திகதி நாங்க எல்லோரும் நயினாதீவுக்குப் போகிறோம். நீயும் எங்ககூட வருகிறாயா?''

''எனக்கும் வர ஆசைதான். என் மேசையில் நாகபூசணி அம்மன் படம்தான் இருக்கு. தினமும் பார்க்கும் போதெல்லாம் நயினாதீவுக்குப் போய் அம்பாளை கும்பிட வேண்டும் என்று தோன்றும். அம்மா நான் போகச் சம்மதிக்கமாட்டா.''

''அப்போ நீ வரமாட்டாயா?''

''அம்மாவைக் கேட்டுப் பார்க்கிறேன் சம்மதித்தால் வருகிறேன்.''

''ஒருமுறை கூட நயினாதீவுக்கு போனதே இல்லை.''

''சரி எங்ககூட வா பார்த்துவிட்டு வரலாம்''

''அங்கே தங்க இடம் இருக்கா?''

''அதெல்லாம் அப்பா பார்த்துக் கொள்வார். நயினாதீவைச் சேர்ந்த ஒருவர் அப்பாகூட வேலை செய்கிறார். அவர் தான் வரச்சொல்கிறார். கடல் பிரயாணம் நல்லா இருக்கும் கட்டாயம் வா.''

''மதுரா! அம்மாவைப்பற்றி எத்தனையோ முறை சொல்லிவிட்டேன் நீதான் புரிஞ்சுக்கிறாய் இல்லை. நான் ஏதுகேட்டாலும் உடனே சம்மதிக்க மாட்டா சாந்தியோ, பாமினியோ கேட்டால் மறு

பேச்சே சொல்லமாட்டா. ஆசைப்பட்டு எதுகேட்டாலும்தரமாட்டா. ஆரம்பத்தில் சண்டைபிடிப்பேன் கிடைக்கப்போவதில்லை ஏன் சண்டை பிடிப்பான்என்று இப்போ எதையுமே கேட்பதில்லை. ஒரு தடவை கேட்ப்பேன். அதற்குமேல் கேட்க மாட்டேன்.''

''வித்யா உனக்கு ஞானிகளின் மனசு. ஆசைகளைக் குறைத்துக் கொள்வதே ஒரு முதிர்ச்சியான மனம் தான் எல்லோராலும் அப்படி இருக்க முடியாது. நிச்சயமாக உன்னைப்போல் இருக்கமுடியாது என்னால். சத்தம் போட்டு, சாப்பிடாமல் இருந்தாவது விரும்பியதை அடைஞ்சிடுவேன்.''

மேசைவிளக்குச் சிமினியைத் துடைத்துக் கொண்டிருக்கும்போது கைதவறி விழுந்து உடைந்தது.

''எதையடி உடைத்தாய்'' என்று கேட்டுக் கொண்டு கமலா வந்தாள்.

''ஐயோ ஐயோ வெள்ளிக்கிழமையும் அதுவுமாய் விளக்கு சிமினியை உடைச்சிட்டியேடி கழுதை!''

''அம்மா கைதவறி விழுந்து...............விட்டது''

''கண்ணாடி என்றால் கவனமாக இருக்க வேண்டாமா?''

''ஏதோ நல்லதுக்கல்ல இது.''

''அதற்கு ஏனம்மா கத்துகிறாய் நான்தான் துலைந்து போகப் போகிறேன் பிறகு நீங்கள் எல்லோரும் நிம்மதியாய் இருங்க.'' ''சொல்லிவிட்டு கட்டிலில் பொத்தென விழுந்தாள்

கடவுளே என்னை ஏன் படைத்தாய் என்று அவள் மனம் ஓலமிட்டது.

''உடைத்திட்டுப் போய் படுத்திட்டாள் நான் படிப்பதில்லையா? என்று சத்தமாகக் கேட்டாள் பாமினி.

''எழுந்திரடி போய் ராசா கடையில் சிமினி வாங்கிவா.''

உடுப்பை மாத்திக் கொண்டுபோய் சிமினி வாங்கி வந்தாள். சலிப்பும் விரக்தியும் மனதை வாட்டியது படுக்கையை நாடியது அமைதியைத் தேடி.

நீலக்கடல் அலைகள் துள்ளித் துள்ளி வந்து கொண்டிருந்தன. கரையில் தள்ளாடிக் கொண்டிருந்த வள்ளத்தில் ஏறினாள் வித்யா. நீர்த் திவலைகள் வந்து வள்ளத்தில் இருப்பவர்களின் மேல்மோதியது. அதுவும் ஒரு ஆனந்தம்தான். வள்ளம் இறங்கு துறையை அடைந்தது. ஒவ்வொருவராக இறங்கினார்கள். வித்யா இறங்கப் பயந்தாள் அந்த இளைஞன் இறங்குதுறையில் நின்று அவளை நோக்கி கையை நீட்டினான் பிடித்துக் கொண்டாள் நம்பிக்கையுடன். துறையில் இறங்கியதும் கையை விடுவித்

துக் கொண்டாள். எதிரே தெரிந்த கோயிலை நோக்கி நடந்தாள். பத்துஅடி நடந்தவள் திரும்பிப் பார்த்தாள். அந்த இளைஞன் அவளையே பார்த்துக் கொண்டே நின்றான்.

சட்டென்று விழித்துக் கொண்டாள் என்ன இன்று வழமைக்கு மாறாக வித்தியாசமான கனவு. யார் இந்த இளைஞன்? உயிரோடு இந்த இளைஞன் வந்து என்னைத் தன்னோடு கூட்டிக் கொண்டு போனால் நல்லா இருக்கும். இந்த வீட்டில் இருந்து துலைஞ்சு போகலாம்.

சிரித்துக் கொண்டாள்.

கனவுகள் எல்லாம் பலிக்குமென்றால் யாழ்ப்பாணத்தில் தொண்ணூறு வீதமான பெண்களுக்குத் திருமணம் நடந்துவிடும். கனவுகளுடன் வாழும் பெண்கள்தான் எத்தனை இந்த மண்ணில். கனவுகளிலும் ஒருசுகம் இருக்கு. கனவில் வருபவன் கொஞ்சுவான் பதிலுக்கு கொஞ்சலாம் இன்பமாகத் தான் இருக்கும் நிஜவாழ்க்கையில் பெரும்பாலான பெண்கள் ஏச்சும் பேச்சும் சலிப்பும் வெறுப்புடனேயே வாழ்கிறார்கள். பக்கத்து வீடுகளில் தான் தினமும் நடக்கிறதே. அதற்காக எந்தப் பெண்ணாவது கல்யாணம் செய்து கொள்ள மறுக்கிறார்களா? இல்லையே. ஏதோ ஒருகாரணத்தால் திருமணப் பந்தத்தை ஏற்றுக்கொள்கிறார்கள்.

எப்போது மறுபடி தூங்கினாளோ தாயின் அதட்டல் கேட்டு எழுந்தாள். விடிந்திருந்தது.

கல்லூரிக்கு ஆயத்தம் செய்துகொண்டு தாயி டம் வந்தாள்.

''அம்மா பள்ளிக்கூடத்தில் என்கூடப் படிக்கும் ஒரு பிள்ளை குடும்பத்தோடு நயினாதீவுக்குப் போகி றாள் நானும் அவள்கூடப் போய் வரட்டுமா?''

''சரி போய் வா.''

அவள் காதுகளையே நம்பமுடியவில்லை. திருப் தியோடு கல்லூரிக்குப் புறப்பட்டாள்.

''வீட்டில் கேட்டாயா?''

''அம்மா சம்மதிச்சிட்டா.''

''அப்போ என்கூட வாராய்.''

''ம்''

''திங்கட்கிழமை காலை உங்க வீட்டுக்கு காரில் வருகிறோம். நீ ஆயத்தமாக இரு.''

''ம். மதுரா ராத்திரி ஒரு வித்தியாசமான கனவு வள்ளத்தில் பிரயாணம் செய்கிறேன் இறங்கு துறையை வள்ளம் அடைந்ததும் அங்கே நின்ற அதே இளைஞன் என்கையைப் பிடித்து கரையில் இறக்கி விடுகிறான் எதிரே ஒரு கோயில் தெரியுது அதை நோக்கி நடக்கிறேன் கொஞ்சத்தூரம் போன தும் திரும்பிப் பார்க்கிறேன் அந்த இளைஞன் என் னையே பார்த்துக்கொண்டு நிற்கிறான்.''

''வித்யா நீ படித்த ஏதாவது கதைப்புத்தகத்தில் இப்படிக் காட்சி வருகுதா?''

''இப்படியான காட்சி வருகின்ற எந்தக்கதைப் புத்தகமும் படித்ததாக எனக்கு ஞாபகம் இல்லை.''

''விதயா! உனக்கு மட்டும்தான் இப்படிக்காட்சிகள் வருகுது எனக்கு ஏன் வருகுதில்லை. வந்தால் எவ்வளவு நல்லாக இருக்கும்?''

''வந்தால் என்ன செய்வாய்?''

''ம் வந்தால் அவனைக் கட்டிப்பிடிச்சு ஆசை தீர கொஞ்சி............''

''கொஞ்சி?''

''அதற்கு பிறகு சொன்னால் நல்லா இருக்காது.''

''சீ போடி'' என்றாள் வித்யா நாணச் சிரிப்புடன்.

வித்யா இளவயசில் பெண்கள் ஆண்களை விரும்புவதும் ஆண்கள் பெண்களை விரும்புவதும் இயற்கையான உணர்ச்சிகளின் உள்மன வெளிப்பாடு இதில் தப்பே இல்லை. நீ உன் கனவில் வரும் இளைஞனை ஒருநாளாவது கட்டிப்பிடிச்சு கொஞ்சல்லையா?''

''இல்லை''

''சரி அவனாவது உன்னைக் கட்டிப்பிடிச்சு கொஞ்சலையா?''

''ஊகூம்''

''போடி என்ன கனவு காண்கிறாய், கிக் வருகின்ற மாதிரி காணாத கனவெல்லாம் ஒரு கனவா?''

''ஒரு பக்கம் பத்துப் பதினைந்து பெட்டைகள் ஓடணும் அடுத்தபக்கம் பத்துப் பதினைந்து பெடியங்கள் ஓடணும் நடுவே கதாநாயகனும் கதாநாயகியும் அரைகுறை ஆடைகளுடன் கட்டிப்பிடிச்சுப் புரளணும்.''

''இந்திய சினிமா மாதிரி இருக்கே.''

''கொறக்ட் கனவு கண்டால் அப்படித்தான் கனவு காணணும் இல்லாவிட்டால் கனவே வர வேண்டாம்.''

''மதுரா சினிமா வேறு வாழ்க்கை வேறு இரண்டையும் ஒன்றாய் போட்டுக் குழப்பாதே.''

''நிறுத்தடி பாட்டி போல பேசாதே. இளமைக் கால கனவுகளுக்கு வரம்பு கட்டக்கூடாது. இளமைக் காலம்தான் வசந்த காலம் வசந்த காலக் கனவுகள் சுகமான ஆனந்த ராகம் போல. அதை அனுபவிச்சிடணும் வயசு கடந்த பிறகு திரும்பி வராது அந்த அந்த வயசில் அந்த அந்தக் கனவுகளைக் காணணும். வித்யா கனவு தானே, அடுத்தவர் யாருக்குமே எந்த இடைஞ்சலையும் செய்யாது.

அவர் அவர் மனசுக்குள்ளே அவர் அவருக்கு மட்டும் சொந்தமாக.''

''என்னடி பார்க்கிறாய்?''

''அலம்புகிறேன் என்றா? இல்லை வாழ்க்கை வேறு கனவு வேறு என்றா?''

வித்யா! நிஜ வாழ்க்கையில் எவன் சந்தோஷமாக இருக்கிறான் உள்மன வெளிப்புற அழுத்தங்களில் இருந்து விடுபடுவதாக ஒவ்வொருவரும் ஒன்றுக்குப் பின்னால் அலைகிறார்கள் சினிமா பார்ப்பது, பாட்டுக் கேட்பது, சிகரட் பிடிப்பது, மது குடிப்பது, கதைப்புத்தகம் வாசிப்பது, கோயிலுக்குப் போவது, ஏன் பெண்கள் அடுத்தவர் பிரச்சனையை அலசுவது, இது எல்லாம் எதுக்கென்று நினைக்கிறாய் உள்வெளி அழுத்தங்களில் இருந்து கொஞ்ச நேரமாவது இல்லை. தற்காலிகமாவது விடுபடத்தான்டி.''

''சரி விடு உன் பிரச்சனைக்கு ஒரு மனோவியல் டாக்டரைச் சந்தித்து ஆலோசனை கேட்டுப்பார்த்தால் என்ன?''

''வேண்டாம் யாருக்காவது தெரியவந்தால் அவளுக்கு கிஸ்றீரியா என்று கதைகட்டி விடுவாங்க இல்லை அவளுக்கு மூளை ஒருமாதிரி என்று சொல்லித் திரிவாங்க. யாழ்ப்பாணப் பெண்களைப் பற்றி உனக்குத் தெரியாதா?''

''அதுவும் சரி தான்.''

''இப்படிச் செய்து பாரேன்.''

''சொல்லு.''

''இந்தப் பிரச்சனையில் இருந்து எனக்கு நிம்மதி கிடைத்தால் பால் அபிஷேகம் செய்கிறேன் என்று ஏதாவது ஒரு தெய்வத்துக்கு நேர்த்தி வைச்சுப் பாரேன்.''

''சரி வருமா?''

''எல்லாத்துக்கும் நம்பிக்கை வேண்டும் வித்யா.''

''சரி நாகபூசணி அம்பாளிடமே நேர்த்திவைக் கிறேன் சரிதானே,''

ஒரு பேச்சுக்குக் கேட்கிறேன். கனவில் வரும் அதே இளைஞன் நேரில் வந்து தன்னுடன் வரும்படி கேட்டால்..................''

''அடுத்த நிமிஷமே யாழ்ப்பாணத்துக்கு குட் பாய் சொல்லிவிட்டு பறந்திடுவேன்.''

''ஏன்டி அவ்வளவு அழகாகவா இருக்கிறான்?''

''அழகு மட்டுமல்ல அந்த இளைஞனின் மேல் மறக்கமுடியாத ஈடுபாடு ஏற்பட்டுவிட்டது.''

''பார்த்தாயா கனவில் ஒரு அழகான இளை ஞனைக் காண்பதற்கும் அதிஷ்டம் இருக்கணும்.''

திங்கட் கிழமை நாலு மணிக்கே எழுந்துவிட்டாள். பிரயாணத்துக்கான ஏற்பாடுகளை எல்லாம் நேற்றிரவே செய்து வைத்திருந்ததால் அவசரப் படாமல் நிதானமாக குளித்து முடித்து வாசலுக்கு வந்து காத்திருந்தாள். ஒருவிதத் தனிமை உணர்வு அவளைச் சூழ்ந்து கொண்டது. இதுவே அக்கா சாந்தியோ, பவானியாகவோ இருந்தால் அம்மா எழுந்து சாப்பாடு செய்து பார்சல் பண்ணிக்கொடுத் திருப்பா. நேற்றே பாணை வாங்கி சீவல் சீவலாக வெட்டி பார்சல் செய்திருக்கத் தேவையில்லை. கோப்பி கொண்டுபோக சுடுதண்ணீர் போத்தலை சாந்தியும் தரமாட்டேன் என்றாள். பாமினியும் மறுத்துவிட்டாள். எனக்கென்று என்ன இருக்கு? யார் இருக்கிறாங்க? நான் காண்கின்ற கனவுகள் தான் எனக்குச் சொந்தம்.

வாசலில் கார் வந்து நின்றது.

நினைவுகளைத் தள்ளி வைத்துவிட்டு காரை நோக்கி வந்தாள்.

சிரித்த முகத்துடன் காரின் கதவைத் திறந்தாள் மதுரா. அமைதியாக ஏறிக் கொண்டாள்.

''என்ன டல்லா இருக்கே.''

''ஒன்றும் இல்லை.''

''மனசில் வெறுமையும் கவலையும் இருந்தாலும் வெளிப் பார்வைக்கு சிரித்துக் கொண்டிருக்க

வேண்டும்'' என்றாள் மெதுவாக.

''என்னால் போலியாக இருக்கத் தெரியல்ல.''
கார் வேகமாக ஓடியது.

குறிகட்டுவன் இறங்குதுறையை அடைந்ததும் வித்யாவே முதலில் இறங்கினாள்.

காருக்குள் மற்றவர்கள் முன்னால் கேட்கக் கூடாது என்று பேசாமல் இருந்தேன் உன் முகத்தைப் பார்த்ததுமே என்னால் புரிஞ்சுக்க முடியும் சொல்லு வித்யா ஏன் டல்லா இருக்கே?''

''தனிமையை என்னால் தாங்க முடியல்ல மதுரா'' துக்கத்தை தாங்க முடியாமல் விசும்பினாள்.

''என்ன வித்யா இது வந்த இடத்தில்..........''

கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு சற்று விலகிப் போனாள்.

''கண்ணைத் துடை வித்யா யாராவது பார்க்கப் போகிறார்கள்.''

''எனக்கென்று யாருமே இல்லாத மாதிரி ஒரு உணர்வு என்னை வாட்டுது. இன்ப துன்பங்களை பரிமாறக் கூடிய ஒரு இதயம் எனக்கு தேவை மதுரா. அம்மா சகோதரங்கள் சொந்தங்கள் இருந்தும் இல்லாத ஒருநிலை. என்மனசைப் புரிஞ்சுக்க கூடிய ஒரு இதயம் என்னை வெறுக்காத அலட்சியப்படுத்

தாத துன்பப்படும்போது ஆறுதல் சொல்லக்கூடிய ஒரு இதயம் என் உணர்ச்சிகளைப் புரிஞ்சு கொள்ளக் கூடிய................''

''அழாதே வித்யா பிளீஸ், பிளீஸ் யாராவது பார்க்கப் போகிறாங்க. பிளீஸ் வித்யா.''

''நான் இருக்கேன்டி வீட்டில் இருக்கப் பிடிக்கல்லை என்றால் என் வீட்டுக்கு வாடி உன்விருப்பம் போல் இருக்கலாம். நீ எது செய்தாலும் யாரும் எதுவுமே சொல்லமாட்டார்கள் வருகிறாயா.''

''இப்படிக் கேட்டதே போதும். மனசு இலேசா சாப்பிட்ட மாதிரி இருக்கு.''

''அப்பாடி. கொஞ்சம் சிரி பார்க்கலாம்.''

சிரிக்க முயற்சித்தாள்.

''சிரிப்பாடி இது உயிரே இல்லை.''

''மனசில் சந்தோஷம் இருந்தால் தான் சிரிப்பிலும் அது வெளிப்படும்.''

''அதோ பார்! இயற்கை எவ்வளவு அழகாக இருக்கு.''

''உண்மை தான் மதுரா. கரையைத் தேடி வரும் அலைகள் கரையைத் தொட்டுவிட்டு திரும்பிப் போகும் விதத்தைப் பார்த்தால் எப்படித் தோன்றுது உனக்கு.''

''எனக்கு எதுவுமே தோன்றவில்லை. உனக்கு எப்படித் தோன்றுது?''

காதலி கரையில் நிற்பாள் என்ற நம்பிக்கை

யுடனும் எதிர்பார்ப்புடனும் ஆசைகளுடன் கைகளை விரித்துக் கொண்டு ஓடிவரும் காதலன் அவள் கரையில் இல்லை என்று தெரிந்ததும் ஏமாற்றத்துடனும் ஏக்கத்துடனும் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு திரும்பிப் போவதைப் போலத் தெரியவில்லையா உனக்கு.''

''வித்யா!''

''ஏய் வித்யா!''

''ஆங்''

''என்னடி ஆச்சு உனக்கு?''

''ஒன்றுமில்லையே.''

''இல்லை வித்யா உன் பேச்சு வித்தியாசமா இருக்கு.''

கடல் அலைகளில் இருந்து கண்களை விடுவித்து திரும்பிப் பார்த்தாள் மதுராவை.

என்னமோ தெரியவில்லை. அடிக்கடி என்மனம் குழம்பிக் கொண்டே இருக்கு அமைதி இல்லாமல் தவிக்குது எவ்வளவோ முயற்சிக்கிறேன் கட்டுப் படுத்த முடியல்ல மதுரா என்னால் முடியல்ல.''

ஆதரவாக அவள் கையைப் பிடித்தாள்

''வித்யா நான்இருக்கேன்டி எந்தச் சூழ்நிலை யிலும் உனக்கு ஆதரவாக. எந்தத் துன்பத்தி லும் துணையாக.

அவள் புறங்கையால் தன் கண்ணீரைத் துடைத்தாள்.

மதுராவின் இதயம் நெகிழ்ந்தது.

வள்ளங்கள் வருகுது.

திரும்பிப் பார்த்தவள் பட்டென்று எழுந்தாள்

''மதுரா இந்தக் காட்சியை எங்கோ பார்த்திருக்கிறேன்.'' உணர்ச்சியுடன் சொன்னாள்.

''எப்படியடி நீ தான் நயினாதீவுக்கே போனதில்லை என்று சொன்னாயே.''

''போகவில்லைத்தான் ஆனால் இந்தக் காட்சியை நான் பார்த்திருக்கிறேன்.''

''வித்யா நம்பக் கூடியதாக ....................''

மதுரா என்னை நம்பு நான் பார்த்திருக்கிறேன். அவள் உறுதியாகச் சொல்வது வியப்பாக இருந்தது மதுராவுக்கு.

''சரி வா போவோம்'' எல்லோரும் வள்ளத்தை நோக்கிப் போகிறார்கள்.''

பயந்து கொண்டே வள்ளத்தில் ஏறினாள் வித்யா. சீரான வேகத்தில் வள்ளம் நீரைக் கிழித்துக் கொண்டு ஓடியது. கடலில் நுரை நுரையாகப் பின்னோக்கிச் சென்றது. நீர்த் திவலைகள் வள்ளத்

தின் உள்ளே இருப்பவர்கள் மேல் மோதியது.

வள்ளம் இறங்கு துறையை அடைந்ததும் ஒவ்வொருவராக இறங்கினார்கள்.

நேற்றைய இரவுக் கனவு ஞாபகத்துக்கு வந்தது. கரையில் அந்த இளைஞன் கையை நீட்டுவது போன்ற பிரமை.

சிலிர்த்துக் கொண்டாள்.

''கையைப் பிடித்து இறக்க யாரும் இல்லை. நீயாகவே இறங்கணும்.'' என்றாள் மதுரா மெதுவாக.

''எனக்குப் பயமாக இருக்கு முதலில் நீ இறங்கு பிறகு நான் இறங்குகிறேன்.''

''சரி கொஞ்சம் விலகிநில்.

கீழே இறங்கிக் கையை நீட்டினாள் மதுரா.

அவள் கையைப் பிடித்துக் கொண்டு இறங்கினாள்.

நடக்கத் தொடங்கிய மதுரா திரும்பிப் பார்த்தாள்.

திகைத்துப் போய் இறங்கிய இடத்தில் நிற்பதைப் பார்த்ததும் புருவத்தை உயர்த்தினாள்.

என்ன ஆயிற்று இவளுக்கு?

கிட்டே வந்து ''வித்யா'' என்றாள்.

''சுயநினைவு பெற்றவள் போல் யோசனை யோடு நடந்தாள்.''

''என்னடி.''

''ஒன்றுமில்லை!''

''இல்லைச் சொல்லு ஏன் மலைத்துப்போய் நின்றாய்?''

''சொன்னால் நீ எங்கே நம்பப் போகி றாய்?''

''முன்பே நயினாதீவுக்கு வந்திருக்கிறாய் அப் படித்தானே!''

''ம்''

''ஆனால் எப்போ என்று தெரியவில்லை?''

''நான் பொய் சொல்கிறேன் என்று நினைக் கிறாயா மதுரா?''

''இல்லை எனக்குப் பொய் சொல்லி உனக்கு என்ன நன்மை? நீ சொல்வதெல்லாம் விசித்திரமாக இருக்கு.''

கதைத்துக் கொண்டே ஏற்பாடு செய்த வீட் டுக்கு வந்து சேர்ந்தார்கள். வீட்டுக்காரர்கள் அவர் களை அமர்க்களமாக வரவேற்றார்கள். வீட்டில் உள்ள எல்லோருமே ஒவ்வொரு கோணத்தில் நின்று வித்யாவைப் பார்த்தார்கள்.

''இந்தப் பிள்ளை............'' என்று இழுத்தாள் வீட்டுக்கார அம்மா.

''என்கூடப் படிப்பவள். பெயர் வித்யா.''

''இந்தப் பிள்ளையில் ஒரு வித்தியாசமான ''தேஜஸ்'' இருக்கு பிராமணப் பிள்ளையா?''

''இல்லை வெள்ளாம் ஆட்கள். பிறவிச் சைவம்.'' என்றாள் மதுரா.

''எத்தனை பிள்ளைகளைப் பார்த்திருக்கிறேன் எந்தப் பிள்ளைகளிலும் இல்லாத ஒருவித ............... என்னவென்று என்னால் சொல்ல முடியவில்லை. சரி நீபோய் அந்த அறையில் தங்கு பிள்ளை.''

வித்யாவும் மதுராவும் வீட்டுக்கார அம்மா காட்டிய அறைக்குள் போனார்கள்.

''என்னடி வித்யா! வீட்டுக்கார அம்மா உன்னைப்பற்றி அப்படிச் சொல்கிறாங்க.''

''எனக்கும் அதுதான் யோசனையாகஇருக்கு?''

உடுப்பை மாற்றிக் கொண்டு வெளியே மெல்ல நடந்தார்கள். கண்ணுக்கெட்டிய தூரத்தில் கடற்கரை தெரிந்தது. கதைத்துக் கொண்டே நடந்தார்கள்.

''அதோ அந்தப் பெரிய பாறாங் கல்லின் மேல் இருப்போம் வா.''

''வேண்டாம் வித்யா தூரவந்து விட்டோம் ஆட்கள் யாருமே இல்லை.''

''போனதும் திரும்பி வந்து விடுவோம்.''

அந்தக் கல்லை நோக்கி நடந்தார்கள். ஆட்கள் யாருமே இல்லை என்றாயே பெண்கள் கடற்கரையில் சிப்பிசோகி பொறுக்குகிறாாகள்.

பாறாங்கல்லின் மேல்ஏறி அமர்ந்தார்கள். பலர் அவர்களைக் கடந்து போய்க் கொண்டிருந்தார்கள். கீழே இறங்கி அந்தக் கல்லைச் சுற்றிச் சுற்றி வந்தாள் வித்யா.

''என்னடி.''

''ஒன்றுமில்லை சும்மா.''

''உற்று உற்றுப் பார்த்துக் கொண்டே சுற்றினாள். மதுராவும் கீழே இறங்கி அவளைப் பின் தொடர்ந்தாள்.

மதுரா இது எழுத்துக்கள் மாதிரி இல்லை?

தமிழ் எழுத்துகள் தான்.

கிடையாகவும் நிலையாகவும் எழுதி இருக்கு.

பா............ர............தி

நிலையாக வ............ர............த............ன்.

'ர' இரண்டு பெயருக்கும் பொதுவாக இருக்கு. பாரதி, வரதன்.

''யாரோ லவேர்ஸ் எழுதி இருக்கிறாங்க.''

''இந்த இரண்டு பேரையும் ஞாபகம் வைத்துக் கொள் மதுரா. மறந்து விடாதே.''

''யாரோ லவேர்ஸ் அவர்களை உனக்கு எதுக் கடி?''

''யாரோ இல்லை எனக்கு வேண்டியவர்களாக நிச்சயம் இருக்கும். எவ்வளவோ இடங்களும் கற் பாறைகளும் இருக்க இந்தக் கற்பாறையை மட்டும் ஏன் தேடிவந்தேன்?''

''ஏன்?''

''அது தான் எனக்கும் தெரியவில்லை?''

கை மணிக்கூட்டைப் பார்த்தாள்.

''வாடி போகலாம் வீட்டில் அம்மா தேடு வாங்க.''

சாப்பாட்டை முடித்துக்கொண்டு சிறிதுநேரம் ஓய்வெடுத்தார்கள்.

தூங்கிப் போனாள்.

''வித்யா எழுந்திரு மேலைக் கழுவிக்கொண்டு கோயிலுக்குப் போவோம்.''

எதிரே வித்யாவின் குடும்பம் வந்து கொண்டிருந்தது வள்ளத்தில் இருந்து இறங்கி.

''அக்கா, அம்மா, அண்ணா, எல்லோரும் வாறாங்க எதிரே.''

''கதைக்கப் போகிறாயா?''

''இல்லை வா கோயிலுக்குப் போவோம்.''

''நான் நயினாதீவுக்குப் போகிறேன் என்று சொன்னதும் தாங்களும் வருகிறோம் என்று சொல்லாமல் ஏன் இப்போ வாறாங்க?''

''ஏன் இந்தக் குடும்பத்தில் பிறந்தேன்?

''வித்யா ஏன் சலிச்சுக்கிறாய்? ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான கவலை இருக்கும்.''

கோயிலுக்குள் உள்ளே வந்ததும் வித்யா, மதுராவின் கைகளைப் பற்றிக் கொண்டாள்.

''வித்யா? வித்யா? என்ன செய்யுது?''

பக்கத்தில் நின்ற பெண்ணும் மதுராவுமாக அவளைத் தாங்கி வந்து சுவர் ஓரமாக இருத்தினார்கள்.

அவள் தலையை தன் நெஞ்சில் சாத்திக்கொண்டாள் மதுரா.

நிமிடங்கள் கரைந்துகொண்டே இருந்தன. நெற்றியில் முத்துக்கள் கட்டிய வியர்வை கன்னத்

தில் வழிந்தது. கழுத்து மார்பு எல்லாம் வெயர்வையால் தெப்பமாக நனைந்து விட்டது. அவள்மார்பு உள்ஆடை வெளியே தெரிந்தது. என்ன இப்படி ஆயிட்டாள் என்று கோபமாக இருந்தது. கண் திறக்கட்டும் சுடுகின்ற மாதிரி இரண்டு வார்த்தைகள் சொல்ல வேண்டும்.

சீ வேண்டாம் சிலீப்பிங் பியூட்டி என்று சொல்வார்களே 'தூங்கும் அழகு' அப்படியே இவளுக்குப் பொருந்தும். எவ்வளவு அமைதியாக விழிகளை மூடி இருக்கிறாள். இவள் மனசிற்குள் தான் எத்தனை எத்தனை கனவுகள், துன்பங்கள். வித்யா நிச்சயம் உனக்கு ஆனந்தமான வாழ்க்கை அமையும்.''

வித்யாவின் இமைகள் மெல்ல அசைந்தன.

''மதுரா நான்..............''

புன்னகையால் ஆறுதல் சொன்னாள்.

'' கோயிலில் என் மடியில்.............''

மெல்ல எழுந்து உட்கார்ந்தாள்.

''எப்படி இருக்கு இப்போ?''

''மயங்கி விட்டேனா?''

''ம்''

''கன நேரமா?''

''இல்லை''

''அதே இளைஞன் இதே கோயிலில் வைச்சு என் நெற்றியில் அம்மன் குங்குமம் வைச்சான்.''

''குங்குமம் வைக்கிறது சின்ன விஷயமா வித்யா?''

''பெரிய விஷயம் தான் கனவில் நடந்ததை சொன்னேன்.''

''சரி வீட்டுக்குப் போவோமோ?''

''ம்''

வெளியே வந்தார்கள்.

மாலை இரவுக்கு வரவு கூறிக் கொண்டிருந்தது.

''வித்யா எனக்கு என்னவோ பயமா இருக்கு.''

''ஏன் நான் செத்துப் போவேன் என்றா?''

''சீ என்னடி பேச்சு உனக்கு அப்படி நடக்க விடமாட்டேன் நான்,''

''யமனுக்கு லஞ்சம் கொடுக்கப் போகிறாயா?'

''அவன் வாங்க மாட்டான்டி. வருவோன் வந்தால் வெறுங்கையோடு போகமாட்டான். நான் சாகப்பயப்படவில்லை. எனக்கு எந்த ஆசைகளும் இப்போ இல்லை. ஆனால்..............''

''ஆனால் என்ன?''

''அந்த இளைஞ்ன் யார்? எதற்காகத் தினமும் என் கனவில் வருகிறான். அவனுக்கு என்னால் என்ன ஆகவேண்டும் என்று தெரியவேண்டும்.''

நேரிலே ஒரு இளைஞன் வந்து உன்னை விரும்புகிறேன் என்றோ இல்லை வேறு என்னவோ

என்றால் நேரடியாக பதில் சொல்லி ஒருமுடிவு செய்யலாம். கனவில் வந்து என் மனசை அலை பாய வைக்கிறான்.''

''அவனை நீ வெறுக்கிறாயா?''

''இல்லை''

''விரும்புகிறாயா?''

மௌனமாக நடந்தாள்.

''சொல்லடி விரும்புகிறாயா?''

''உம்''

கால்கள் நடந்து கொண்டே இருந்தன.

பாயை விரித்தாள் மதுரா.

''நீ தூங்கு.''

''நீ தூங்கல்ல?''

''வந்தால் தூங்கிறேன் நீ படு.''

படுத்துக் கொண்டே வித்யா என்றாள்.

''என்ன?''

''ஒருஅரசகுமாரன் இருந்தான். ஒருநாள் அவன் ஒரு கனவு கண்டான். அவன் கனவில் ஒரு அழ கான இளவரசி வந்தாள். சிறிதுநேரத்தில் மறைந்து போனாள். விழித்துக் கொண்ட இளவரசன் யாராக இருக்கும் அந்த அழகான இளவரசி என்று அறிவதற்காக ஒரு முனிவர் அவனுக்குக் கொடுத்த மாயக் கண்ணாடி முன்போய் நின்றான். ''ஏய்! மாயக் கண்ணாடியே! கனவில் வந்த அரசிளங்

குமாரியைக் காட்டு என்றான். உடனே மாயக் கண்ணாடியில் கனவில் வந்த இளவரசி தெரிந்தாள். ஆகா எவ்வளவு அழகாக இருக்கிறாள் இந்த இளவரசி. இவளை எப்படியாவது என் மனைவி யாக்கியே தீருவேன் என்று தன் வெள்ளைக்குதிரை மேல் ஏறி அவளைத் தேடிப்பறந்தான்.''

''நீ படிச்சிருக்கிறாயா?''

''உம் அம்புலி மாமாவில் படிச்சிருக்கேன்.''

''அந்த அரசகுமாரன் போல் உன்கனவில் வரு பவனும் உன்னைத் தேடி வரலாம் இல்லையா?''

''கேலி செய்கிறாயா?''

''பின்னே என்னடி''

ஒரு இளைஞன் கோயிலுக்குள்ளே வைச்சு உன் நெற்றியில் குங்குமம் வைக்கிறது சாதாரணவிஷயமா தோணுதா உனக்கு?''

''இல்லைத் தான் ஆனால் கனவில்..........''

''நிறுத்தடி இந்த ஆனா ஆவன்னா எல்லாம் வேண்டாம்.''

''மதுரா நான் சொல்வதை நீ நம்பவில்லையா?''

''நம்பும் படியாக இல்லையே நீ சொல்வது எதுவும் உனக்கு நீயே கற்பனை செய்து கொள்கி றாய் என்றே நினைக்கிறேன்.''

''இல்லை மதுரா நான் சொல்வது எதுவுமே கற்பனை இல்லை. என் கனவில் வந்ததைத்தான் சொல்கிறேன்.''

''சரி எனக்குத் தூக்கம் வருகுது நீயும் படுத் துக்கொள்.

யார் இந்த இளைஞன் ஏன் தினமும் கனவில் வருகிறான். எங்கே இவனைச் சந்தித்தோம். வீட் டில் தான் வருகிறான் என்றால் வந்த இடத்திலுமா துரத்திக் கொண்டு வர வேண்டும். என்னிடம் இருந்து எதை எதிர்பார்க்கிறான். என்னை விரும்பு கிறானா? அப்படி என்றால் நேரில் வரலாமே. நான் உன்னை விரும்புகிறேன் என்றோ இல்லை கடிதம் மூலமாகவோ தெரிவிக்கலாமே அதைவிட்டு நடுராத்திரியில் வந்து ஏன் மனசை அலைய வைக்கி றான்?''

நாலு மணிக்கே தட்டி எழுப்பினாள்.

உற்சாகமாகவே எழுந்து கொண்டாள்.

''எல்லோரும் எங்கே போகிறாங்க?''

''யாரோ சாமியாராம் கால்மைல் தொலை வில் இருக்கிறாராம் பார்க்கப் போகிறாங்க.''

''சாமியாரா'' ஆச்சரியத்துடன் கேட்டாள் ''ஏன் நீயும் போக விரும்புகிறாயா?''

''போவோமா?''

''சரி புறப்படு.''

வீடு நிறைந்து பலர் வெளியே நின்றார்கள்.

''நடந்ததையும் நடக்கப் போவதையும் அப்படியே சொல்கிறாராம்.''

''வித்யா உன் அக்கா பாமினி, சாந்தி, அம்மா, அண்ணா எல்லோரும் இருக்கிறாங்க.''

''திரும்பிப் போவோம் வா.''

''வந்திட்டோம் கேட்டுக் கொண்டு போவோம்.''

''வேண்டாம் வா.''

''சரி கேட்காவிட்டால் நடப்பதை பார்த்திட்டுப் போவோம்.''

எட்டிப் பார்த்தாள்.

திடுக்கிட்டாள்.

''மதுரா வா போவோம்.''

''நில்லடி கொஞ்ச நேரம் பார்த்திட்டுப் போவோம்.''

''வேண்டாம் மதுரா போவோம்.''

''ஏன்டி ஏன் அவசரப் படுகிறாய்?''

''என்னைக் கண்டு விடுவார் அப்புறம் பெரிய பிரச்சினையாகி விடும்.''

''உன்னைக் கண்டு விடுவாரா?''

''இந்தச் சாமியாரை நேற்றுக் கனவில் கண்டேன்.''

''என்னடி உளறுகிறாய்?'' என்றாள் பரபரப்புடன்

''முதலில் வெளியே போவோம் வா.''

கையைப் பிடித்துத் தடுத்தாள்.

''வித்யா! நல்ல சந்தர்ப்பம் உன் கனவில் வரும் இளைஞன் யார் என்று சாமியார் மூலம் தெரிந்து கொள்ளலாம்.''

''ஐயோ வேண்டாம் மதுரா! அம்மா அக்கா எல்லோரும் உள்ளே இருக்கிறார்கள். அப்புறம் வீட்டில் ஏசி ஏசியே என்னைக் கொன்றிடு வாங்க.''

அவள் கையை இறுகப் பிடித்துக் கொண்டு சனங்களை விலக்கிச் சற்று உள்ளே சென்றாள். சாமியார் பார்வையில் தெரிந்தார்.

வித்யாவுக்கு வேர்வை முத்துக்கள் கட்டின.

''ஓம் ஓம் ஓம்'' சாமியாரின் வாயில் இருந்து ஒலித்தன.

அடுத்து கண்களைத் திறந்தார்.

''என் மகள் வந்திருக்கிறாள். அவள் வருவதற்கு வழியை விடுங்கள்.''

''கச முச என்று இரைச்சல் எழுந்து யாரை

அழைக்கிறார் என்று ஒருவரை ஒருவர் பார்த்த னர்.

''அமைதி அமைதி ஏன் மகளே அங்கே நிற்கி றாய். வா அம்மா'' என்று சொல்லி வித்யாவை கை நீட்டி அழைத்தார்.

வித்யாவுக்கு மெல்ல நடுங்கியது. நெஞ்சு பட பட என்று அடித்தது.

''வித்யா உன்னைத் தான் சாமியார் அழைக் கிறார்.''

மெல்லக் காலடிகளை எடுத்து நடந்தாள்.

''ஏன் பயப்படுகிறாய்? மகளே மறுபடியும் என்னிடம் வந்திருக்கிறாய் பயப்படாமல் இப்படி எதிரே உட்கார்.''

தலையைக் குனிந்து கொண்டு அமர்ந்தாள்.

''என்னை நிமிர்ந்து பாரம்மா.''

''ஏன் மனம் குழம்பி இருக்கிறாய்? கவலை களால் உன்மனம் சூழ்ந்திருக்கிறது. நீ அன்னை பராசக்தியால் ஆசீர்வதிக்கப்பட்ட புனிதமான ஆத்மா. சஞ்சலங்களில் இருந்து விடுபடும் நேரம் வந்துவிட்டது. இனி எந்தத்துன்பமும் உன்னை அணுகாது. போன ஜென்மத்துடன் உன் பாவங் கள் எல்லாம் கரைந்து போய்விட்டன. இப்போ நீ ஒரு புண்ணிய ஆத்மா! போன ஜென்மத்தில்

இழந்ததை இந்த ஜென்மத்தில் அடைந்தே தீரு வாய். ஜென்மங்கள் கடந்து சொந்தங்கள் தொட ரும் எனக்குத் தெளிவாகத் தெரிகிறது. உன்னைத் தேடிக் கொண்டு ஒரு இளைஞன் வந்து கொண்டி ருக்கிறான். உனக்கு இப்போ இருக்கின்ற குழப் பங்கள் எல்லாம் அவனைப் பார்த்ததும் தீர்ந்து விடும்.

முன்பு ஏற்பட்ட துன்பங்கள் எதுவுமே இனி உனக்கு ஏற்படாது. எல்லாத் தடைகளையும் அந்த இளைஞன் உடைத்தெறிந்து உன்னை விடு விப்பான். சிவன், பார்வதியின் கையைப் பிடித்துக் கைலாயம் அழைத்துக் கொண்டு போனது போல் வருகின்ற இளைஞன் உன் கையைப் பிடித்து தூர நாடு அழைத்துப் போவான். எழுபது வருடங்கள் அந்த இளைஞனுடன் மகிழ்ச்சியாக வாழ்வாய்.''

கண்ணீர் கோடுகள் வரைந்து கொண்டிருந்தன.

கண்களைத் துடைத்துக் கொள். துன்பங் களும், துயரங்களும் உன்னை விட்டு விலகிச் சென்று விடும் இன்றோடு. இனி உன் வாழ்நாள் எல்லாம் வசந்தகாலம் தான். அன்னை பராசக்தியின் அருட் கடாட்சம் உன்னைக் காவல் செய்து கொண்டே இருக்கும் போய் வா.''

மடைதிறந்தால் போல் சொல்லிவிட்டு திரு நீறை எடுத்து அவள் தலைமேல் தூவி ஆசிர்வதித்து விட்டு கண்களை மூடி மௌனமானார்.

''சரி பிள்ளை எழுந்திரு என்றாள் ஒரு வயசான அம்மா!''

வித்யா முளந்தாள் இட்டு வணங்கி விட்டு எழுந்தும் வணங்கினாள்.

மதுரா போய் அழைத்துக்கொண்டு வெளியே வந்தாள்.

''எனக்குப் பயமாக இருக்கு மதுரா.''

''என்ன பயமடி இனி? அதுதான் சாமியார் சொன்னாரே இனிமேல் துன்பமோ துயரங்களோ இல்லை என்று.''

''முதலில் வீட்டுக்குப் போவோம் வா.''

''சாமியார் சொன்ன ஒரு வரி எனக்கு வித்தி யாசமாகத் தோன்றுது. ஜன்மங்கள் கடந்து சொந் தங்கள் தொடரும் என்று சொன்னாரே அப்படி என்றால் பூர்வஜென்ம நினைவுகள் தான் கனவாக வருகிறதா?''

வித்யாவின் விழிகள் நிலை குத்தி நின்றன.

''உன் கனவில் வரும் இளைஞன் போன ஜென் மத்தில் உன் காதலனாகவோ கணவனாகவோ இருந்திருக்கலாம். போன பிறப்பில் இளவயசில் ஆசைகள் நிறைவேறாமல் இறந்து போனவர்கள் அடுத்த பிறப்பில் தான் நேசித்தவரைத் தேடிவரு

வதாக கர்ண பரம்பரை கதை இருக்கு. போன ஜென்மத்தில் நீயும் கனவில் வருபவனும் காதலிச்சு நிறைவேறாமல் அகால மரணமடைந்திருந்தால்..............''

''கனவில் வருவது பூர்வ ஜென்ம நினைவுகள் என்றா சொல்கிறாய்?''

''அப்படித்தான் எனக்குத் தோன்றுது. சில நேரம் நான் நினைப்பது பிழையாக இருக்கலாம்.''

''போன ஜென்மத்தில் இழந்ததை இந்தஜென்மத்தில் அடைந்தே தீருவாய் என்று சாமியார் சொன்னதைப் பார்த்தால் பூர்வஜென்ம நினைவுகள் தான்.

உன்னைத் தேடி ஒரு இளைஞன் வந்துகொண்டிருக்கிறான் என்று சொன்னாரே அந்த இளைஞனுக்கு என்னை எப்படித் தெரியும்?''

''நல்ல கேள்வி.''

''ஏன் உன் கனவில் அவன் தெரிவதுபோல் அவன் கனவில் நீ தெரியலாம் இல்லையா?''

''அப்படியும் நடக்குமா?''

''ஏன்நடக்காது. இரவு நேரங்களில் ஆத்மாக்கள் இருக்கின்ற உடலை விட்டு வெளியே போய் விட்டுத் திரும்புவதாகச் சொல்கிறார்கள். விக்கிர

மாதித்தன் கதைகளில் கூடு விட்டுக் கூடு பாய்கிற கதைகள் வாசிக்கவில்லையா நீ? இன்னுமொரு சம்பவத்தை அண்மையில் ஒரு சஞ்சிகையில் வாசித்தேன்.

ஒரு ஜேர்மனியன் வியாபார விசயமாகப் பிரான்சுக்குப் போனான். ஓர் அறையில் படுத்திருக்கும்போது ஒரு கனவு கண்டான். உங்களைக் கொல்ல ஒருவன் வந்திருக்கிறான். எழுந்திருங்க எழுந்திருங்க என்று மனைவி எழுப்புவது மாதிரி. பட்டென்று எழுந்து கதவுப் பக்கம் பார்த்தால் கதவு கண்ணாடிக்கு அப்பால் ஒரு உருவம் துவக்குடன் நிற்பது தெரியுது. உடனே தன் துவக்கை எடுத்துச் சுட்டதும் வந்தவன் ஓடிவிட்டான். அந்த நேரத்தில் ரெலிபோன் மணி அடிச்சுது. அவன் மனைவி தான் பேசினாள். என்னங்க உங்களுக்கு ஒன்றும் ஆபத்து இல்லையே என்று கேட்டாள். நீதான் கனவில் வந்து என்னைக் காப்பாற்றிவிட்டாயே என்று அவன் சொன்னான். நானும் கனவு கண்டுதான் போன் செய்தேன்'' என்றாள் அவள்.

இது உண்மையாக நடந்தது.

''மன உணர்வுகளுக்கும் கனவுகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கு.''

''மதுரா நீ சொல்வது சரி போலத்தான் இருக்கு. ஏனென்றால் கனவு வந்து முடிந்த பிறகு நான் அடித்துப் போட்டது போல் தூங்குகிறேன்.

எனக்கு எப்படித் தெரியும் என்றால் நாலைந்து இரவுகள் அம்மா வந்து சத்தம் போட்டு எழுப்பி இருக்கிறா. நான் எழுந்திருக்கவில்லை. நாலாம் வீட்டுப் பாட்டி இறந்து குளறிக்கேட்டு எல்லோரும் ஓடி இருக்கிறாங்க ஆனால் எனக்குத் தெரியவில்லை அடுத்தது பக்கத்து வீட்டுக்குக் கள்ளன் வந்தான். அவங்க சத்தம் போட்டாங்க, அயலவர் எல்லோ ரும் எழுந்து ஓடி இருக்கிறாங்க. விடிந்ததன் பின்பு தான் அம்மா சொல்லி எனக்குத் தெரிந்தது. பொம்பிளைகள் கும்பகர்ணன் மாதிரி தூங்கக் கூடாது என்று என்னைப் பார்த்துச் சொல்லுவா அம்மா.''

''அப்போ உன் கனவில் அவன் வந்து போனதும் நீ அவனைத் தேடிப் போகிறாய்.''

''உன் கனவில் அவன் வருவது போல் அவன் கனவில் நீ ஏன் வரக்கூடாது?''

''இதெல்லாம் பூர்வ ஜென்ம நினைவுகள் என்றா சொல்கிறாய்?''

''நிச்சயமாக இது பூர்வஜென்ம நினைவுகள் தான்.''

வித்யாவின் இமைகள் வெட்ட மறந்தன.

''என்ன யோசிக்கிறாய்?''

''போன ஜென்மத்தில் இளந்ததை இந்த ஜென்

மத்தில் அடைவேன் என்று சொன்னாரே அப்படி என்றால் போன ஜென்மத்தில் அவன் கூடச் சேர்ந்து வாழவில்லையா?''

''அப்படித்தான் இருக்கணும் என்று நினைக்கிறேன். ஆசைகள் நிறைவேறாத ஆத்மாக்கள் தான் அடுத்த பிறப்பெடுத்து தாபங்களைத் தீர்த்துக் கொள்கின்றன.''

''நிச்சயம் அவன் உன்னைத்தேடி வருவான்டி.''

''நான் இருக்கும் இடம் அவனுக்குத் தெரியாது அவன் இருக்கும் இடம் எனக்குத் தெரியாது. அப்படி இருக்க நான் இருக்கும் இடத்தை எப்படிக் கண்டு பிடிப்பான்?''

''இந்தக் கேள்விக்கு என்னால் பதில் சொல்ல முடியவில்லை. ஆனால் அவன் எப்படியோ உன்னைக் கண்டுபிடித்தே தீருவான்.''

''கண்டுபிடிக்க முடியாவிட்டால்.''

''ஏன் எதிர்மறையாச் சிந்திக்கிறாய் சாதகமாகவே சிந்தி.''

''ஓம் சாமியார் சொன்னார் தானே எல்லாத் தடைகளையும் தாண்டி கூட்டிக்கொண்டு போவான் என்று.''

''ரொம்பச்சரி.''

''எப்போ அவன் வருவான்.''

''வாசலைப் பார் நிற்பது உன் அம்மா போல் இருக்கு.''

''அம்மாவே தான்.''

எழுந்து வாசலுக்கு வந்தாள்.

''எங்க கூட வருகிறாயா?''

'' நீங்கபோங்க நான் மதுராவோடு வாரேன்.''

''கண்ட இடத்துக்கெல்லாம் போகாதே. கவனமாக வீட்டுக்கு வந்துசேர்.''

''சரி நீங்க போங்க.''

''என்னவாம்.''

''கவனமாக வீட்டுக்கு வரட்டாம். சாமியார் சொன்னதைக் கேட்டிருப்பாங்க. யாருடனாவது ஓடிப் போயிடுவேன். என்ற பயம் தான்.

''உதுக்குத் தான் அவங்க இருக்கும்போது சாமியாரைச் சந்திக்க வேண்டாம் என்று சொன்னேன் கேட்டாயா நீ? இப்போ அம்மா தேடி வந்திட்டா. இனி வீட்டுக்குப் போனால் நான் எங்கே போகிறேன் எங்கே வருகிறேன் என்று கண்கொத்திப் பாம்பு போல் கவனிக்கப் போகிறா.''

''ஸாரி வித்யா.''

''சீச்சீ இதுக்குப் போய் ஏன்டி ஸாரி சொல் கிறாய்?''

''அம்மாவை எப்படிச் சமாளிக்கிறது என்று எனக்குத் தெரியும் சாந்தியையும், பாமினியையும் சமாளிக்கிறதுதான் சிரமம்.''

''நாங்க ஊருக்குப் போன பின்பு அவன் உன் னைத் தேடி வருவதாக வைத்துக் கொள்வோம். நீ என்ன செய்வாய்?''

''என்ன செய்வது?''

''என்னையே கேட்கிறாயா?''

''என்ன செய்வதென்று எனக்குத் தெரிய வில்லை அதுதான் உன்னைத் திருப்பிக் கேட்டேன்.''

''அழகா இருக்கிறானா?''

''உம் கொள்ளை அழகு,''

''உனக்குப் பிடிச்சிருக்கு? அப்படித்தானே.''

''உம்''

''அவன் வந்து உன்னை எனக்குப் பிடிச்சிருக்கு நான் உன்னை விரும்புகிறேன் என்று சொன்னால் நீ என்ன சொல்வாய்?''

''நானும் உங்களை விரும்புகிறேன் என்று சொல் லலாமா?''

''அப்படித்தான்டி சொல்லணும்.''

என்கூட வருகிறாயா என்று கேட்டால்?''

''வீட்டில் என்ன சொல்வாங்களோ தெரியாதே?''

''முட்டாள் வீட்டுக்காரரின் பதிலை நான் கேட்கவில்லை.''

''உன் பதிலைத்தான் கேட்டேன். அவன்கூடப் போக விருப்பமா?''

''விருப்பம்.''

''இதில் எந்த மாற்றமும் இல்லை? அப்படித் தானே.''

''ஏன் இப்படிக் கேட்கிறாய்?''

''அவன் வந்து வரச்சொல்லிக் கேட்டதும் தடுமாற்றமோ தயக்கமோ இருக்கக்கூடாது இல்லையா? அதற்குத்தான்.''

''என்னடி முழுசுகிறாய்? பயம் வந்திட்டுதா?''

''வித்யா வீட்டில் யாருமே உன்மேல் அன்பு இல்லையென்று சொல்கிறாய்! இந்த நிலையில் அவன் உன்மேல் அன்பு வைச்சு தன்னுடன் வரும்படி கேட்டால் போய் வாழலாம் தானே!''

''அவன் கூடப் போய்விடுவது தான் நல்லது நரகத்தில் இருந்து விடுபட்ட மாதிரி இருக்கும். வீடா அது நச்சரிப்பும் ஏச்சும் பேச்சும் தான் தின

மும். நிம்மதியே இல்லை எங்கேயாவது தப்பி ஓட வேணும் போல் இருக்கு என்ன செய்வது?''

''அன்பைத் தேடி உன்மனம் அலைவது எனக்குப் புரியுது. உன்னுடைய அதிஸ்டம் உன்மேல் அன்பு செலுத்த என்றே ஒரு இதயம் உன்னைத் தேடி வருகுது. சாமியாரின் வாக்குப் பலிக்க வேண்டும். இவ்வளவு காலமும் அன்பு செலுத்தாத குறையை அவன் மொத்தமாகத் தருவான்டி. நான் சொல்வது சரியாகவும் இருக்கலாம் பிழையாகவும் இருக்கலாம். மனசில் தோன்றியதைச் சொன்னேன். உனக்கும் அறிவு இருக்கு யோசித்து முடிவு செய். அவன் என்ன யோசனையுடன் வாறானோ தெரியாது அவன் வந்த பின்பு அவனுடன் கலந்துபேசி முடிவு செய்யலாம்.''

''நல்ல யோசனை. ஆண்களின் சிந்தனையே வேறுதான் சரியான பாதையில் திட்டம் போட்டு புத்திசாலித்தனமாக முடிவெடுப்பார்கள்.''

''அவன் வரும் வரை காத்திருப்போம்.''

''தீபன் இப்போ ஏன் யாழ்ப்பாணம் போகணும்.''

''நான் பிறந்த ஊரைப் பார்க்கணும்.''

''இப்போ அங்கு நிலமை சரி இல்லை யுத்தம் நடந்து கொண்டு இருக்கு. போய் ஏன் பிரச்சினையில் மாட்டவேண்டும்?''

''இல்லையம்மா நான் போகவேண்டும் பிளீஸ் தடை சொல்லாதீங்கம்மா.''

''தம்பி! இப்போ நீ யாழ்ப்பாணம் போவதில் அப்பாவுக்கும் இஸ்டம் இல்லை.''

''நீங்கதான் அப்பாவிடம் சொல்லி சம்மதிக்க வைக்கணும். போவது ஊரைப் பார்ப்பது உடனே திரும்புவது அவ்வளவு தானம்மா.''

''சரி அப்பாவிடம் கேட்டுப்பார்க்கிறேன்.''

''அப்பா சம்மதிக்காவிட்டால் நீங்கதான் சம் மதிக்க வைக்கணும்.''

அழைப்பு மணி அடித்தது.

''வா யோகன்.''

''உன் வீட்டில் சம்மதிச்சிட்டாங்களா?''

''ஒரு மாதிரிப்பேசி சம்மதிக்க வைச்சிட்டேன்.'

''சரி பிரயாண ஏற்பாடு எல்லாம் உன் பொறுப்பு!''

சூட்கேஸைத் தூக்கிக்கொண்டு வருவதுதான் என் வேலை.''

''ஓகே லைபிரறிக்குப் போக வேண்டும் வாரேன்.''

கண்களை மூடினான் தீபன் நினைவுகள் பின் னோக்கி ஓடியது.

''ஹாய் தீபன் லைபிரறிக்கா?''

''உம் நீயும் அங்கே தானே''

''ஜெஸ் வா போகலாம்.''

''யார் எழுதிய புத்தகம்?''

''பீற்றர் டொனால்ட்.''

''டேவிட் ஓவனின் நாவல்களைப் படிக்கிறதில்லையா?''

''அவர் நாவலில் என்ன விஷேசம்?''

''திரிலிங்கா இருக்கும் இந்த நாவலைக் கொண்டு போய் படித்துப்பார், அப்படி ஒரு திரிலிங்.''

''அப்படியா?''

''அவனிடம் இருந்து புத்தகத்தை வாங்கிப் பெயரை வாசித்தான்.''

''மிற் நைற் டாக்றூம்''

''திரிலிங் அதிகமாக இருக்கணும் என்றால் றூம் லைட்டை போட்டுக் கொண்டு படிக்கக் கூடாது.''

''அறை யன்னல் கதவு எல்லாவற்றையும் மூடி விட்டு ரேபிள் லாம்ப் வெளிச்சம் புத்தகத்தில் மட்டும் படும்படியா வைத்துக்கொண்டு படிக்கணும். ரீ.வி றேடியோ சத்தங்கள் எதுவுமே கேட்கக்கூடாது ஒரே அமைதியாக இருக்கணும். அப்போ இந்தப் புத்தகத்தைப் படித்துப் பார் ரொம்ப திரிலிங்கா இருக்கும்.''

யோகன் சொன்ன மாதிரியான சூழலை ஏற் படுத்திக் கொண்டு படித்தான். நாவல் முடிய நள் ளிரவு பன்னிரண்டு மணியாகி விட்டது படுத்ததும் தூங்கி விட்டான். ஓர் இளம்பெண் கல்லூரிச் சீரு டையில் கைகளை விரித்துக் கொண்டு ஓடிவருவது போல் இருந்தது. மீண்டும் மீண்டும் அதேகனவு.

எழுந்துபோய் பச்சைத்தண்ணீரைக் குடித்து விட்டுப் படுத்தான்.

...............................................

விடிந்ததும்...... .....

''அம்மா லைபிறறிக்குப் போய் வாறேன்.''

''சாப்பாட்டுக்கு வந்துவிடு.''

''ஹாய் தீபன் எப்படி புத்தகம்?''

''சுப்பர், இதே மாதிரி புத்தகம் எடுத்துத் தாடா ரேஸ்ற் பிடிச்சுட்டுதா. இந்தா இந்தப்புத் தகத்தைக் கொண்டுபோய் படிச்சுப்பார். முதல் படித்த புத்தகத்திலும் பார்க்க நன்றாக இருக்கும்.''

''மிட் நைற் லவர்.''

''எப்படிக் கதை ஓட்டம்?''

''அதைச் சொல்லக்கூடாது சுவாரஸ்யம் குறைஞ்சிடும் படித்துப்பார் நீயே ஆச்சரியப்படுவாய். புதுமையான நாவல்.''

''இவருடைய நாவலைப் படித்தால் கனவுகள் வருமா?''

''அப்படி உறுதியாகச் சொல்ல முடியாது. எனக்கு வரவில்லை. உனக்கு வந்திச்சா?''

''உம்''

''அது ஒவ்வொருவர் மனதைப் பொறுத்தது. ஏன் பயங்கரக் கனவா?''

''பயங்கரமில்லை'' என்று இழுத்தான்.

''பிறகென்னடா?''

யோகன் விடைபெற்றுக் கொண்டான்.

வீட்டுக்கு வந்தவன் நாவலைப் படிப்போமா வேண்டாமா? என்று யோசித்தான். சரி படித்துத் தான் பார்ப்போம் என்று இரவானதும் நேற்றையப் போல் படித்தான். நாவலில் ஒரு பெண் மறு பிறப்பு எடுத்து தன் போன பிறப்புக் காதலனைத் தேடி அலைகிறாள். மறுபிறப்பு எடுத்திருக்கும் அவளை ஏற்க மறுக்கிறான். அவள் தன்னை ஏற் றுக் கொள்ளும்படி மீண்டும் மீண்டும் கெஞ்சுகிறாள். அதற்கு மேல் அவனால் படிக்க முடியவில்லை. மூடி வைத்துவிட்டு படுத்து விடுகிறான்.

நேற்று கனவில் வந்த அதேபெண் கனவில் வந் தாள். இன்று கைகளை விரித்துக் கொண்டு ஓடி வரவில்லை. அமைதியாக அவனையே பார்த்துக் கொண்டு நின்றாள். கொஞ்சநேரம் தான் மறைந்து விட்டது.

அதே பெண் தினசரி இரவு நடுச்சாமத்துக்கு மேல் வரத்தொடங்கினாள். வாரங்கள் உருண்ட பின் சில காட்சிகள் மாறிமாறி வரத் தொடங்கியது. மாதங்கள் கடந்தன. கனவுகள் பற்றிய ஆங்கிலப் புத்தகங்களையும் சஞ்சிகைகளையும் எடுத்துப் படித்ததும் உஷார் அடைந்தான். பூர்வ ஜென்ம நினைவுகள்தான் கனவில் வருகிறது என்று உறுதியாக நம்பினான்.

இந்தப் பெண் எங்கே இருக்கிறாள் என்று எப்படிக் கண்டு பிடிப்பது. இறந்து போனால் எப்படி இறந்தாள்? எதற்காக இறந்தாள்? இவளுக்கும் எனக்கும் என்ன உறவு? அண்ணன் தங்கை உறவா? காதலன் காதலி உறவா? கணவன் மனைவி உறவா? இல்லை உறவுகளே இல்லாத நிலையா? பலகேள்விகள் மனசுக்குள்ளே எழுந்தன. இதை அவசரப்பட்டு வெளியே சொல்லக்கூடாது. உதவி தேவைப்படும் நேரத்தில் தேவையேற்பட்டால் யோகனிடம் சொல்வோம்.

இப்போ கனவில் வந்த அவள் உருவம் மற்றும் எல்லாக் காட்சிகளையும் படமாக வரைவோம். அவளைப் பற்றிய தகவல்களைப் பெறுவதற்கு வரையும் படங்கள் நிச்சயம் உதவும்.

முதலில் அவளின் உருவத்தை அப்படியே வரைந்தான். பிறகு, கோயில், ஆலமரம் தாமரைக்குளம் என்று வரைந்து முடித்தான்.

இந்த நாலு படங்களையும் வைத்துக்கொண்டு எப்படி அவளைக் கண்டு பிடிப்பது. இலங்கையிலா இல்லை இந்தியாவிலா இந்தக் கோவில் இருக்கிறது இலங்கையில் என்று வைத்துக் கொண்டால் யாழ்ப் பாணமா இல்லை வேறு இடமா? என்னுடைய அப்பா அம்மா தாத்தா பாட்டி எல்லோரும் யாழ்ப் பாணம் ஆகையால் என் கனவுகளுக்கும் யாழ்ப் பாணத்துக்கும் தான் தொடர்புகள் அதிகம் இருக்க வாய்ப்பு இருக்கு. யாழ்ப்பாணம் என்றாலும் எந்த ஊர் என்று கண்டுபிடிக்க முடியாது இந்தப் படங் களுடன் யாழ்ப்பாணம் போய் ஊர் ஊராகத் திரிந்து தான் இந்தக் கோயில் ஆலமரம் தாமரைக் குளத்தைக் கண்டுபிடித்து அதன்பிறகு தான் யார் இந்தப் பெண் என்று கண்டுபிடிக்க வேண்டும். ஒரு முடிவுடன் யோகனைத் தேடிப் போகிறான்.

''என்னடா தீபன் வீட்டுக்கே வந்திட்டாய்.''

''முக்கியமான விசயம்.''

''என்ன சொல்லு?''

''சிலோனுக்குப் போக வேண்டும்.''

''சிலோனுக்கா? ஏன் என்ன விசயம்?''

''விசயத்தைச் சொன்னால் பைத்தியம் என் பாய்?''

''முதலில் விஷயத்தைச் சொல்லு பிறகு முடிவு செய்கிறேன் பைத்தியமா இல்லையா என்று.''

''ஒரு பெண்ணைத் தேடி.''

''பெண்ணா? பென் f பிரன்ட்டா?''

''இல்லை.''

''காதலியா?''

''அப்படியும் இருக்கலாம்.''

''ஏன்டா இழுத்தடிக்கிறாய் விஷயத்துக்கு வா.''

''இந்தப் படத்தைப் பார்.''

''பெண்தான் ஸ்கூல் யூனிபோமில் நிற்கிறாள். இவளுக்கு என்ன?''

''இவளைத்தான் கண்டு பிடிக்க வேண்டும்.''

''போர் நடக்கும் இடமாச்சே யாழ்ப்பாணம். துலைந்தோ காணமலோ போய்விட்டாளா? இல்லை புலிப்படையில் சேர்ந்து விட்டாளா?''

''என்னடா பேசாமல் இருக்கிறாய்?

''இவள் உயிருடன் இருக்கிறாளா இல்லையா? என்று எனக்குத் தெரியாது. என்மனம் உயிருடன் தான் இருக்கிறாள் என்று சொல்லுது.''

''டேய் தீபன் இந்தப்படம் உனக்கு எப்படிக் கிடைத்தது.''

''நர்ன் தான் கீறினேன்.

''நீ கீறுவாய் என்று எனக்குத் தெரியும். எப்படி? அதாவது எதைப் பார்த்துக் கீறினாய்?''

''பார்த்துக் கிறவில்லை.''

''அப்படி என்றால்!''

''கனவில் வந்தாள் கிறினேன்.''

''கனவில் வந்தாளா?''

''உம் நேற்றோ முதல்நாளோ இல்லை பல மாதங்களாக என் கனவில் வந்து கொண்டிருக்கிறாள்.''

''என்னடா எனக்கு நீ சொல்லவே இல்லையே!''

''என்னாலேயே எந்த முடிவுக்கும் வரமுடியவில்லை.''

''அப்படி இருக்க உன்னையும் ஏன் தொல்லைப் படுத்துவான் என்று சொல்லவில்லை.''

''போடா பூல்.''

''சரி எப்போ எந்தச் சூழ்நிலையில் ஆரம்பிச்சது?''

''அதற்கும் நீதான் காரணம்.''

''நான் காரணமா?''

''உம்'' ''மிற் நைற் டாக்றூம் நாவலை வாசித்த அன்றுதான் முதன்முதல்கனவில் வந்தாள்''

''அன்று நான் அதைப்பற்றி பெரிதாக ஒன்றும்

நினைக்கவில்லை. அடுத்தநாள் ''மிற் நைற் லவர்'' நாவலை வாசித்த பிறகு நாவலை முடிக்காமல் படுத்தேன் அன்றும் அதே பெண் கனவில் வந்தாள். பிறகு தினமும் வருகிறாள்.''

''டேய் அந்தப் புத்தகங்களை நான் உனக்குத் தந்து பல மாதங்களாகி விட்டதே இவ்வளவுநாளும் தினமும் கனவில் வருகிறாளா?''

''ஓம்''

''மிற் நைற் டாக்றாம்'' ''மிற் நைற் லவர்'' இரண்டுமே மறுபிறப்புக் கதை தானே!''

''உம்''

''இரண்டிலுமே மறுபிறப்பைப் பற்றி ஆழமாக ஆராய்கிறார் டேவிட் ஓவன். நானும் வாசித்திருக்கிறேன். நம்பும் படியாக தத்ரூபமாக எழுதிக் கொண்டு போயிருக்கிறார். ஆனால் நான் நம்பவே இல்லை. கனவில் வருவதாக நீ சொல்கிறாயே அந்தப் பெண் மறுபிறப்பு என்று எதைக் கொண்டு முடிவுக்கு வந்தாய்?''

''உன் மனம் கற்பனை செய்ததின் எதிரொலீயாக கனவில் வரலாம் இல்லையா?''

''கற்பனையோ இல்லை கனவோ என்று என்னால் ஒதுக்கமுடியவில்லை. ஆரம்பத்தில் இரண்டு மூன்று நாள் அப்படித்தான் நினைத்தேன். ஆனால் நாள் ஆக அந்தப் பெண்ணுக்கும் எனக்கும் ஏதோ

ஒருவழியில், ''அது எது என்று அறுதி இட்டுச் சொல்ல முடியாது.'' மானசீகமாக ஒரு தொடர்பு இருக்கு என்று என் உள் உணர்வு மீண்டும் மீண்டும் அழுத்தி உணர்த்திக் கொண்டே இருக்கு!

அதன் பிறகுதான் அவளைப் படமாக வரைந் தேன் காட்சிகளையும் வரைந்தேன்.''

''நீ இவ்வளவு தூரம் உறுதியாடுச் சொல்வ தினால் என்னாலும் ஒரேயடியாக மறுதலிக்க முடிய வில்லை.''

''சரி என்ன செய்ப் போகிறாய் நான் எந்த விதத்தில் உனக்கு உதவவேண்டும்?''

''நானும் நீயும் சிலோனுக்குப் போக வேண் டும்.''

''சிலோனா?''

''உம் யாழ்ப்பாணத்தில் இந்தப் பெண்ணைத் தேட வேண்டும். யாழ்ப்பாணத்தில் தான் இந்தப் பெண் இருக்கிறாள்?''

''கொஞ்சம் பொறு யாழ்ப்பாணத்தல் தான் இந்தப் பெண் இருக்கிறாள் என்று எப்படி முடிவு செய்தாய்?''

''எந்த அடிப்படையும் இல்லை. உள் மன உணர்வு தான்.''

''இவள் உயிருடன் இருக்கிறாளா? இல்லை இறந்து விட்டாளா? ஏன் கேட்கிறேன் என்றால் இறந்தவர்கள் கூட கனவில் வரலாம் இல்லையா? ''ஐ வில் கம் எகையின்'' என்ற நாவலில் ''டேவிட் ஓவன்'' தெளிவாகச் சொல்லி இருக்கிறார்.''

''நாவல்கள் எல்லாம் கற்பனை தானே.''

இருக்கலாம் ஆனால் ஆங்கில நாவல்கள் சில விஞ்ஞான ஆராய்ச்சிகளையும் உள்வாங்கிக் கொண்டு தான் வெளிவருகின்றன.

''நான் இல்லை என்று சொல்லவில்லை.

இப்போ உனக்கு ஏற்பட்டிருக்கும் இந்தப் பிரச்சினைக்கும் டேவிட் ஓவனின் இரண்டு நாவல்கள் தான் காரணமாக இருந்திருக்கின்றன.''

''யோகன் அவள் உயிருடன் தான் இருக்கிறாள் என்று திடமாக நம்புகிறேன்.''

''அப்படி என்றால் சரி சிலோனுக்குப் போய் தேடுவோம் அவளை.''

''யோகன் இந்த விசயம் உன் வீட்டுக்கோ என் வீட்டுக்கோ தெரியக்கூடாது.''

''என்ன காரணம் சொல்லி யாழ்ப்பாணம் போகக் கேட்பது?''

''நாம் பிறந்த ஊரைப் பார்க்க ஆசையாக இருக்கு என்று சொல்வோம்.''

''ஓ.கே.''

''தீபன் கண்களைத் திறந்தான் எதிரே சிலோன் படம் சுவரில் தொங்கிக் கொண்டிருந்தது எழுந்து போய் யாழ்ப்பாணக்குடா நாட்டைக் கூர்ந்து பார்த்தான். இங்குதான் நான் பிறந்தேன். என் அப்பாவும் அம்மாவும் இங்குதான் பிறந்தார்கள். என் கனவுக் கன்னியும் இங்கு தான் இருக்கிறாள். அவளை நான் சந்திப்பேனா? சந்தித்து என்கூட வரும்படி கேட்டால் வருவாளா?''

''யோகன் கேட்டதுபோல் இவள் உயிருடன் தான் இருக்கிறாளா? இறந்திருந்தால் யாழ்ப்பாணம் போய் எங்கு தேடினாலும் கிடைக்கமாட்டாளே?''

யோசனையுடன் கட்டிலை நாடிப் போய் சாய்ந்து கொண்டான். எதிரே மேசையில் இருந்த ஆங்கில சஞ்சிகையில் கண்கள் பதிந்தன. எடுத்துப் பார்த்தான். ஆச்சரியத்தால் புருவங்கள் உயர்ந்தன. மறுபிறப்பு பற்றிய ஓர் ஆய்வுக் கட்டுரை பிரசுரமாகி இருந்தது. ஆர்வத்தோடு படித்தான். சந்தோஷத்தில் நிமிர்ந்து உட்கார்ந்தான். இறந்தவர்கள் எப்பவாவது ஒருநாள் தான் கனவில் வருவார்கள் உயிருடன் இருப்பவர்கள் தான் அடிக்கடி கன

வில் வருவார்கள் என்று எழுதி இருந்ததைப் படித்ததும் பூரித்துப் போனான். அவள் நிச்சயம் உயிருடன்தான் இருக்கிறாள். நிச்சயம் அவளைச் சந்திப்பேன். அவள் யாராக இருந்தாலும் என்கூடக் கூட்டி வருவேன் ஓ நான் எவ்வளவு அதிஷ்டசாலி. நான் வரைந்த படங்களை எல்லாம் நிழல் பிரதி எடுத்து இங்கே வைத்துவிட்டுத்தான் யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு போக வேண்டும். இடைநடுவே ஏதாவது பிரச்சனை வந்தால் இங்கே இருக்கும் பிரதிகள் உதவி செய்யும்.

"தீபன் சாப்பிட வா."

"அம்மா யாழ்ப்பாணத்தில் பெரியம்மா எங்கே இருக்கிறாங்க?"

"உரும்பிராயில்."

"உரும்பிராய் தான் சொந்த ஊரா?"

"ஓம்."

"அப்பா?"

"அப்பா கோப்பாய் ஆனால் அப்பாவின் சகோதரர்கள் இப்போ அங்கே இல்லை. கல்யாணம் முடிச்சுக் கொண்டு திக்கு வேறாகப் பிரிஞ்சிட்டாங்க. அப்பா பெயரைச் சொல்லி விசாரித்தால் சிலர் சொல்லலாம். யாழ்ப்பாணத்தில் சிங்கள இராணுவம் நிலை கொண்டிருக்கு. பெரியம்மாவைக் கேட்டு அவ சொல்கின்றபடி நட அலட்சியமாக இருந்து விடாதே."

''சரியம்மா.''

பிரயாண ஏற்பாட்டுடன் வந்து காரில் இறங்கினான் யோகன்.

''அம்மா போயிட்டு வாறேன்.''

''கொஞ்ச நாள் அதிகமானால் யோசிக்காதீங்க வந்திடுவேன்.''

''நீ படிச்சவன் என்னைப் பற்றி உனக்குத் தெரியும் அதற்கேற்றபடி நடந்து கொள்.''

''தேவைக்கு மிஞ்சி ஒருநிமிடம் கூட யாழ்ப்பாணத்தில் நிற்கமாட்டேன். கிழமைக்கு ஒரு கடிதம் போடுகிறேன் சரிதானே.''

மகனின் தலையைப் பாசத்தோடு தடவி விட்டாள்.

''அம்மா நீங்களும் வாங்களேன் இரண்டு கிழமை பயணத்தைத் தள்ளிப் போடுகிறேன்.''

''இல்லை தீபன் அப்பாவைத் தனியே விட்டு நான் வரமுடியாது.''

''அப்பாவும் வந்திட்டார் காரில் ஏறு.''

''அம்மா உடம்பை கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்க.''

''லண்டன் வீதியில் கார் வழுக்கிக் கொண்டு பறந்தது.''

விமான நிலையம் சுறுசுறுப்பாக இருந்தது. வருவோரும் போவோருமாக.

''அப்பா அம்மாவை நன்றாகக் கவனிச்சுக் கொள்ளுங்க.''

''சரி நீ போய் வா.''

கொழும்பு விமான நிலையத்தில் சோதனைகளை எல்லாம் முடித்துக் கொண்டு வெளியே வந்தார்கள்.

''யாழ்ப்பாணத்தில் தான் இராணுவம் நிற்குது என்றால் இங்கும் ராணுவம் தானே எங்கும் நிற்கிறாங்க.''

''எதையும் பேசாதீங்க'' என்று பெரியப்பா மெல்லச் சொன்னார்.

வெள்ளவத்தையை அடையும் வரை வாயை மூடிக்கொண்டு கண்களால் கொழும்பைப் படம் பிடித்தார்கள்.

''என்ன பெரியப்பா? கொழும்பிலுமா யுத்தம் நடக்குது.''

''எங்கும் எதுவும் நடக்கலாம். யுத்த அரக்கன் நாடு முழுவதும் தன் கால்களைப் பரப்பி நிற்கிறான். அதிஸ்டமுள்ளவர்கள் தப்பிக் கொள்ளலாம்.

இதோ பார் எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக லண்டன் திரும்ப முடியுமோ திரும்பிவிடு அவ்வளவு தான் சொல்வேன். யாழ்ப்

பாணத்தில் எந்தநேரத்திலும் எதுவும் நடக்கலாம் இராணுவம் இருக்கிறாங்க புலிகள் இருக்கிறாங்க மிதிவெடிகளும் கண்ணி வெடிகளும் நிறைய இருக்கு. சிவபூமியாக இருந்த யாழ்ப்பாணம் இப்போ யுத்த பூமியாக இருக்கு. மொத்தத்தில் யாழ்ப்பாணம் போரினால் சீரழிந்த பூமி. சுற்றி வளைப்புகளும் தேடுதல்களும் கைதுகளும் காணாமல் போவதும் சாதாரண நிகழ்ச்சி. தேசிய அடையாள அட்டை இல்லாமல் யாரும் தெருவில் இறங்கி நடக்கமுடி யாது. தேசிய அடையாள அட்டை போதாதென்று ஆமி அடையாள அட்டையும் புதிதாக அறிமுகமாகி இருக்கு. அரசாங்கத்தில் வேலை செய்யும் ஒருவர் தேசிய அடையாள அட்டை, ஆமி அடையாள அட்டை, அரசத் தொழில் அடையாள அட்டை மூன்றையும் கொண்டு திரிய வேண்டும்.

''சொந்த மண்ணிலேயே இவ்வளவு கெடுபிடி களா? நம்பவே முடியவில்லை பெரியப்பா.''

''யாழ்ப்பாணத்து மக்கள் இவ்வளவு துன்பத் தின் மத்தியிலும் மனம் தளர்ந்து விடவில்லை.

இழப்புகளையும் அழிவுகளையும் தாங்கிக் கொண்டு காலம் ஒருநாள் மாறும் தங்கள் எண்ணப் படி வாழ்வு மீண்டும் மலரும் என்ற நம்பிக்கை யோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.''

''சரி போய்ப் படுங்க விடிந்ததும் விமானத்தில் ஏறவேண்டும்.''

பெரியப்பா ரத்மலானை விமான நிலையத்தில் வைத்து ஏற்றிவிட்டார்.

விமானம் பலாலியைத் தொட்டபோது வானம் தூறல் போட்டுக் கொண்டிருந்தது. இராணுவமும் விமானப் படையினரும் பரவலாகக் காணப்பட்டார்கள். ஆயுதங்களுடன் அவர்களைக் காணச் சிறிது அச்சமாக இருந்தது.

யாழ்ப்பாணம் போக்குவரத்து சபை பஸ்ஸில் ஏறி நகருக்குள் வந்து சேர்ந்தார்கள்.

''தீபன்''

குரல் வந்த திசையைப் பார்த்தான்.

''நீங்க பெரியம்மா தானே.''

''உம் எப்படிக் கண்டு பிடிச்சீங்க?''

''அம்மா உன்படத்தை எனக்குக் கடிதத்தில் அனுப்பி இருந்தாள்.''

''உன் அம்மாவுக்குத் தான் பிறந்த மண் நினைப்பு இல்லாமல் போச்சு நீயாவது வந்தாயே. தாயை மறந்தாலும் தாய் மண்ணை மறக்கக் கூடாது என்று பெரியவங்க சொல்வாங்க. பிறந்து ஆறுமாசத்தில் லண்டன் போனாய் இப்போது தான் வருகிறாய். அம்மா அப்பா எல்லோரும் சுகமாக இருக்கிறாங்களா?''

''அவங்களுக்கு என்ன சந்தோஷமாக இருக்கிறாங்க. காசு அனுப்பினேன் கிடைச்சுதா அன்ரி.''

''ஓமடா தன்னோடு சண்டை போட்டு நீதான் காசு அனுப்பினதாகத் தங்கச்சி எழுதி இருந்தாள். வா வீட்டுக்குப் போவோம்.''

ஓட்டோ உரும்பிராயை நோக்கி ஓடியது.

''அடிக்கடி காசு கேட்டு எழுதியது தப்புத் தான்.''

''அன்ரி எங்களிடம் காசு வாங்கி வீண் செலவா செய்தீங்க. இல்லையே விமானக் குண்டு வீச்சினால் சிதைந்து போன வீட்டைத் திருத்தத் தானே. உடன் பிறந்த சகோதரியிடம் கேட்காமல் யாரிடம் கேட்கமுடியும்? அப்படிக்கேட்பதற்கு உரிமைஇருக்கு உங்களுக்கு. கொஞ்சம் வசதியாக இருக்கின்ற நாங்கள் உங்களுக்கு உதவி செய்வதால் ஒன்றும் குறைஞ்சு போயிட மாட்டோம்.

கொழும்பில் பெரியப்பா வரவேற்றார் இங்கே நீங்க உதவி செய்கிறீங்க. சொந்தங்கள் என்றால் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்து வாழணும். அது தான் அழகு.''

ஓட்டோவுக்கு காசைக் கொடுத்துவிட்டு உள்ளே வந்தார்கள்.

''என்ன அன்ரி வீடு இன்னும் திருத்தி முடியவில்லையா?''

''கொஞ்சம் கொஞ்சமாகத்தான் செய்து முடிக்கணும்.''

''காசு வேணும் என்றால் சொல்லுங்க.''

''காணும் அம்மா அனுப்பியது வங்கியில் இருக்கு.''

வெளியே போய்விடாதீங்க இராணுவ முகாமுக்குப் போய் வதிவிட விண்ணப்பப் படிவத்தில் உங்க பெயரைப் பதிந்து கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் சுற்றி வளைப்பின்போது தேவையில்லாத பிரச்சினைகள் ஏற்படும்.

குடும்ப அட்டையில் உங்க இரண்டு பேரின் பெயர்களும் பதியாமல் இருந்தால் சுற்றி வளைப்பின்போது இரண்டு பேரையும் முகாமுக்குக் கொண்டு போய் விடுவாங்க. பிறகு வெளியே எடுப்பது ரொம்பச் சிரமம். சிலநேரம் காங்கேசன்துறை தடுப்பு முகாமுக்கு அனுப்பி விடுவாங்க பிறகு ஒன்றுமே செய்யமுடியாது.''

''என்ன அன்ரி இப்படிச்சொல்கிறீங்க''

கிராம அலுவலரிடம் உங்க இரண்டுபேரினுடைய படத்தையும் கொடுத்து உறுதிப்படுத்தி இராணுவ முகாமில் தற்காலிக அடையாள அட்டை வாங்க வேண்டும். யாழ்ப்பாணம் ஒரு இராணுவ மயப்படுத்தப்பட்ட பூமி. எல்லோரும் கைதிகள் போலத்தான், கடலால் சூழப்பட்ட யாழ்குடா ஒரு

திறந்த வெளிச் சிறைச்சாலை இதற்குமேல் விளக்கம் தேவையில்லை லண்டன் திரும்பும்வரை அவதானமாக நடந்து கொள்ளுங்க.''

அன்ரி சமையல் அறைக்குள் சென்றாள்.

''யோகன் யாருக்குமே நாங்க வந்த காரணத்தைச் சொல்லாதே.''

''நான் சொல்லமாட்டேன் நீ சொல்லாமல் இருந்தால் சரி.''

அன்ரியுடன் இராணுவ முகாமுக்கு சென்ற யோகனும் தீபனும் இராணுவ அதிகாரியுடன் சரளமாக ஆங்கிலத்தில் உரையாடினார்கள். முழுவிபரங்களையும் கேட்ட அதிகாரி இருவருக்கும் தன்கையெழுத்துப் போட்டு கடிதங்களைக் கொடுத்தார். அந்தக் கடிதம் சிங்களத்தில் எழுதி இருந்தது. அவர்களால் புரிந்து கொள்ளவே முடியவில்லை. அந்த அதிகாரியிடமே ஆங்கிலமொழிப் பெயர்ப்பைக் கேட்டுக் கொண்டான்.

வீட்டுக்கு வந்ததும் சாப்பாட்டை முடித்துக் கொண்டு புறப்பட்டார்கள்.

''அன்ரி வெளியே போய் வருகிறோம்.''

''கவனம் எல்லா முகாம்களுக்கு முன்னேயும் இறங்கி பின் ஏறிப் போங்க. உங்களுக்கு முன்னே

போகின்றவர்கள் எப்படிச் செயல்படுகின்றார் களோ அதே போல் நீங்களும் செய்யுங்க. மாலை ஐந்து மணிக்குப் பிறகு வெளியே நிற்கக் கூடாது முன்பே வீட்டுக்கு வந்திடுங்க காசு இருக்குத் தானே.''

''ஓம் இருக்கு.''

பலாலி வீதியில் இராணுவ வாகனங்கள் கண் ணை மூடிக்கொண்டு பறந்தன. தூர இராணுவ வாகனத்தைக் கண்டதும் மக்கள் ஒதுங்கினார்கள்.

யுத்த அரக்கன் கோரப்பற்களால் யாழ்ப் பாணத்தையே கடித்துக் குதறிய அடையாளங்கள் கண்களில் பளிச்சென்று தெரிந்தது நெஞ்சத்தை வாட்டியது. சில இடங்களில் ஆட்களின் நடமாட் டமே இல்லை. மயான அமைதியாக இருந்தது. வலிகாம இடப்பெயர்வின் போது வலிகாமம் முழுவ துமே இப்படித்தான் பேய்கள் உலாவும் பூமியைப் போல் இருந்திருக்கும்.

''தீபன் என்ன யோசனை? எதுவுமே பேசா மல் வருகிறாய்.''

''நாம் பிறந்த மண்ணின் நிலைமையைப் பார்த்து உனக்கு வருத்தமாக இல்லையா?''

''கொஞ்சம் நில்லு இந்தக் கோயிலைப் பார்.''

''இல்லை இது பெரிதாக இருக்கு.''

''வீதியின் இரண்டு பக்கமும் பார்வையை ஓட விட்டுக் கொண்டு நடந்தார்கள். ஒழுங்கைகளுக்குள்ளேயும் போய்ப் பார்த்தார்கள்.

மூன்று நாளாகக் காலை தொடக்கம் மாலை வரை அலைந்து திரிந்தார்கள். அந்தக் கோயிலைக் கண்டு பிடிக்கவே முடியவில்லை. மூன்று நாளும் சோர்வோடும் ஏமாற்றத்தோடும் வீட்டுக்குத் திரும்பினார்கள்.

''யோகன் இப்படிச் செய்து பார்ப்போமா?''

பிராமணக் குருக்கள் ஒருவரிடம் இந்தக் கோயில் படத்தைக் காட்டிக் கேட்டுப் பார்ப்போமா?''

''வெரி குட் ஐடியா. நாளை காலை பக்கத்தில் இருக்கும் கோயில் ஐயரிடம் இந்தப் படங்களைக் காட்டி கேட்டுப் பார்ப்போம்.''

விடிந்ததும் படங்களை எடுத்துக் கொண்டு பக்கத்தில் உள்ள கோயில் ஐயரிடம் வந்தார்கள்.

''ஐயா இந்தப் படத்தில் உள்ள கோயில் எங்கே இருக்கிறது?'' என்று கேட்டார்கள்.

அவரால் சொல்ல முடியவில்லை.

''இந்த ஆலமரம் தாமரைக்குளம் எங்கே இருக்கிறது என்று தெரியுமா?''

இந்தச்சுற்று வட்டாரத்தில் இந்தப் படத்தில் உள்ளது போல எங்கும் இல்லை. நீங்க வேறு இடங்களில் போய் விசாரிச்சுப் பாருங்க.''

படங்களை வாங்கி பத்திரப்படுத்திக் கொண்டு சைக்கிளில் புறப்பட்டார்கள்.

''நீண்ட தூரம் வந்த பின்புஒருகோயில் முன்பு ஐயர் ஒருவர் நின்றார்.

இறங்கி அவருக்குப் படங்களைக் காட்டி கேட்டார்கள்.

''இது கொடித்தம்பம் இல்லாத சிறிய கோயில் எனக்குத் தெரியவில்லை. நீங்க நேரேஇணுவிலுக்குப் போங்க அங்கே நடராஜக்குருக்கள் வீடு எதுஎன்று கேளுங்க எவரும் காட்டுவாங்க. எல்லாக் கோயில் கும்பாபிஷேகங்களுக்கும் அவரை அழைப்பார்கள். அவருக்கு அநேகமாக இந்தக் கோயில் எங்கே இருக்கென்று தெரிந்திருக்கும்.

''இணுவில் எங்கே இருக்கு?''

''எதிரே இருக்கின்ற சந்தியால் மேற்கே திரும்பிப் போங்க. அதுநேரே காங்கேசன்துறை வீதியை போய் சந்திக்கும் காங்கேசன்துறை வீதியால் வடக்கே இரண்டு மைல் போங்க. தூரம் கொஞ்சம் கூட குறைய இருக்கும். இணுவில் சந்திவரும் அங்கே விசாரித்துக் குருக்களின் வீட்டைக் கண்டுபிடிக்கலாம்.''

''ரொம்ப நன்றி ஐயா.''

''கொக்குவிலை இரரணுவம் சுற்றி வளைச் சிருக்கு பார்த்துப் போங்க.''

''சரி ஐயா.''

''தம்பி எங்கே போறீங்க?'' ஐம்பது வயது மதிக்கத்தக்க ஒரு பெண் கேட்டாள்.

சைக்கிளை விட்டு இறங்கினார்கள்.

''இணுவிலுக்குப் போகிறோம்.''

''கொக்குவிலை இராணுவம் சுற்றி வளைச்சி ருக்கு போனால் சந்தியில் இருத்தி வைச்சிடுவார்கள். நீங்க இந்த ஒழுங்கையால் போனால் இணுவிலுக் குப் போகலாம் கேட்டுக் கேட்டுப் போங்க. இணு வில் எங்கே?

''நடராஜக் குருக்கள் வீட்டுக்கு.''

''அம்மா நடராஜக் குருக்களையும் இராணுவம் சந்தியில் மறிச்சு வைச்சிருக்கு.'' என்றாள் அந்தப் பெண்ணின் மகள்.

''பரவாயில்லை இங்கே நிற்காதீங்க நடராஜக் குருக்கள் வீட்டில் போய் அங்கேயே இருங்க அது தான் நல்லது. ஆமி கண்டால் கூட்டிக் கொண்டு போயிடுவாங்க.''

''சரியம்மா.''

வயசான அம்மாவை விசாரித்து நடராஜக் குருக்கள் வீட்டுக்கு வந்து அவருக்காகக் காத்திருந் தார்கள்.

ஒரு மணிக்கு குருக்கள் வந்தார்.

கேள்விக் குறியுடன் இருவரையும் பார்த்தார்.

''உங்களிடம் தான் வந்தோம் ஐயா.''

''சொல்லுங்க என்ன விசயம்?''

''இந்தப் படத்தில் உள்ள கோவில் எங்கே இருக்கிறது என்று சொல்லமுடியுமா?''

பக்கத்தில் ஒரு ஆலமரமும் தாமரைக்குளமும் இருக்கா?''

'ஓம்' இதோ இந்தப் படங்களையும் பாருங்க.

இந்தக் கோவில் கொக்குவிலில் தான் இருக்கு. நீங்க இப்படியே பிரதான வீதியால் தெற்கே போங்க

நல்லூர் பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் ஐந்தாம் கிளைக்கு பக்கத்தினால் ஒரு ஒழுங்கை போகிறது அது வளைஞ்சு வளைஞ்சு போகுது. அந்த ஒழுங்கையால் போனால் கோயில் வரும்.''

''நன்றி ஐயா.''

''போய் வாங்க.''

குருக்கள் சொன்னபடியே ஒழுங்கையால் வந் தார்கள்.

''அதோ பார் தீபன் நீ வரைந்ததைப் போலவே கோயில் இருக்கு.''

தீபனின் மனம் துள்ளியது.

தலைக்குள் ஞாபகங்கள் சுழன்றன.

''இதே கோவில் வீதியில் ஓடி ஆடி விளையாடி இருக்கிறேன்.

அதோ அந்தத் தாமரைக்குளத்தருகே தான் அவளைத் தினமும் சந்திப்பேன் இந்த ஆலமரத்தின் கீழேதான் என்கையைப் பிடித்துக்கொண்டு அழுவது போல் கனவு கண்டேன். அப்போ என் கைகளால் அவள் கண்ணீரைத் துடைத்தேன். கனவு பொய் இல்லை யோகன் அந்தப் பெண்ணை நிச்சயம் கண்டுபிடிப்போம். இதோ இந்த ஐயர் வீட்டில் தான் கடைசியாக அவளைக் கண்டு கதைத்தேன். அதன் பிறகு அவளுக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை.''

''அவளுக்கு நடந்தது உனக்குத் தெரியாமல் இருக்கலாம். உனக்கு என்ன நடந்தது என்று சில வேளை அவளுக்குத் தெரிந்திருக்கலாம் இல்லையா?''

''அந்தப் பெண் இப்போ எங்கே இருப்பாள்?''

உயிருடன் இருந்தால் அவளுக்கு வயசு இப்போ கிட்டத்தட்ட நாற்பது வயது இருக்கலாம்.

நீ அப்படி யோசிக்கிறாயா? நான் நினைக்கி

றேன் அவளும் இறந்து மறுபிறப்பு எடுத்திருப்பாள். ஏன் என்றால் நாற்பது வயசுப் பெண்ணாக அவள் கனவில் வரவில்லை. பதினெட்டு பத்தொன்பது வயதுப் பெண்ணாகத் தான் வந்தாள்.''

''வா அந்தக் கோயில் வாசலில் இருப்போம்.''

''அந்த ஆலமரத்துக்குக் கீழ் போய் இருப்போம் காற்றோட்டமாக இருக்கும்.''

தாமரைக்குளத்தில் மலர்கள் அலைகளினால் அசைந்து கொண்டிருந்தன.

ஒரு முதியவர் சைக்கிளில் வந்து அவர்கள் அருகே இறங்கினார்.

''தம்பி! இந்தப் பக்கம் ஒரு பசுவும் கன்றும் போனதைப் பார்த்தீர்களா?''

''அதோ அங்கே நிற்கிறது?''

''ஓம் அது தான்.''

''கொஞ்சம் தாய்ப் பசுவை பிடித்துக்கொண்டு வந்து தருகிறாயா?''

''இடிக்குமா?''

''இல்லை சாதுவான பசு.''

எழுந்து போய் கயிற்றைப் பிடித்து இழுத்து வந்து கொடுத்தான்.

கோயில் தூணில் கட்டிவிட்டு அவர்களிடம் வந்தார்.

''தம்பி நீ எந்த ஊர்?''

''உரும்பிராய்.''

''உரும்பிராயா? இங்கே ஏன் வந்தீங்க. உன்னை எங்கேயோ பார்த்திருக்கிறேன். எங்கே என்றுதான் ஞாபகம் இல்லை?''

''தீபன் பரபரப்பானான்.''

''ஐயா எங்கே பார்த்தீங்க.''

''அது தான் தெரியவில்லை கொஞ்சம் பொறு யோசித்துச் சொல்கிறேன்.''

''விநாடிகள் கரைந்தன.''

''நீங்க என்ன தொழில் செய்தீங்க.''

''மாஸ்ரர்.''

''மாஸ்ரரா? அப்போ பள்ளிக்கூடத்திலேயா?''

''ஓம் இப்ப ஞாபகம் வந்திட்டுது. பள்ளிக்கூடத்தில் என் மாணவனாகப் படித்த வரதன் அப்படியே உன்னைப் போலத்தான் இருப்பான்.''

''என்ன பெயர் சொன்னீங்க? வரதனா?''

''ஓம் பின்னேரத்தில் என் வீட்டுக்கு ரியூசனுக்கு வருவான். அவன்கூட மாணவர்களும் மாணவிகளும் ரியூசனுக்கு வந்தாங்க. வந்த மாணவி ஒருத்தியும் வரதனும் ஒருவரை ஒருவர் விரும்பினாங்க.''

''அந்த மாணவி பெயர் என்ன ஸேர்?''

சிறிது நேரம் யோசித்தார்.

''ஞாபகம் இல்லை.''

''பிளீஸ் ஸேர் கொஞ்சம் யோசித்து சொல்லுங்க.''

''................................''

''ஆங் அவள் பெயர் பாரதி.''

''அப்படியா? பிறகு.''

''இவங்க இரண்டு பேரும் விரும்புகின்ற விஷயம் அந்தப் பிள்ளை வீட்டுக்கு தெரிஞ்சு எல்லோரும் கண்டிச்சிருக்கிறாங்க. அவள் வரதனோடு பழகுவதைத் தடுப்பதற்காக படிப்பதையே நிறுத்தி விட்டாங்க. கொஞ்ச நாள் செல்ல அந்தப் பெடியன் இந்தத் தாமரைக்குளத்தில் பிணமாக மிதந்தான் தற்கொலை செய்து கொண்டானோ இல்லை கொலை செய்தார்களோ தெரியவில்லை அவன் போய்ச் சேர்ந்திட்டான். அந்தப் பிள்ளை மாலை மாலையாகக் கண்ணீர் விட்டு அழுதாள். இரவு நேரத்தில் திடீர் திடீர் என்று எழுந்திருந்து வரதன் என்னைக் கூப்பிடுகிறார் நான் போகப்போகிறேன் போகப்போகிறேன் என்று சொல்லிக் கொண்டிருந்தாள்.

வரதன் இறந்து முப்பதாம் நாளோ முப்பத்தோராம் நாளோ தெரியவில்லை. இதே குளத்தல்

விழுந்து அந்தப் பிள்ளையும் இறந்து போனாள்.

வரதன் தன் பாரதியைக் கூட்டிக் கொண்டு போயிட்டான் என்று அவளின் செத்த வீட்டில் பேசிக்கொண்டார்கள். அப்ப நான் ஸ்கூல் மாஸ்ரராக இருந்தேன். இரண்டு பேருக்கும் நான் படிப்பித்தேன். அவன் A/L படிக்கும்போது இவள் O/L படிச்சாள்.

இரண்டு குடும்பத்திடமும் போய் இரண்டு உள்ளங்களையும் பிரிச்சிடாதீங்க சேர்த்து வையுங்க என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். வரதன் வீட்டில் அவன் படிப்பு முடிஞ்ச பிறகு பார்ப்போம் என்று சொன்னாங்க. ஆனால் பாரதியின் தாயும் தகப்பனும் சம்மதிக்கவே இல்லை. ஒன்றுக்கும் வழி இல்லாத பிச்சைக்காரக் குடும்பத்தில் எங்க பெண்ணைக் குடுக்கமாட்டோம் மீறி ஏதாவது நடந்தால் நடக்கிறதே வேறு என்று சொல்லி என்னையும் ஏசினாங்க.''

கடைசியில் இரண்டும் ஒன்றைத் தொடர்ந்து மற்றதும் போய்ச் சேர்ந்திட்டுது.

''செத்த பிறகுதான் இரண்டையும் சேர்த்து வைச்சிருக்கலாம் என்று பேசிக்கிட்டாங்க.''

தீபன் கண்களைத் துடைத்துக் கொண்டான்.

''ஏன் தம்பி நீ அழுகிறாய்?''

''பாவம் ஸேர் அநியாயமாகச் செத்துபோச்சு.''

''உனக்குத் தெரியுது எனக்கு விளங்குது பாரதி

யின் தாய் தகப்பனுக்கு புரியாமல் போச்சே.''

''பதினெட்டு, பத்தொன்பது வயது வரைக்கும் வளர்த்திட்டு திடீர் என்று இறந்து போவது அதுவும் குமர்ப்பிள்ளையாக இறந்து போவது கொடுமை தான்.

என்ன காரணத்துக்காக பாரதியின் வீட்டில் எதிர்ப்பு தெரிவிச்சாங்க.''

''எல்லாம் வரட்டுக் கௌரவம் தான்.''

''வரதன் குடும்பம்நல்லகுடும்பம்தான். ஆனால் கொஞ்சம் ஏழ்மை. புருஷன் இல்லாத கமலாசினி பிள்ளைகளை வளர்த்தாங்க.''

பால்காரியின் பெடியன்எங்கவீட்டுப் பெண்ணை விரும்புவதா என்ற போலி கௌரவம் தான்.

வரதனின் மரணம் தற்கொலையா? கொலையா?

பாரதி சாகிறதிற்கு நாலு நாள் முன்பு என் வரதன் தற்கொலை செய்யவில்லை கொலை செய்திட்டீங்க நான் என் வரதனிடமே போகிறேன் என்று சத்தமாகக் கத்தி இருக்கிறாள். பக்கத்து வீட்டு அம்மா என்னிடம் சொன்னாங்க.''

''வரதன் கெட்டிக்காரன் அநியாயமாகச் செத்துப் போனான். வரதன் குடும்பம் கஷ்டப்பட்டது என்று பாரதிக்குத் தெரியும் வரதனுக்குத் தேவையான கொப்பிகள் புத்தகங்கள் எல்லாம் பாரதி

தான் வாங்கிக் கொடுப்பாள். என்னிடம் ரியூசனுக்கு வரதனை கொண்டு வந்து சேர்த்ததும் பாரதிதான். வரதனின் ரியூசன் பணத்தையும் பாரதிதான் என்னிடம் தருவாள். அவளுக்கு ரொம்ப இரக்கமனம் உம் எல்லாம் முடிஞ்சு போச்சு.''

''ஸேர் இது எந்த ஆண்டு நடந்தது?''

''ஞாபகம் வரமாட்டேன் என்கிறது கொஞ்சம் யோசித்துச் சொல்கிறேன்.''

''ஆயிரத்து தொளாயிரத்து ......................''

''சரி சரி எண்பத்து ஓராம் ஆண்டு தான் யாழ் பொதுசன நூலகம் காடையரால் எரிக்கப்பட்டது அந்த வருஷம் தான்.''

ஸேர் இரண்டு பேரும் எந்த ஸ்கூலில் படிச்சாங்க.

''பாரதி இந்துமகளிர் கல்லூரி யாழ்ப்பாணம்.''

''வரதன் கொக்குவில் இந்துக் கல்லூரி.''

''பழங்கதை கதைச்சு என்ன ஆகப்போகுது? சாப்பிடவில்லை வரட்டுமா?''

''ஸேர் நாங்களே பசுவையும் கன்றையும் கொண்டு வந்து தருகிறோம்.''

''நல்லது தம்பி.''

''ஸோர் உங்க பெயர்?''

''சிவலிங்கம். லிங்கம் மாஸ்ரர் என்றால் தான் ஊரில் தெரியும்.''

''வரதன் வீடு எங்கே இருக்கு ஸோர்?''

''வாங்க காட்டுகிறேன்.''

கொஞ்சத் தூரம் நடந்து வந்தார்கள்.

வலது பக்கம் கையை நீட்டி இதுதான் வரதன் வீடு.

தாழ்ந்த கூரையுடன் அமைந்த சின்ன வீடு. இந்த வீட்டில் தான் போன பிறப்பில் நான் வாழ்ந் தேன் என்று மனசுக்குள் கேட்டுக் கொண்டான்.

''வரதனின் தாய் இருக்கிறாங்களா?''

''வயசாயிட்டுது இருக்கிறாங்க.''

பார்க்க வேண்டும் போல் மனசு துடித்தது. கட்டுப் படுத்திக் கொண்டான்.

''பாரதி வீடு எங்கே இருக்கு ஸோர்?''

''மெயின் றோட்டில் இருக்கு. உப அஞ்சல் பணி மனைக்கு பக்கத்து வீடு பவளமல்லி மரம் பூச் சொரிந்து கொண்டே இருக்கும்.''

''இது தான் என்வீடு.''

மாட்டை வாங்கிக் கொண்டார்.

''சரி நாங்க வாறோம் சார்.''

மறுபடியும் இருவரும் கோயிலுக்கு வந்தார்கள்.

பார்த்தாயா அதிஸ்டத்தை ஒருவர்மூலம் எல்லா விபரங்களையும் அறிந்து கொண்டோம்.

அலைச்சல் இல்லாமல் முக்கால்வாசி விபரங்களை அறிந்து கொண்டோம். இப்போ முக்கியமாகத் தெரிய வேண்டியது பாரதி எங்கே இருக்கிறாள். அவளுடைய தற்போதைய பெயர் என்ன? இந்த இரண்டையும் தெரிந்து கொண்டால் வந்தவேலை முடிந்த மாதிரி.''

''எப்படிக் கண்டுபிடிக்கப் போகிறாய்?''

''சிக்கல் தான் ரொம்பச் சிக்கல் ஆனால் எப்படியும் கண்டுபிடிக்க வேண்டும்.''

''லிங்கம் மாஸ்ரர் பேச்சில் இருந்து ஒருவிஷயம் தெளிவாயிட்டுது.''

''என்ன?''

''என்னை எங்கேயோ பார்த்திருக்கிறேன் என்று ஆரம்பத்தில் சொன்னார் இல்லையா?''

''நான் கவனிக்கவில்லை.''

அதில் இருந்து என் உருவத்தோற்றமும் வரதனின் உருவத்தோற்றமும் ஒன்றுதான் என்று தெளிவாகி விட்டது. இப்போ நான் வரைந்துகொண்டு வந்த கனவுப் பெண்ணின் படமும் பாரதியின் படமும் ஒன்றா என்பதை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.''

''பாரதியின் படத்தை எங்கே தேடுவது?''

''பாரதி இந்து மகளிர் கல்லூரியில் படித்ததாக லிங்கம் மாஸ்ரர் சொன்னார் இல்லையா?''

''ஓம்.''

''இந்து மகளிர் கல்லூரிக்குப் போய் எண்பதாம் ஆண்டு கல்லூரி மலரை எடுத்துப் பார்த்தால் சில நேரம் அவள் படம் கிடைக்கலாம்.''

''அவ்வளவு பழைய ஆண்டு மலரை ஸ்கூலில் வைச்சிருப்பாங்களா?''

''சிலநேரம் லைபிரரியில் சேர்த்து வைச்சிருப்பாங்க. எதற்கும் ஸ்கூலுக்குப் போய் முயற்சி செய்து பார்ப்போம்.''

''இப்போ நேரம் நாலு மணி. நாளைக்குப் ஸ்கூலுக்குப் போவோம்.''

''எழுந்திரு பாரதியின் வீட்டைப் பார்த்து விட்டு உரும்பிராய்க்குப் போவோம்.''

.................................

''தீபன் இடதுபக்கம் பார் பவளமல்லி மரம் இருக்கு இது தான் பாரதியின் வீடு.

''பெரிய வீடு தாண்டா திமிர் இருக்கத்தான் செய்யும்.

ஒருமுறையாவது வரதனின் அம்மாவைப் பார்த்திட வேண்டுமடா.''

''அதற்கென்ன பார்த்தால் போச்சு.''

''நாளைக்கு?''

வேண்டாம் நாளை இந்து மகளிர் கல்லூரிக்குப் போகவேண்டும். இன்னொருநாள் பார்ப்போம்.

''போகன் நில்லு இதுதான் இந்து மகளிர் கல்லூரி.''

சைக்கிளை விட்டு கீழே இறங்கினார்கள்.

வாச்சர் என்ன என்பதுபோல் பார்த்தான்.

''பிறின்ஸிப்பலைப் பார்க்க வேண்டும்.''

கதவைத் திறந்தான்.

''நேரே போங்க.''

''தீபன் நான் ஒன்றும் பேசமாட்டேன். நீயே எல்லாவற்றையும் கவனித்துக் கொள்.''

''டோன் வொறி. பிறின்ஸிப்பலுடன் பேச்சு முழுவதும் ஆங்கிலம் தான் லைபிரரியில் இருந்து எண்பதாம் ஆண்டு கல்லூரி மலர் பிறின்ஸிப்பல் அறைக்கு வரும் பாரேன்.''

''எக்ஸ்கூஸ்மி மெடம்.''

''யேஸ் கம் இன் ரேக் யுவர் சீற்.''

''தாங்க் யூ மெடம்.''

அவனுடைய சரளமான ஆங்கில உச்சரிப்பைக் கேட்டு அதிபர் அவனை உற்றுப்பார்த்தார்.

ஆங்கிலத்திலேயே தொடர்ந்து உரையாடினான்.

''நாங்கள் லண்டனில் இருந்து வருகிறோம். என் அம்மா இதே கல்லூரியில் தான் படித்தார்கள். எண்பதாம் ஆண்டு கல்லூரி மலரில் அம்மாவின் படம் இருப்பதாகச் சொன்னாங்க தயவு செய்து அந்த ஆண்டு மலரைத் தந்து உதவினால் நன்றி உடையவனாக இருப்பேன்.''

அழைப்பு மணியை அடித்தார் அதிபர்.

பியோன் வந்தான்.

''எண்பதாம் ஆண்டு மலரை நூலகத்தில் இருந்து எடுத்து வா.''

இருவருக்கும் தேனீர் வந்து குடித்தார்கள். அரைமணித்தியாலத்தில் கல்லூரி மலர் வந்தது. ஒவ்வொரு தாளாகப் புரட்டிப் பார்த்தார்கள் குழுப்படத்தை உன்னிப்பாகப் பார்த்தார்கள்.

''யோகன் இதோ இந்தப் படம்?''

''ஓ கே அதே தான் பெயரைப் பார்.

எண்ணிப் பார்த்து பெயரைப் பார்த்தார்கள்.

ஜெயபாரதி. ஓ கே இதுதான்.''

''மெடம் இந்தப் படத்தை போட்டோப் பிரதி எடுத்து விட்டுத் திருப்பிக் கொண்டு வந்து தரு கிறோம்.''

''சரி.''

''தாங்ஸ் மெடம்.''

கல்லூரி மலருடன் சில அடிகள் வைத்திருக்க மாட்டான் எதிரே வரும் பெண்ணைக் கண்டதும் அப்படியே நின்று விட்டான்.

எதிரே வந்த இரண்டு பெண்களில் ஒருத்தியும் தீபனைப் பார்த்ததும் சிலையாகிப் போனாள்.

''வித்யா என்ன நின்றுவிட்டாய்?

மதுரா பேசியதே அவள் காதில் விழவில்லை.

சுதாகரித்துக் கொண்டான் தீபன்.

நேரே வித்யாவின் எதிரே வந்து நின்றான்.

எக்ஸ்கூஸ் மீ மிஸ்.

சுய நினைவடைந்தாள் வித்யா.

''உங்க கூடக் கொஞ்சம் பேசணும்.''

வித்யா என்று அழைத்தாள் மதுரா.

''அவர் மதுரா'' என்றாள்.

மதுராவுக்குப் புரியவில்லை.

''தெரியுமா உனக்கு.''

''தெரியும் அவர் தான்.''

பளிச்சென்று மூளையில் தட்டியது.

மதுராவுக்கும் அதிர்ச்சியாக இருந்தது.

எக்ஸ்கூஸ்மி மிஸ் என்றான் தீபன் மீண்டும்.

ஸாரி இப்ப ஸ்கூல் நேரம் வெளியே வர விட மாட்டாங்க. பிறின்சிப்பலிடம் அனுமதி கேட்டுக் கொண்டு வருகிறோம் வெளியே காத்திருங்க.''

''தாங்யூ மிஸ். மறந்திடாதீங்க பார்த்துக் கொண்டிருப்போம்.''

''நீங்க போங்க நிச்சயம் வருவோம்.''

தீபனும் யோகனும் வெளியே நடந்தார்கள்.

''வித்யா கனவில் வாறவனாடி?''

''ஓம்'' வித்யா இன்னும் ஆச்சரியத்தில் இருந்து விடுபடவில்லை.

இவ்வளவு விரைவாக வந்திட்டான்.

நான் இங்கே படிக்கிறேன் என்று எப்படிக் கண்டு பிடித்தான்?''

''அவனும் உன்னைக் கண்டவுடன் திகைத்துப் போய் நின்றதைப் பார்த்தால் அவனும் எதிர்பாரா மல் தான் வந்திருக்கிறான்.''

''இப்போ என்ன செய்வது?''

''பிறின்ஸிப்பலிடம் பொய் சொல்லி விட்டு வெளியே போவோம். அவங்க இரண்டு பேரும் காத் திருப்பாங்க.

''சரி வா.''

''டேய் தீபன் எவ்வளவு அதிஷ்டமடா!''

இவ்வளவு வேகமாகச் சந்திப்போம் என்று நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.''

''நீ கீறிய படத்திலும் பார்க்க அவள் நேரில் எவ்வளவு அழகா இருக்கிறாளடா. நீ அதிஸ்டக் காரன் தான். லண்டனுக்கு கூட்டி வரத்தானே முடிவு செய்திருக்கிறாய்.''

''நிச்சயமாக அதற்கு முதல் இன்னும் நிறைய வேலைகள் இருக்கு. முதலில் அவள் வரட்டும் நிறை யப் பேச வேண்டி இருக்கு.''

''அதோ வாறங்க.''

''வாங்க மிஸ்.''

தீபனைப் பார்த்ததும் வித்யாவின் மனம் கிழு கிழுத்தது.

எவ்வளவு அழகாக இருக்கிறார்.

''மிஸ் உங்ககூட கொஞ்சம் தனியா பேசணும் தப்பா நினைக்காதீங்க.''

''இவள் என் சிநேகிதி பெயர் மதுரா.''

''இவன் பெயர் யோகன் என் நண்பன்.''

''நீங்க.''

''ஸாரி என் பெயர் சிவதீபன்.''

''இவள் பெயர் வித்யா.''

''ஒரு இடத்தில் இருந்து கதைப்போமா?''

ஓயெஸ் பக்கத்தில் அன்ரி வீடு இருக்கு. அங்கே போய் பேசிக்கலாம்.''

..................—..............

அன்ரி வீட்டுக்கு வந்தார்கள்.

''மிஸ் வித்யா உங்களை இவ்வளவு விரைவாகச் சந்திப்பேன் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. மன்னிக்கணும் என்னைத் தெரிகிறதா உங்களுக்கு.''

''தெரியும்.''

''எப்படி?''

''தினமும் கனவில் வருவீங்க.''

''நீ கதைத்துக் கொண்டிரு வெளியில் போய் வருகிறேன்'' என்றபடி வெளியேறினான் யோகன்.

மதுராவும் எழுந்தாள்.

''பரவாயில்லை மதுரா நீ இரு.''

சிரித்து விட்டு உள்ளே போனாள்.

இரண்டு பேருக்கும் இங்கிதம் இருக்கு.

''மிஸ் வித்யா.''

''மிஸ் தேவையில்லை.''

ஓ கே வித்யா ஸ்கூலில் என்னைப் பார்த்துத்

திகைத்துப் போய் நின்றதும் என்னை நீங்க கண்டு கொண்டீங்க என்று புரிந்து கொண்டேன்.

''நீங்களும் என்னை கனவில் கண்டீங்களா!''

''உம்! இதோ பாருங்க கனவில் வந்த உங்களை படமாக வரைஞ்சிருக்கிறேன்.''

படத்தைப் பார்த்து விட்டு ஆச்சரியத்துடன் தீபனைப் பார்த்தாள். ''நீங்களா வரைந்தது?''

''உம்.''

''உங்களுக்கு படம் வரைய வருமா!''

''ஏன்? இந்தப் படத்தைப் பார்த்து நம்பவில்லையா!''

''அதற்காக இல்லை இவ்வளவு குறைஞ்ச வயசில் வரைய வந்திருக்கே அதுதான் ஆச்சரியமாக இருக்கு.''

''படம் நல்லா இருக்கா?''

''என்னை அப்படியே வரைஞ்சிருக்கிறீங்க.''

''படத்தில் உள்ளதிலும் பார்க்க நேரில் நீங்க ரொம்ப அழகா இருக்கிறீங்க.''

நாணச் சிரிப்போடு தலை கவிழ்ந்தாள்.

''ஸாரி! தப்பா சொல்லிட்டேனா?''

''நோ நோ அப்படி ஒன்றும் இல்லை.''

''வித்யா.''

அவன் விழிகளை நேரே சந்தித்தாள்.

''இப்போ கேட்க்கப் போகின்ற கேள்வியைத் தப்பா எடுத்துக் கொள்ளக் கூடாது எனக்குச் சார் பாக பதில் சொல்ல வேண்டும் என்றும் கட்டாயம் இல்லை. சார்பாகப்பதில் சொன்னால் சந்தோஷப் படுவேன்.''

''கேளுங்க.''

தயங்கினான்.

''தீபன் நீங்க என்ன கேட்கப் போறீங்க என்று நான் சொல்லட்டுமா?''

''என்னை உங்களுக்குப் பிடிச்சிருக்கா என்று கேட்க விரும்புறீங்க சரிதானே?''

''வித்யா!''

''இந்தக் கேள்விக்கு அவசியமே இல்லை. ஸ்கூ லில் உங்களைப் பார்த்ததுமே உங்களுடன் பேசு வதற்கு தேடி வந்ததே நான் உங்களை விரும்பிய தால் தான்.''

''தாங்ஸ் வித்யா!''

''நோ நோ நான் தான் உங்களுக்கு தாங்ஸ் சொல்லணும் என்னைத் தேடி இவ்வளவு தூரம் வந்ததற்கு.''

''கேட்க மறந்திட்டேன் நீங்க எங்கே இருந்து வாறீங்க?''

''லண்டனில் இருந்து.''

''லண்டனா? என்ன சொல்லுறீங்க!''

''லண்டன் தான்.''

''அவ்வளவு தூரத்தில் இருந்தா வந்தீங்க? நீங்க லண்டனில் இருக்கும் போதா உங்க கனவில் வந்தேன்? என்னால் நம்ப முடியவில்லை தீபன். அவ்வளவு தூரம் என்னால் எப்படி வரமுடிஞ்சுது. ஆச்சரியமா இருக்கே. நான் யாழ்ப்பாணத்தில் ஏதோ ஒரு ஊரில் தான் இருப்பீங்க என்று நினைத்துக் கொண்டிருக்கிறேன்.''

வித்யா உருவம் வேறு அதன் நிழல் வேறு. உருவம் இல்லாவிட்டால் நிழல் இல்லைத்தான் ஆனால் உருவத்தைத் தொட்டு உணரலாம். நிழலைத் தொட்டு உணரலாமா?''

''இல்லை''

''இப்ப பாருங்க உங்க உருவத்தை நிழல் படமாக கமராவால் எடுக்கலாம். அதை எல்லோருமே பார்க்கலாம். ஆனால் ஒவ்வொருவரின் கனவில் வரும் உருவங்களைப் படம் பிடிக்கலாமா? இல்லை ஒவ்வொருவரும் காணும் கனவுகள் அவர்களுக்கு மட்டுமே தெரியும். மற்றவர்களுக்குத் தெரியாது. முடிந்தால் சொற்களால் உருவத்தை காட்சிகளை

வருணிக்கலாம். அந்த வருணனைகளை கனவில் வந்தது போல் அச்சொட்டாக மற்றவர்களால் உரு வகப் படுத்தவே முடியாது.

இதற்கு நல்ல உதாரணம் ஒரு கோயில் கும்பா பிஷேகம் நடக்கும்போது வானொலியில் நேரடி அஞ்சல் செய்யும்போது வர்ணனைகளை நாங்கள் கற்பனை செய்து கொண்டு பார்க்கிறோம். ஒவ் வொருவரும் ஒவ்வொரு விதமாக கற்பனை செய்து கொள்வார்கள். அதே கும்பாபிஷேகத்தை நேரடி யாக தொலைக்காட்சியில் அஞ்சல் செய்தால் கற் பனைக்கே இடம் இல்லை.''

''லண்டனில் இருந்து ஒலிபரப்பாகும் வானொ லியை யாழ்ப்பாணத்தில் இருந்து கேட்கிறீங்க. லண் டனில் இருந்து ஒலிபரப்பாகும் தொலைக்காட்சியை யாழ்ப்பாணத்தில் இருந்தே பார்க்கலாம். இது எல் லாம் விஞ்ஞானம். விஞ்ஞானத்துக்கு அப்பாற்பட்ட எவ்வளவோ விஷயங்கள் நிறைய இருக்கு,''

''அதில் ஒன்றுதான் நான் உங்களை கனவில் கண் டதும் நீங்க என்னைக் கனவில் கண்டதும். இது விஞ்ஞானத்திற்கு அப்பாற்பட்டது. மனங்கள் சம் பந்தப்பட்டது மன உணர்வுகள் சம்பந்தப்பட்டது. ஆன்மா சம்பந்தப்பட்டது.''

''எப்படி இவ்வளவு தெளிவா பேச முடியுது உங்களால்?''

''அதற்கு நீங்கள் தான் காரணம்.''

''நானா?''

''நீங்க கனவில் வரத் தொடங்கியதும் கனவு கள் பற்றியும் மறுபிறப்பு பற்றியும் லண்டனில் இருந்து வெளியாகும் சஞ்சிகைகளில் ஆராய்சிக் கட்டுரைகளை நிறையவே படித்தேன். நூலகங்களில் ஏறி இறங்கி புத்தகங்களை எடுத்து வந்து படித் தேன்.''

''நீங்களும் நானும் கனவில் வருவதற்குக் காரணம் என்ன என்று நினைக்கிறீங்க மறுபிறப்பா?''

''நிச்சயமாக மறுபிறப்புதான். போன ஜென்மத்தில் நீங்களும் நானும் ஒருவரை ஒருவர் விரும்பினோம் ஆனால் வாழாமலே இறந்து போனோம்.''

''அப்படியா?''

''போன ஜென்மத்தில் உங்க பெயர் பாரதி, என் பெயர் வரதன்.''

''என்ன? என்ன சொன்னீங்க? பாரதி, வரதனா''

''உம்.''

''தீபன் இந்த இரண்டு பெயரையும் நயினா தீவில் ஒரு பாறாங்கல்லில் ''ர''னா இரண்டு பெய

ருக்கும் பொதுவாக வைத்து கிடையாகவும் நிலையாகவும் எழுதி இருந்ததைப் பார்த்தேன்.''

''வெரி குட் வித்யா. நீங்க அந்தக் கல்லில் இரண்டு பெயர்களையும் பார்த்தது ஆச்சரியம் தான்.

சென்ற மாதம் நயினாதீவுக்குப் போயிருந்தேன் மதுராவின் குடும்பத்தோடு தான். அங்கு ஒரு வீட்டில் தான் தங்கியிருந்தோம். பக்கத்தில் கடற்கரை பொழுது போக்காக நடந்தேன். தூரத்தே ஒரு பாறாங்கல்லைப் பார்த்ததும் மனம் அங்கே போ போ என்று மீண்டும் மீண்டும் சொல்லிச்சு. மதுரா அவ்வளவு தூரம் போக வேண்டாம் என்று தடுத்தாள். ஆனால் என் மனம் போ போ அன்று சொல்லிச்சு. அந்தப் பாறாங்கல்லுக்குக் கிட்டப் போய் ஏறி இருந்தேன். பிறகு இறங்கி அந்தப் பாறாங்கல்லைச் சுற்றி வந்தபோது தான் பாரதி, வரதன் என்ற பெயர் கண்ணில் பட்டுது.''

''என்னத்தால் எழுதி இருந்தாங்க?''

''கூரான ஆயுதத்தால் ஆழமாக எழுதி இருந்திச்சு. அப்போ யாராவது இரண்டு லவேஸ் என்று தான் மதுரா சொன்னாள். அது நானாக இருப்பேன் என்று நினைக்கவில்லை.''

''பாரதியும், வரதனும் தான் போன ஜென்மத்தில் எங்கள் இருவருடைய பெயர்கள் என்று எப்படி தெரியும் உங்களுக்கு?''

''தண்ணீர் விடாய்க்கு கொஞ்சம்..................

''இருங்க எடுத்து வாறேன்'' என்றபடி உள்ளே போனாள்.''

மதுரா தேனீரோடு வந்தாள்.
''மிஸ் மதுரா நீங்களும் இருங்க,''

''பரவாய் இல்லை.'' உள்ளே போக எத்தனித்தாள்.''

''மிஸ் மதுரா நாங்க ஒன்றும் வித்தியாசமா கதைக்கவில்லை. கனவு, மறுபிறப்பு இவைகளைப் பற்றித்தான் கதைக்கிறோம் இருங்க.''

மதுரா கதிரையில் அமர்ந்தாள்.

''மிஸ் மதுரா இதோ பாருங்க நான் வரைந்த வித்யாவின் படம்.''

''ஓ ரொம்ப நல்லா வரைஞ்சிருக்கிறீங்க.''

''வித்யா இந்தப் படத்தைப் பாருங்க.''

''அட இந்தக் கோயிலும் என் கனவில் வந்திச்சு.''

''இதைப் பாருங்க.''

''இந்த ஆலமரம் இந்தத் தாமரைக்குளம் கூட கனவில் வந்திச்சு.''

''நீங்க ஒரு ஆட்டிஸ்ட் என்றபடியால் வரைஞ்சிட்டீங்க என்னால் முடியவில்லை.''

இந்தப் படங்களை எல்லாம் எடுத்துக்கொண்டு லண்டனில் இருந்து புறப்பட்டு கொழும்பில் இறங்கி யாழ்ப்பாணம் வந்தோம்.''

வந்த உடனேயே இந்தக் கோயிலைத் தான் தேடினோம். இரண்டு நாள் கஷ்டப்பட்டு அலைஞ்சு திரிஞ்சு ஒரு பிராமணக் குருக்கள் மூலம் கண்டுபிடிச்சோம்.''

''இந்தக் கோவில் எங்கே இருக்கு?''

''கொக்குவிலில் தான்.''

''எங்கள் அதிஷ்டம் பாரதிக்கும் வரதனுக்கும் ரியூசன் சொல்லிக் கொடுத்த லிங்கம் மாஸ்ரரைச் சந்தித்தோம். அவர் தான் நடந்த எல்லாவற்றையும் சொன்னார். அவர் பேச்சில் இருந்து தான் பாரதி, வரதன் இரண்டு பேரையும் தெரிய முடிந்தது. ஆனால் எனக்கு முன்னே நீங்க நயினாதீவில் பாறாங்கல்லில் தெரிஞ்சு கொண்டீங்க.''

''லிங்கம் மாஸ்ரர் என்ன சொன்னார்?''

''பாரதி ஓ.எல் படிக்கும்போது வரதன் ஏ.எல் படிச்சிருக்கிறான். இருவரும் விரும்பி இருக்கிறாங்க பாரதி வீட்டில் விஷயம் தெரிஞ்சு அவளைக்கண்டிச்சு பள்ளிக்கூடத்துக்கு விடாமல் தடுத்திட்டாங்க. வர

தனுக்கு பலவழிகளில் பாரதி உதவி இருக்கிறாள். ஒருநாள் வரதன் கோயில் தாமரைக்குளத்தில் இறந்து மிதந்தான். ஒரு மாதம் கழித்து பாரதியும் அதே தாமரைக்குளத்தில் இறந்து மிதந்தாள்.''

''இரண்டு பேரும் தற்கொலை செய்திட்டாங்களா?''

''பாரதி தற்கொலை செய்திருக்கிறாள். ஆனால் வரதன் கொலை செய்யப்பட்டிருக்கிறான் என்று தான் மாஸ்ரர் சொன்னர்.''

''கொலையா? யார் செய்தது? ஏன் செய்தாங்க?''

''யார் செய்தது என்று தெரியாது.''

''வரதன் குடும்பம் ஏழை. தாய் பால் விற்றுத் தான் வாழ்க்கை நடத்தினதாக மாஸ்ரர் சொன்னார். பாரதியின் குடும்பம் நல்ல வசதியானது இந்த ஏற்றத் தாழ்வினால் பாரதியின் சொந்தக் காரங்க யாராவது கௌரவத்திற்காக வரதனைக் கொலை செய்திருக்கலாம்.''

''மாஸ்ரரின் பேச்சுப்படி வரதன் மற்றவர்களுடன் அதிகம் பழகமாட்டான் அதற்கு அவனுடைய குடும்ப ஏழ்மை காரணமாக இருந்திருக்கலாம். பாரதி அவனை நிறையவே நேசித்திருக்கிறாள். ரியூசன் காசு, கொப்பிகள், புத்தகங்கள் எல்லாம்

பாரதி தான் வரதனுக்குக் கொடுத்திருக்கிறாள். பாரதி கலகலப்பான சுபாவம் உள்ளவளாம். ஆன படியால் அவளுக்கு நிறையவே சிநேகிதிகள் இருந்திருப்பாங்க அவர்களில் ஒரு சிநேதியைக் கண்டு பிடித்தால் போதும் வெளிவராத மீதி விஷயங்களும் தெரியவரும்.''

''எப்படிக் கண்டுபிடிப்பது?''

''இதைப் பாருங்க எண்பதாம் ஆண்டு கல்லூரி மலர். இதில் பாரதியின் படம் இருக்கு. முதல்வரிசையில் ஏழாவதாக நிற்பவள் தான் பாரதி.''

''வித்யா உன்னை மாதிரியே இருக்கிறாள். இந்தக் குறூப் போட்டோவில் இருக்கும் ஒரு பிள்ளையை கண்டுபிடித்தால் போதும் அந்தப் பெண் மூலம் பாரதியின் உயிர்த் தோழி யார் என்று தெரிந்து கொள்ளலாம்.''

''நல்ல ஐடியா,''

''அந்தப் பெண்மூலம் பாரதி வரதன் பற்றிய சகல விபரங்களையும் அறிந்து கொள்ளலாம். நாங்கள் ஆண்கள். வீடுகளுக்குப் போய் விசார்ப்பது நல்லா இருக்காது. நீங்க முயற்சி செய்தால் கண்டு பிடிச்சிடலாம்.''

''சரி நாங்கள் கண்டுபிடிக்கிறோம்.''

''தாங்ஸ் நான் நாளை காலை வருகிறேன்.'' தீபன் எழுந்தான்.

''சாப்பிட்டுப் போங்க.''

''நோ தாங்ஸ் யோகன் வெளியே போயிருக்கிறான் சாப்பாட்டை வெளியே அவன்கூட வைத்துக் கொள்கிறேன்.''

''சாப்பிட்டு போங்க தீபன் பிளீஸ்.''

''ஓ கே யோகன் வந்தபிறகு சாப்பிடுவோம்.''

''யாழ்ப்பாணத்தில் எங்கே தங்கி நிற்கிறீங்க?''

''உரும்பிராயில் பெரியம்மா வீட்டில்.''

''அம்மா அப்பாவுக்கு எப்படி சொல்லிவிட்டு வந்தீங்க?''

''நான் பிறந்த மண்ணை பார்த்துவிட்டு வருகிறேன் என்று.''

''கனவில் வாற விஷயம் வீட்டில் யாருக்கும் தெரியாதா?''

''இல்லை நான் யாருக்கும் சொல்லவில்லை யோகனுக்கு மட்டும் தான் தெரியும்.''

''நானும் அப்படித்தான் மதுராவுக்கு மட்டும் தான் தெரியும்.''

''யோகன் வாரார்.''

..............................

நாலு பேரும் சாப்பிட்டு முடிந்ததும் இருவரும் விடை பெற்றார்கள்.

''வித்யா வாசல்வரை வந்து வழிஅனுப்பினாள்.

''யோகன், லிங்கம் மாஸ்ரர் வீட்டுக்குப் போய் விட்டு உரும்பிராய் போவோமா?''

''ஏன்?''

''பாரதியின் நெருங்கிய சிநேகிதி யார் என்று சிலநேரம் மாஸ்ரருக்கு தெரியும். அவள் பெயரையும் வீட்டையும் கண்டுபிடிச்சால் எல்லாவற்றுக்கும் நல்லது.''

''சரி வா போவோம்.''

''மாஸ்ரர்'' மெல்லக் குரல் கொடுத்தான்.

''யார்'' என்று கேட்டபடி மாஸ்ரர் வந்தார்.

''அட நீங்களா வாங்க உள்ளே.''

''இருங்க தம்பி.''

''சொல்லுங்க என்ன விஷயம்?''

''உங்களால் ஒரு உதவி ஆகணும்.''

''என்ன உதவி?''

''பாரதி உங்களிடம் ரியூசன் எடுத்ததாகச் சொன்னீங்க நேற்று.''

''வரதனும் படிச்சான்'' குறுக்கிட்டார் மாஸ்ரர்.

''பாரதியினுடைய நெருங்கிய சிநேகிதி யார் ஸேர்?''

''சியாமளா! சின்னத்தம்பி மாஸ்ரருடைய மகள். இரண்டுபேரும் நெருக்கமான சிநேகிதிகள்.''

''சின்னத்தம்பி மாஸ்ரருடைய வீடு எங்கே இருக்கு?

''கந்தர்மடம். சந்தியில் போய் விசாரித்தால் எவரும் வீட்டை காட்டுவாங்க.''

''சியாமளாவும் பாரதியும் சேர்ந்துதான் ரியூசனுக்கு வருவாங்க போவாங்க.''

பாரதியின் செத்த வீட்டில் அவள்தான் முழுவதும் நின்றாள். அவளால் பாரதியின் இழப்பைத் தாங்க முடியாமல் கதறிக் கதறி அழுதாள்.

''ஏன்டி இப்படிச் செய்தாய்? ஏன்டி இப்படிச் செய்தாய்?'' சொன்னபடியே வரதனைத் தேடிப் போயிட்டியாடி என்று புலம்பி அழுதாள். அவள் அழுவதைப் பார்த்து செத்தவீட்டுக்கு வந்த எல்லாருமே கண் கலங்கினாங்க. இப்படி ஒரு சிநேகிதியா என்று.''

''வரதனுக்கும் பாரதிக்கும் இடையே உதவியதே சியாமளா தான்.''

''பாரதியின் பிரேதம் சுடலைக்கு காரில் கொண்டு போன போது யார் சொல்லையும் கேட்

காமல் சுடலை வரை வந்து கொள்ளி வைக்கும் போது மயங்கி விழுந்திட்டாள். பிறகு தகப்பன் தான் கார் பிடிச்சு வீட்டுக்கு ஏற்றி வந்தார்.''

''ஏன் தம்பி இவ்வளவையும் கேட்கின்றீர்களே பாரதிக்கு நீங்க என்ன உறவு?''

''பாரதி என் காதலி'' என்று மனசுக்குள் சொல்லிக் கொண்டான்.

''பாரதியும் என் அம்மாவும் ஒன்றா படிச்ச வங்க. அவங்க எல்லோரும் குறூப் போட்டோ எடுத்தாங்களாம் அம்மா வைச்சிருந்த அந்தப் போட்டோ இடப்பெயர்வினால் துலைஞ்சு போச்சு அதை எடுப்பதற்காகத் தான் ''

''சரி ஸேர் நாங்க வாறோம்.''

''நாளைக்கு நேரம் கிடைக்காவிட்டாலும் சியாமளாவின் வீட்டைத் தெரிந்துகொண்டு போவோம்.''

கந்தர்மடச் சந்தியில் உள்ள கடை முன்னால் சைக்கிளை நிறுத்தினார்கள். முதலாளி மட்டுமே இருந்தார்.

''ஐயா! சின்னத்தம்பி மாஸ்ரர் வீடு எங்கே இருக்கு?''

''இப்படியே தெற்கே போங்க இடதுகைப்பக்

கம் இரண்டு கதவுத் தூண்களிலும் நந்தி வைச்சிருக்கும் வீடுதான்.''

''மாஸ்ரரின் மகள்சியாமளா இருப்பாங்களா?''

''ஓம் இருக்கிறாங்க.''

சைக்கிள் உரும்பிராயை நோக்கி ஓடியது.

ஸ்கூலுக்குப் போகாமல் அன்ரி வீட்டுக்கு வந்தாள் மதுரா வித்யாவுடன்.

சிறிது நேரத்தில் தீபனும், யோகனும் வந்து சேர்ந்தார்கள்.

''என்ன வீடு கண்டு பிடிச்சிட்டீங்களா?''

''இல்லை நாலைந்து பேரைக் கேட்டுப் பார்த்தோம்.''

''பரவாயில்லை. பாரதியின் உயிர் சிநேகிதி பெயர் சியாமளா. அவங்க வீடு கந்தர்மடத்தில் தான் இருக்கு சியாமளாவும் அங்கே இருப்பதாக விசாரித்து தெரிந்து கொண்டோம் நேற்று.''

''இப்போ நானும், வித்யாவும் சியாமளா வீட்டுக்குப் போனால் இரண்டு பேரையும் கண்டவுடன் சியாமளாவுக்கு அதிர்ச்சியாக இருக்கும். நிச்சயம் பாரதி வரதன் என்றுதான் நினைப்பாங்க. ஆகையால் மதுராவும் யோகனும் சியாமளா வீட்டுக்குப் போய் எல்லா விபரங்களையும் கேட்டு வரவேண்டும்.''

''தீபன் இந்த யோசனை சரி என்று தோன்ற வில்லை. நீயும் வித்யாவும் கட்டாயம் சியாமளா வைச் சந்திக்க வேண்டும். அப்போது தான் பல கேள்விகளுக்கு பதில் கிடைக்கும்.''

''யோகன் சொல்வது தான் சரி என்றாள் மதுரா.''

''சிக்கல் என்னவென்றால் என்னையும் வித்யா வையும் ஒன்றாகப் பாாத்ததும் நிச்சயம் சந்தேகம் வரும் சியாமளாவுக்கு. நானும் வித்யாவும் பாரதி வரதனின் மறுபிறப்பு என்ற உண்மையை சொல்ல வேண்டி வரும். இப்போ எங்க நாலுபேருக்கு மட் டும் தெரிந்த இந்த விசயம் ஊருக்கு தெரியவந்தால் பெரிய குழப்பமாக மாறிவிடும். வித்யா வீட்டில் என் வீட்டில் தேவையில்லாமல் பயமும் பீதியும் மனக் கலக்கமும் தோன்ற வாய்ப்பு உண்டு.''

''அப்ப என்ன செய்வது?''

''தீபன் நான் சியாமளாவுடன் கதைத்து விஷ யம் வெளியே வராமல் பார்த்துக் கொள்கிறேன். பாரதிக்கு உதவியவங்க தானே நான் சொன்னால் கேட்பாங்க என்றே நம்புகிறேன்.''

''அப்போ சியாமளாவுக்கு தெரிவதில் பிரச் சனை வராது என்று சொல்லுகிறீங்க.''

''வெளியே யாரிடமும் சொல்ல வேண்டாம் என்று சொல்லி வைப்போம்.''

''சரி வாங்க போகலாம்''

..............................

வீட்டு முற்றத்தில் ஒரு சிறுமி நாயுடன் விளை யாடிக் கொண்டிருந்தாள்.

''தங்கச்சி இங்கே வாங்க'' வித்யா அழைத் தாள்.

நாயை விட்டுவிட்டு வந்தாள்.

''அம்மா நிற்கிறாங்களா?''

''ஓம் உள்ளே இருக்கிறாங்க.''

''வரச் சொல்கிறீங்களா.''

''ஓ'' என்று நீட்டி முழங்கிக் கொண்டு உள்ளேஓடியவள் வெளியே வந்தாள்.

''உங்களை உள்ளே வந்து இருக்கட்டாம்.''

உள்ளே வந்தவர்கள் இருக்கவில்லை நின்றார் கள். வெளியே வந்த சியாமளா அப்படியே விறைத் துப்போய் நின்றாள்.

''அன்ரி'' என்றாள் மதுரா.

சுதாகரித்துக் கொண்டாள் சியாமளா.

''நீங்க இரண்டு பேரும்'' என்றாள்.

''அன்ரி நீங்க நினைப்பதுபோல் பாரதியும் வர தனும் இல்லை.''

''அப்படி. என்றால்''

''ஓ ஆச்சரியத்தில் மறந்திட்டேன் இருங்க

எல்லாரும்.

''நீங்க பாரதியின் சிநேகிதி தானே.''

''ஓம் அவள் இறந்து பதினெட்டு பத்தொன்பது வருசங்கள் இருக்கும். இவங்க இரண்டு பேரையும் பார்த்தால் அச்சொட்டாக பாரதியும் வரதனும் போலத்தான் இருக்கு.''

''அன்ரி இவங்க பெயர் வித்யா. அவர் தீபன். மற்றவர் யோகன். நான் மதுரா.''

''உங்ககூட தனிப்பட்ட முறையில் பேசுவதற் காகத் தான் வந்தோம்.''

''வித்யா'' தீபன் தான் அழைத்தான்.

''நீங்க அவங்ககூட உள்ளே போய் முழுவதை யும் அறிந்து கொண்டு வாங்க.''

வித்யா எழுந்தாள்.

சியாமளாவுக்கு புல்லரித்தது பழைய ஞாபகங் கள் மனசில் விரிந்தன.

சியாமளா வித்யாவை அழைத்துக் கொண்டு அறைக்குள் சென்றாள்.

''அன்ரி இப்ப நான் சொல்லப் போவதை வெளியே யாருக்கும் சொல்லக்கூடாது.''

''நான் ஏன் பிள்ளை சொல்லப்போகிறேன்.''

''அன்ரி உங்ககூட படிச்சாவே பாரதியினுடைய மறுபிறப்புத்தான் நான்.''

''என்னம்மா சொல்கிறாய்?'' அதிர்ச்சியுடன் கேட்டாள் சியாமளா.

''நான் சொல்வது உண்மை தான் அன்ரி. போன ஜென்மத்தில் பாரதி இந்தப் பிறப்பில் வித்யா.''

''அப்போ. அந்த...................''

''வரதன் தான் இப்போ தீபனாக இருக்கிறார்.''

''உண்மையாகவா!''

''நான் சொல்வதெல்லாம் உண்மை அன்ரி.'' என்றாள் மீண்டும்.

வித்யா, பாரதி என்னோடு உயிருக்கு உயிராகப் பழகினாள். பாரதி முதலில் வரதனோடு கதைப்பதற்கு கூச்சப்பட்டாள் ஆனால் வரதன் மேல் அவளுக்கு கொள்ளை ஆசை. என்னிடம் உதவி செய்யும்படி வெளிப்படையாகவே வாய்விட்டு கேட்டாள். ஒருநாள் தாமரைக்குளத்தருகே தான் முதன் முதல் பாரதியையும் வரதனையும் நேரடியாகச் சந்தித்து பேசவைச்சேன். அதுவே தொடர்கதையாகி கடைசியில் இரண்டு பேருமே அதே தாமரைக்குளத்தில் செத்து மிதந்தாங்க. இப்பகூட அவங்க இரண்டு பேரும் செத்துக்கிடந்தது நேற்று நடந்தது போல் கண்ணுக்குள் நிற்குது.

சிறிது நேரம் மௌனமாக இருந்தாள் சியாமளா

வரதனும் பாரதியும் விரும்பிக் கொண்டிருக்கும் போது ரியூசன் கிளாசுக்கு அபர்ணா வந்து சேர்ந் தாள். அவளுக்கு வரதன் மேல் விருப்பம் வந்திருக்கு. வரதனை மெல்ல அணுகி இருக்கிறாள். வரதனுக்கு முழுமையாக பாரதியிடம் ஈடுபாடு வந்திட்ட தினால் அவன் மனசை மாத்த முடியவில்லை. ஒரு நாள் என்னிடமே காதலாம் காதல் இவங்க காதல் எவ்வளவு காலத்துக்கு போகும் கொஞ்சக் காலம் தான் என்று கடுகடுப்பாகச் சொன்னாள். அவளுக்கு வரதன் தன்னை விரும்பவில்லை என்று ஆத்திரம். இதை நான் பாரதிக்குச் சொல்ல அவளுக்கு ஒரு மாதிரியாய் போச்சு. முட்டாள் இதைப் போய் வரதனிடம் கேட்டிருக்கிறாள் தப்பாகப் புரிஞ்சு கொண்டு வரதன் பாரதியை சமாதானப் படுத்த எவ்வளவோ முயற்சி செய்தான். அவள் சமாதானம் அடையாமல் அழுதாள். திடீர் என்று வரதன் பாரதியின் கொம்பாஸ் பெட்டியைத் திறந்து பிளேட்டை எடுத்து கையைக் கீறி இந்த ரத்தத்தின் மேல் சத்தியமா அபர்ணாவை நான் விரும்பவில்லை என்று சொன்னதும் பாரதி துடிதுடித்துப் போனாள். தன் கைலேஞ்சியால் காயத்தை சுற்றிக் கட்டினாள் அந்தக் கைலேஞ்சி முழுவதும் ரத்தத் தில் சிவப்பாயிட்டுது பயந்திட்டாள். என்னை அழைத்தாள் எனக்கு பாரதிமேல் கோபம் கோப மாக வந்திச்சு அடக்கிக் கொண்டு என் கைலேஞ்சி யைக் கொடுத்தேன். அதைச் சுற்றிக்கொண்டு வர தன் போயிட்டார்.

இரண்டு நாள் வரதன் வரவே இல்லை. என்னைப் போய் வரதனைக்கூட்டி வரும்படி கெஞ்சினாள். உன்னை நம்பவைக்க அவன் ஏன் தன் கையைக் கிழிக்கணும் எல்லாம் உன்னால் தான். என்னால் முடியாது என்று நான் சொல்லியும் மீண்டும் மீண்டும் கெஞ்சினாள். பாவமாக இருந்திச்சு. போய் வரதனை தாமரைக்குளத்துக்கு அழைச்சு வந்தேன் அவங்க இரண்டுபேரும் கதைக்க நான் காவல் இருப்பேன். அவளுக்கும் வரதனுக்கும் இடையே நடக்கும் சிறு சம்பவத்தைக்கூட மறைக்காமல் என்னிடம் வந்து சொல்வாள் பாரதி. அனிச்ச மலர் போல சின்ன விசயத்துக்குக்கூட சட்டென்று வாடிப்போவாள்.

யாருக்கும் சந்தேகம் வராமல் தான் பழகினார்கள். இவர்கள் விஷயம் லிங்கம் மாஸ்டருக்கும் தெரியும். பாரதி தனியே இருந்தால் ''என்ன லவ் பேட் தனியே இருக்கு சோடி எங்கே'' என்று கேட்டு கேலி செய்வார். எப்படியோ விஷயம் பாரதி குடும்பத்துக்கு தெரிய வந்திட்டுது. அநேகமாக அபர்ணா தான் தெரியப் பண்ணியிருக்க வேண்டும். வேறுவழியில் தெரிவதற்கு வாய்ப்பே இல்லை. பாரதியை வீட்டில் கண்டிச்சிருக்கிறாங்க. ஆனால் பாரதியால் வரதனைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. பாரதியின் குடும்பத்தினர் யாராவது ஒருவர் தினமும் கண்காணிக்கத் தொடங்கினார்கள். பொறுத்துப் பொறுத்துப் பார்த்தாள் அவளால் தாங்கவே முடியல்ல.

''நான் வேண்டாம் பாரதி பிரச்சினை கூடிப் போயிடும்'' என்று எவ்வளவோ சொல்லித் தடுத்துப் பார்த்தேன் என்னால் இனி முடியாது வரதனின் மடியில் செத்தாலும் பரவாயில்லை சந்தோஷமாகச் சாவேன் என்று சொல்லிவிட்டு வரதனைத் தேடிப் போனாள். நானும் அவளைப் பின்தொடர்ந்து போனேன். தினமும் தாமரைக்குளத்தருகே அவளுக்காக காத்திருந்து பழகிப்போன வரதன் அவளைக் கண்டதும் உணர்ச்சி வசப்பட்டு பாரதியைக் கட்டி அணைச்சிட்டான் அவளும் அவன் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டு குலுங்கிக் குலுங்கி அழுதாள். எனக்குப் பயமாக இருந்திச்சு. யாராவது பார்த்திடப் போகிறாங்களே என்று. பாரதி பாரதி என்று திரும்பத் திரும்பக் கூப்பிட்டேன். அவள் வரதன் கூடவே இருந்தாள். அவளுக்கு அருகே போய் வா பாரதி நேரமாச்சு யாராவது பார்த்திடப் போறாங்க என்று சொன்னதும் வரதனை கட்டி அணைச்சு கொஞ்சி விட்டு வந்தாள்.

அன்று தான் வரதனும் பாரதியும் சந்தித்த கடைசி நாள். அதன் பிறகு இரண்டு பேருமே சந்திக்கவில்லை. வீட்டுக்கு வெளியே வராமல் பாரதிக்கு தடை போட்டாங்க. அவளைக் காணவில்லையே என்று அவள் வீட்டுக்குப் போனேன் வா என்று கூடச் சொல்லாமல் சோகமாக இருந்தாள். ஆறுதலாக கொஞ்சநேரம் இருந்திட்டு கடிதத்தை எழுதச் சொல்லி வாங்கி பிறாவுக்குள் மறைச்சுக் கொண்டு வந்து வரதனிடம் கொடுத்தேன். இப்படிக் கிழ

மைக்கு ஒருமுறை இரண்டு பேரின் கடிதங்களை யும் மாறி மாறிக் கொடுத்தேன். பாரதி வீட்டில் என்மேல் சந்தேகம் ஏற்படவில்லை. அவளுக்கு நான் வந்து போவதால் ஆறுதலாக இருப்பதாக நினைத் திருக்கக் கூடும். எதிர்பாரதவிதமாக ஒருநாள் வரதன் தாமரைக்குளத்தில் இறந்து மிதப்பதாக பக்கத்து வீட்டு தம்பி வந்து சொன்ன போது நம் பாமல் தாமரைக்குளத்துக்கு ஓடிப்போனேன். அப்ப தான் வரதன் உடலை வெளியே எடுத்து கிடத்தி இருந்தாங்க. எப்படியோ பாரதிக்கு விஷயம் தெரிந் ததும் அழுது குழறினாள். வீட்டுக்காரர் அவள் அழுவது வெளியே கேட்காமல் தடுக்க எவ்வளவு முயற்சி செய்தார்கள். வானொலியை பெரிய சத் தத்தோடு பாட வைத்தார்கள். நான் பாரதி வீட்டுக்கு போன நேரம் வானொலி பெரிய சத்தத் துடன் அலறிக் கொண்டிருந்தது. என்னைக் கண்ட தும் ''ஓ'' வென்று அழுதாள் பாரதி.

கண்களைத் துடைத்துக் கொண்டாள் சியாமளா. சாகும்வரை அவள் அமைதியாகவே இல்லை. அடிக்கடி அவள் வீட்டுக்கு போய் வந்தேன் கொஞ்ச நாளிலேயே அவள் பாதியாக மெலிந்து போனாள். நான் என் வரதனிடம் போகப்போகி றேன். தினமும் இரவில் வந்து அழைக்கிறார் நான் போயிடுவேன் என்று சொல்லிக் கொண்டே இருந் தாள். வரதன் இல்லாத வாழ்க்கை எனக்கு வேண் டாம் சியாமளா. நான் கெதியில் போயிடுவேன். இதுதான் அவள் எனக்கு சொன்ன கடைசி வார்த்

தைகள். அடுத்த நாள் வரதன் இறந்து கிடப்பதைச் சொன்ன அதே தம்பிதான் ஓடிவந்து பாரதி அக்கா தாமரைக் குளத்தில் இறந்து கிடப்பதாகச் சொன்னான்.

கூட்டிக் கொண்டிருந்த தும்புக் கட்டையைப் போட்டு விட்டு தாமரைக் குளத்துக்கு ஓடினேன். நான் ஓடுவதைப் பார்த்து அம்மாவும் அப்பாவும் பின்னே ஓடி வந்தாங்க. நான் தாமரைக் குளத்துக்கு போகத்தான் பாரதி உடலை வெளியே தூக்கிக் கொண்டிருந்தாங்க. அழுது குளறியும் என்ன இறந்தவள் திரும்பியா வரப்போகிறாள். மூன்று நாளாய் என்னால் எதுவுமே சாப்பிடவே முடியவில்லை. அப்பாவும் அம்மாவும் அழுதிட்டாங்க. அவர்களுக்காக சாப்பிட்டேன். அவள் தற்கொலை செய்வதற்கு ஏதோ காரணம் இருக்க வேண்டும் என்று உள்மனம் சொல்லிச்சு. அவள் வெளியே போகாமல் தடுப்பதற்காக தெருக்கதவு எப்பவும் பூட்டியே வச்சிருந்தாங்க. வீட்டைச் சுற்றிவர மதில் இருந்ததினால் அவள் வெளியே போகமுடியாது என்றுதான் நினைச்சிருக்கிறாங்க. தற்கொலை செய்து கொள்வது என்று முடிவெடுத்து திட்டமிட்டு செயற்பட்டிருக்கிறாள். இரவிரவாக கல்லுகளை ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கி சுவர் ஏறி குதிச்சுப் போய்த்தான் தாமரைக் குளத்தில் குதித்திருக்கிறாள். ஐந்தாம் நாள் அப்பாவையும் கூட்டிக்கொண்டு பாரதி வீட்டுக்குப் போனேன் செத்தவீடு நடந்த சோகம் மாறாமலே இருந்திச்சு.

அந்த வீட்டில் உள்ளவங்களைப் பார்க்க வெறுப்பாக இருந்திச்சு அநியாயமாக வாழ வேண்டிய உயிரை அழிய வைச்சிட்டாங்களே என்று, பாரதியின் தாய் என்னைப் பார்த்ததும் அழுதாங்க, அவங்க அழுவதைப் பார்த்து என் மனம் இரங்கவில்லை, அன்ரி பாரதியின் கொப்பி புத்தகங்களை எடுத்துக் கொண்டு போகட்டுமா? என்று கேட்டேன்,

''இனி எதற்கு? அவள் தான் போயிட்டாளே எடுத்துக் கொண்டு போ'' என்றாங்க.

நான் கொண்டு போய் கொடுத்த வரதனின் கடிதங்களை யார் கண்ணிலும் படாமல் ஒளித்து வைத்திருக்கும் இடத்தை ஏற்கனவே எனக்குச் சொல்லி இருந்தாள். வீட்டுக்காரர் யாராவது வருகிறார்களா என்று பார்த்துவிட்டு அத்தனை கடிதங்களையும் எடுத்து நெஞ்சுக்குள் வைக்க முயற்சித்தேன் முடியவில்லை. அண்டஸ்கேட்டுக்குள் அவசரமாக மறைத்துக் கொண்டேன். அதன் பிறகு அவள் கொப்பி புத்தகங்களை எல்லாம் எடுத்துக்கொண்டு அறையை விட்டு ஹோலுக்கு வந்தேன். தாயிடம் சொல்லி கொண்டு வீட்டுக்கு வந்ததும் கடிதங்களை வெளியே எடுத்தேன் எல்லாம் வரதன் எழுதிய கடிதங்கள் தான் ஒன்று மட்டும் தான் பாரதியின் கையெழுத்தோடு இருந்திச்சு. அதுதான் அவள் எழுதிய கடைசிக் கடிதம். ஒருவரி விடாமல் படித்தேன். கொஞ்சம் இரு அந்தக் கடிதத்தையே

தாறேன் நீயே படித்துப்பார். அலுமாரியைத்திறந்து அடியில் இருந்த கடிதத்தை எடுத்துக் கொடுத்தாள் வித்யாவிடம்.

என் அன்புத் தோழி சியாமளா!

உனக்கு நான் எழுதும் கடைசிக் கடிதம். இந்தக் கடிதத்தை நீ படிக்கும் போது நான், என் உயிர் வரதன் மடியில் உறங்கிக் கொண்டிருப்பேன். எத்தனையோ ஆசைகள் என்மனசில் அத்தனையும் வரதனோடு போய்விட்டது. வரதன் இறந்த நாள் தொடக்கம் இரவில் கனவில் வந்து என்னிடம் வந்துவிடு என்று அழைப்பது போல் இருக்கும். வரதன் எழுதிய கடிதங்களை கொண்டுவந்து தந்தாய். அந்தக் கடிதங்களை எத்தனையோ தடவை நான் படித்திருப்பேன். உயிர்த்தோழி நீ கிடைச்சது நான் செய்த புண்ணியம். நானும் வரதனும் ஒன்றுசேர்ந்து வாழவேண்டும் என்று பாடுபட்டவள் நீ. அதற்கு நானும் கொடுத்து வைக்கவில்லை வரதனும் கொடுத்து வைக்கவில்லை. பெண் மடியில் சுகம் காணாமல் வரதன்போய்விட்டார். கன்னி கழியாமல் நானும் போகிறேன். வரதன் இல்லாத வாழ்க்கையை என்னால் எண்ணிப் பார்க்க முடியவில்லை சியாமளா. அடுத்த பிறப்பு என்று ஒன்று இருந்தால் நான் என் வரதனோடு சேர்ந்து வாழ்வேன் என்ற நம்பிக்கையோடு போகிறேன் சியாமளா. நான் இந்த முடிவுக்கு வந்ததற்காக என்னைத் திட்டாதே. காதல் அன்பு என்பது வெறும் உடலோடு

மட்டும் சம்பந்தப்பட்டதில்லை மனசோடும் சம்பந்பட்டது அநுபவிக்காத பலருக்கு அது புரிவதே இல்லை. காதலுக்கு உடல் உணர்ச்சி சிறிய பங்குதான் வகிக்கிறது. எப்படி உனக்கு விளங்க வைப்பதென்று எனக்குத் தெரியவில்லை. அநுபவித்தால் தான் அது புரியும். நான் இறந்த பிறகு வரதனும் நானும் சந்திக்கின்ற தாமரைக்குளத்து முருகனிடம் என்னையும் வரதனையும் அடுத்த பிறப்பிலாவது ஒன்று சேர்த்து வாழவை என்று வழிபடுவாயா? இந்த உதவியை மட்டும் கடைசியாகச் செய்து விடு பிறகு எந்தத் தொல்லையும் தரமாட்டேன். நேற்று இரவு அம்மாவும் மாமாவும் மெல்லக் கதைத்தது என் காதில் விழுந்தது. மாமாவின் மகன் கேதீஸ்வரன் தான் வரதனை அழைத்துக் கொண்டு போய் குளத்தில் தள்ளிக் கொலை செய்திருக்கிறான். இதற்குப் பிறகு தான் செத்துப்போய்விட வேண்டும் என்று முடிவுக்கு வந்தேன். அவன் செய்த பாவத்தை அவன் அனுபவிப்பான். நீ நன்றாக வாழ வேண்டும் என்றுதான் என்கடைசிஆசை சியாமளா. எனக்கு கிடைக்காத இன்பம் எல்லாம் நீயாவது பெற்று ஆனந்தமாக வாழவேண்டும். ஒரு பெண்ணுக்கு எது கிடைக்காவிட்டாலும் அன்பு நிறைந்த கணவன் கிடைக்க வேண்டும். உனக்கு நிச்சயம் அன்பு நிறைந்த ஒருவன் தான் கணவனாக வருவான். சியாமளா உன்னை விட்டுப் பிரிஞ்சு போவதில் எனக்கு வருத்தம் தான். உனக்கு என் அன்பு முத்தங்கள்.

என்றும் அன்பு மறவாத உயிர்த் தோழி

**பாரதி**

கண்களைத் துடைத்து கொண்டாள் வித்யா.

இதை நான் கொண்டு போகலாமா அன்ரி.

இந்தக் கடிதம் மட்டுமல்ல இதோ இவை எல்லாவற்றையும் கொண்டு போ.

கொஞ்சம் இரு.

இதோ இவைகளையும் கொண்டு போ. இவை நீ வரதனுக்கு எழுதிய கடிதங்கள் வரதனின் அம்மாவின் சம்மதத்துடன் வரதனின் அறையில் இருந்து எடுத்தவைகள்.

கடிதங்களுடன் வெளியே வந்தாள்.

தீபன் பக்கத்தில் அமர்ந்தவள். இதில் பாரதி, வரதன் இரண்டுபேரும் எழுதிய கடிதங்கள் இருக்கு இரண்டையும் வேறு வேறாகப் பிரியுங்க.

நாங்களும் பார்க்கலாமா வித்யா. மதுரா கேட்டாள் புன்னகையுடன்.

தீபனைப் பார்த்தாள் வித்யா.

''உங்களுக்கு சம்மதம் என்றால் எனக்கு ஆட்சேபம் இல்லை.''

''சரி பார். ஆனால் லவேர்ஸின் கடிதங்களை மற்றவர் பார்க்கிறது அவ்வளவு நல்லதல்ல.''

இடுப்பில் இடித்தாள்.

''வலிக்குது மதுரா.''

''நீயா எழுதினாய்?''

''நான் எழுதினாலும் பாரதி எழுதினாலும் இரண்டும் ஒன்றுதான்.''

பாரதியின் கடிதம் வேறு வரதனின் கடிதம் வேறாகப் பிரித்தார்கள்.

''வரதனின் கடிதங்களை நான் கொண்டு போகிறேன்'' என்றான் தீபன்.

''மாறிக் கொண்டு போவோமா?'' என்று கேட்டாள் வித்யா.

''சரி உங்க விருப்பம்.''

''அன்ரி நீங்க செய்த இந்த உதவியை நாங்க உயிருள்ளவரை மறக்க மாட்டோம். உங்க உதவி இன்னும் தேவை.''

''வித்யா உனக்குச் செய்த இந்த உதவியால் எனக்கொரு ஆத்ம திருப்தி. கடவுள் எனக்கு ஏற்படுத்தித் தந்த ஒரு நல்ல வாய்ப்பாகவே நினைக்கிறேன்.

இப்படி எதையுமே அநுபவிக்காமல் ஆசைகளுடனே இறந்து போயிட்டாளே என்று அடிக்கடி பாரதியை நினைச்சு வருத்தப்படுவேன். இந்தமுறை நிச்சயம் நீ வாழவேண்டும் வித்யா. உனக்கு சம்மதம் என்றால் உங்க கல்யாணத்தை நானே நடத்தி வைக்கிறேன்.''

''தாங்ஸ் அன்ரி! ஏதாவது பிரச்சினை ஏற்பட்டால் நிச்சயம் உங்களிடம் வருவோம்.''

''வீட்டுக் கதவு உங்க இரண்டு பேருக்காகவும் திறந்தே இருக்கும் எப்பொழுதும்.''

''அப்போ நாங்க வருகிறோம் அன்ரி.''

''வித்யாவை அணைத்துக் கொஞ்சினாள். போன ஜென்மத்தில் என் சிநேகிதியாய் இருந்தாய். இப்போ என்பிள்ளை மாதிரி.''

வித்யா உணர்ச்சி மேலிட சியாமளாவை கொஞ்சினாள்.

வாசல்வரை வந்து வழியனுப்பினாள்.

''மதுரா வீட்டுக்கு நேரத்துக்கு போகணும் இல்லை நூறு கேள்விகள் கேட்பாங்க.''

''தீபனிடம் சொல்லிக் கொண்டு வேளைக்குப் போ.''

''தீபன் பிந்திப் போனால் வீட்டில் காரணம் கேட்ப்பாங்க. உங்களுடன் கொஞ்சம் மனம்விட்டு பேசணும் நாளைக்கு வருவீங்க தானே.

''நிச்சயமாக, நானும் பேசணும் நல்லமுடிவு எடுப்போம்.''

“ஏன்டி இவ்வளவு நேரம்?”

வித்யாவுக்கு ஏனோ கோபம் வரவில்லை மற்ற நாட்கள் என்றால் கடுப்போடு பதில் சொல்வாள்.

“காலையில் போனவள் இப்போதான் வாறாள் விடிஞ்சதுக்கு இன்னும் வீடு கூட்டவில்லை.. யாரடி வீட்டு வேலைகளை எல்லாம் செய்கிறது மனசில் என்னடி நினைச்சுக் கொண்டிருக்கிறாய்?”

“ஏன் சாந்தியும், பாமினியும் இருந்தாங்களே அவர்களில் ஒருவர் கூட்டி இருக்கலாம் தானே.”

“அவங்க இரண்டு பேரும் கெம்பஸ்சுக்கு போயிட்டாங்க.”

“நேற்றுத் தானே பேசிக் கொண்டிருந்தாங்க இன்று கெம்பஸ் இல்லை என்று.”

“கெம்பஸ் இல்லாவிட்டால் வேறு எங்கேயோ போக வேண்டி இருக்கும்?”

“ஏம்மா அவங்களுக்குத்தான் வேறு எங்கேயாவது போக வேண்டி இருக்கும் எனக்கு இல்லை அப்படித்தானே.”

பிடரி மயிரைக் கௌவிப் பிடித்தாள். “ஏன்டி உனக்கு எங்கே போகணும்? படிச்சுக் கிழிக்கிறாய். அதனால் வேறு வேலை இருக்காடி.”

“தலையை வலிக்கு விடம்மா விடம்மா.”

''மாடு மாதிரி வளர்ந்திருக்குதே ஒழிய வீட்டுப் பொறுப்பே இல்லை. படிப்புத்தான் ஏறவில்லை வீட்டு வேலையாவது செய்து பழகலாமல்ல.''

தான் படிப்பில் திறமையாக இல்லாததை சுட்டிக் காட்டியதும் மௌனியானாள்.

''இப்ப என்னம்மா செய்யணும். வீட்டைக் கூட்டணும் அவ்வளவு தானே.''

''முத்தம் பின்வளவு யார் கூட்டுவது? வேலைக்காரி வைத்துக் கூட்ட முடியுமா? சருகுகளுக்குள் பாம்பு பூச்சி இருந்தாலும் தெரியாது.''

''சரி வளவையும் கூட்டுகிறேன்.''

தாய் பையைத் தூக்கிக்கொண்டு வெளியேறினாள்.

வீடு முழுவதும் கூட்டி வீட்டைச்சுற்றியும் அழகாகக் கூட்டி முடித்தாள்.

அலுப்புத்தீர குளித்துவிட்டு தேநீர் கோப்பையுடன் ஹோலில் செற்றியில் வந்து அமர்ந்தாள்.

''என்ன ராணி ரீ குடித்த மாதிரித் தெரியுது.'' என்று கேட்டுக்கொண்டே பாமினி வந்தாள். அவளைத் தொடர்ந்து சாந்தியும் மூன்று பெண்களும் வந்தார்கள்.

வித்யா பதில் ஏதும் சொல்லாமல் நேநீரைப் பருகிக் கொண்டிருந்தாள்.

சாந்தி பட்டென்று பாடிக் கொண்டிருந்த ரேடியோவை நிறுத்தினாள். அதில் அவள் மேல் உள்ள கோபத்தைக் காட்டுவது பளிச்சென்று தெரிந்தது. ரேடியோவை சில விநாடிகள் உற்றுப்பார்த்தவள் எழுந்து உள்ளே போனாள்.

சமையல் பொருட்களுடன் கமலா உள்ளே வந்தாள்.

''அம்மா கோப்பி போடுங்க'' என்றாள் சாந்தி.

''வித்யா எங்கே? அவளிடம் சொல்லு.''

அவளுக்கு ஊர் சுற்ற நேரம் போதாது கோப்பி எங்கே போடப் போகிறாள்.''

''வித்யா வித்யா'' பெருத்த குரலில் அழைத்தாள் கமலா.

பேசாமல் இருந்தாள் வித்யா.

''ஏன்டி நான் கூப்பிடுவது உன் காதில் விழவில்லையா? இல்லை விழுந்தும் கத்திப்போட்டு இருக்கட்டும் என்று நெஞ்சு அழுத்தமா சொல்லடி.''

''தினமும் ஏனம்மா என்னைக் கரிச்சுக் கொட்டுகிறாய் என்னையும் நீ தானே பெற்றாய். தினமும் ஏன் என்னை வருத்துகிறாய், என்னை உனக்கு பிடிக்கவிட்டால் சொல்லு செத்துத் தொலைகிறேன் அப்புறம் நீயும் பாமினியும், சாந்தியும் நிம்மதியாய்

இருக்கலாம். நான் ஏன் பிறந்தேன் என்று எனக்கும் தெரியவில்லை. படைச்ச அந்த ஆண்டவனும் ஏன் இந்த வீட்டில் கொண்டு வந்து தள்ளிவிட்டான் என்று புரியவும் இல்லை.''

''பேசுவாயடி பேசுவாய் மூன்றுநேரம் வடிச்சுக் கொட்டிக் கொண்டிருக்கிறேன் சாப்பிட்டு விட்டு பேசுவாயடி எல்லாம் என்தலை எழுத்து.''

''ஏனம்மா நீ சலிக்சுக்கிறாய் நான் தான் பாவம் செய்தனான். இந்த வீட்டில் வந்து பிறந்திட்டேன். எப்படித் தொலைஞ்சு போவதென்று எனக்குத் தெரியவில்லை போயிடுவேனம்மா போயிடுவேன் கெதியில் போயிடுவேன்.''

''ஏனம்மா அவள் சத்தம் போடுகிறாள்.'' கத்தினாள் சாந்தி.

வீடு அமைதியானது.

காலை எழுந்திருந்த போது மனம் அமைதியாக இருந்தது.

காலைச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு வெளியே வந்தாள்.

''அக்கா சைக்கிளைக் கொஞ்சநேரம் தாறாயா?'' கிடைக்கமாட்டாது என்று அவளுக்கு தெரியும் சிறுநம்பிக்கையில் கேட்டாள்.

''இல்லை நான் வெளியே போகவேணும்'' என்றாள் பாமினி.

சாந்தி தரவே மாட்டாள் ஏன் கேட்பான் என்று தெருவில் இறங்கி நடந்தாள்.

''ஏன் இவ்வளவு நேரம்?''

''நடந்து வருகிறேன்.''

''நடந்தா?''

''பஸ்சுக்கு காசு இல்லை. தீபனுக்கு வருகிறேன் என்று சொல்லி விட்டேன் இல்லாவிட்டால் வந்திருக்க மாட்டேன்.''

''ஏன்டி அப்படி பத்துரூபா காசு இல்லாமலா போச்சு?''

''முடிந்த விஷயம். தீபன் வந்திட்டாரா?''

''ஒரு மணி நேரமாச்சு உள்ளேதான் இருக்கிறார்.''

''ஸாரி தீபன் கொஞ்சம் நேரமாச்சு.''

''பரவாயில்லை இருங்க.''

''நீங்க மதுராவுக்கு சொன்னது காதில் கேட்டுது. வீட்டில் பிரச்சினையா? எங்களால் உங்களுக்கு உதவி செய்ய முடியுமென்றால் சொல்லுங்க நிச்சயம் செய்வேன். சொல்லுங்க வித்யா பிளீஸ்.

அவனுடைய அரவணைப்பான பேச்சு அவள் கண்களை குளமாக்கி விட்டன.

கீழ் இமை வரம்பு உடைக்காமல் இருக்கவேண்டும் என்று முயற்சித்தாள். முடியவில்லை. மேல் இமைகள் வெட்ட வரம்புகள் இரண்டும் உடைப்பெடுத்தன.

''வித்யா பிளிஸ் ஏன் என்ன நடந்தது வீட்டில் ஏதாவது நடக்கக்கூடாதது............?''

''அப்படி ஒன்றுமில்லை.''

கைலேஞ்சியை நீட்டினான்.

வாங்கிக் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

''நேற்று ஏதோ பேச வேண்டும் என்று சொன்னீங்களே.''

''வித்யா நீங்க மனஅமைதியுடன் இருந்தால் தான் அதைப்பற்றி பேசலாம்.''

''பரவாயில்லை தீபன் சொல்லுங்க.''

''நான் லண்டனிலிருந்து யாழ்ப்பாணம் புறப்படும்போது கனவில் வரும் பெண்ணைக் கண்டு பிடித்தால் கையோடு அழைத்துக்கொண்டு வருவது என்ற முடிவோடுதான் புறப்பட்டேன்.''

''தீபன் இந்தக் கேள்வியை கேட்டதற்காக

சந்தோஷப்படுகிறேன். சிறகே இல்லாத பறவை போல் பறக்க முடியாமல் தவிக்கிறேன். நீங்களே சிறகைத் தருவதாகச் சொல்கிறீங்க. நீங்க தரும் அந்தச் சிறகுகளுடன் உங்ககூடச் சேர்ந்து பறந்து வரவே மனம் துடிக்குது ஆனால்.''

''சொல்லுங்க வித்யா.''

''எங்க குடும்பத்தைப்பற்றி கொஞ்சம் நீங்களும் தெரிஞ்சு கொள்ளணும். அப்பா இல்லை இறந்திட்டார், அம்மா, அக்கா பாமினி, சாந்தி, அண்ணன் ஒருவன். பெயர் கோகுலன். மாமா தான் எங்களுக்கு அவ்வப்போது உதவி.

என் வீட்டில் யாருமே என்கூட அன்பா நடந்து கொள்ள மாட்டாங்க காரணம் தெரியவில்லை. எனக்கு மேலே மூன்றுபேர் இருக்கிறாங்க. அவங்க எல்லாம் இருக்க நான் எப்படி என் வாழ்க்கையைப் பற்றி யோசிக்க முடியும். அம்மா கண்டிப்பாக சம்மதிக்கவே மாட்டா.

''வித்யா நீங்க என்னைத் தப்பா புரிஞ்சு கொண்டீங்க என்றுதான் நினைக்கிறேன். உங்களை நான் கல்யாணம் செய்து கொள்வேன். ஆனால் இப்போ அல்ல.

கேள்விக்குறியுடன் அவனைப் பார்த்தாள்.

''இப்போ எனக்கு இருபது வயசு உங்களுக்கு?''

''பத்தொன்பது''

''உங்களை என்கூடக் கூட்டிக்கொண்டு தான் போக விரும்புகிறேன். என் படிப்பு முடிந்து வேலை ஒன்றில் சேர்ந்த பிறகுதான் கல்யாணம் அதுவரை நீங்களும் விரும்பினால் படிக்கலாம் அதற்கான ஏற் பாட்டை நான் செய்து தருவேன்.''

''தீபன் வீட்டை விட்டு முடிஞ்ச வரையில் விரைவாக வெளியேற வேண்டும் அதுதான் என் ஆசை. நீங்க உடனே என்னைக் கல்யாணம் செய் தாலும் சரி இல்லை இரண்டு மூன்று வருடங்கள் கழிச்சு செய்தாலும் சரி அது உங்க விருப்பம் ஆனால் என்னை உங்ககூட கூட்டிப் போயிடுங்க. எந்தக் காரணத்துக்காகவும் என்னை இங்கே விட்டு மட்டும் போயிடாதீங்க. போன ஜென்மத்தில் அநி யாயமாக உங்களை நான் இழந்திட்டேன். இந்த ஜென்மத்தில் அதே பிழையை விடமாட்டேன்.''

''உங்க குடும்ப விபரத்தைப் பார்த்தால் கல் யாணம் என்பது சாத்தியப்படாத ஒன்றாகத்தான் இருக்கு.''

''இப்படிச் செய்வோமா?''

நீங்க என்கூட வாங்க பெரியம்மா வீட்டுக்கு அழைத்துச் செல்கிறேன். இரவு வீட்டுக்கு வர வில்லை என்று தெரிந்ததும் உங்க அறையைத் தேடு வாங்க. அங்கே நீங்க எழுதிவைச்ச கடிதம் இருக்கும். அதில் நீங்க என்கூட போறதாக எழுதி இருக்கும்.

அடுத்தநாள் என் பெரியம்மாவை உங்க வீட்டுக்கு அனுப்பி இரண்டு பேரையும் சேர்த்து வைக்கும்படி கேட்போம். உங்கவீட்டில் சம்மதித்தால் சொல்லிக் கொண்டு லண்டன் போவோம். இல்லாவிட்டால் பொலிஸில் பதிந்துவிட்டு லண்டன் போவோம்.

தீபன் நீங்க சொன்னபடி எல்லாம் செய்கிறேன் நான் உங்ககூட லண்டன் வந்தால் போதும். என்னை இந்த நரகத்தில் இருந்து விடுவிச்சிடுங்க.

நீங்க நாளை காலை ஒரு கடிதம் எழுதி வைச்சிட்டு..........''

''எப்படிக் கடிதம் எழுதுவது?''

''நான் விரும்பியவருடன் போகிறேன் என்னைத் தேடவேண்டாம்'' என்று எழுதி உங்க பெயரை கீழே போட்டு மறைச்சு வைச்சிட்டு வந்திடுங்க. தேடி எடுக்கட்டும்.''

''ஏதாவது கொண்டு வர வேண்டுமா?''

''ஒன்றுமே வேண்டாம் போட்ட உடுப்போடு வந்தால் போதும். உங்களுக்கு எது வேண்டுமோ கேளுங்க வாங்கித் தாறேன்.''

''வேறு ஏதாவது பிரச்சனை வந்தால்?''

''ஒன்றும் யோசிக்காதீங்க. எல்லாவற்றையும் நான் சமாளிப்பேன். ஆனால் நீங்க வரணும் என் கூட வருவதில் உறுதியாக இருக்கணும்.''

''இன்றைக்கே உங்ககூட வரட்டுமா?''

இல்லை நாளைக்கு வாங்க. எங்கே போனீங்க என்ற தடயமாக கடிதம் எழுதி வைச்சிருக்க வேண்டும். இல்லாவிட்டால் கிணறு, குளத்தைத் தேடு வாங்க இல்லை ஆமி பிடிச்சிட்டுதோ இல்லை வேறு இயக்கங்கள் பிடிச்சிட்டுதோ என்று தேவையில்லாமல் தேடவிடாமல் கடிதம் மூலம் தெரிந்து கொள்ள வேண்டும்.''

''பத்து மணிக்கு முன் நான் இங்கு வருவேன். இல்லாவிட்டால் வீட்டில் ஏதோ பிரச்சினை என்று அர்த்தம். என்ன விதப்பட்டும் பத்து மணிக்குள் உங்களிடம் வந்திடுவேன். அதன் பிறகு எனக்கு நீங்கதான் எல்லாம்.''

காசு தேவையா?

வேண்டாம். பஸ் இல்லாவிட்டால் இன்று வந்ததுபோல் நடந்து வந்திடுவேன்.

''மதுரா'' என்று அழைத்தான்.

உள்ளே வந்தாள்.

நாளை காலை வித்யா இங்கே வருவாங்க. நான் வித்யாவை கூட்டிக்கொண்டு உரும்பிராய் போயிடுவேன்.''

''வீட்டில் சொல்ல வேண்டாமா?''

''இல்லை மதுரா நான் கடிதம் எழுதி வைச்சிட்டு வருவேன் அதைப் பார்த்திட்டு உன் வீட்டுக்கு சிலநேரம் வருவாங்க வந்தால் உனக்குத் தெரியாது என்று சொல்லிவிடு.''

ஓம், வித்யா சொல்வது சரிதான். யாரோ பெடியனுடன் கதைக்கிறதைக் கண்டிருக்கிறேன். பெயர் தீபன் என்று மட்டும் சொல்லுங்க மேலே நடக்கவேண்டியதை நான் பார்த்துக் கொள்கிறேன்.''

யோகன் வந்து இறங்கினான்.

''என்ன தீர்மானம் எடுத்தாச்சா?''

''ஓம்.''

''என்ன முடிவு?''

''நாளை வித்யாவோடு பெரியம்மா வீட்டுக்கு போவதாக.

முடிவு எடுத்தாகி விட்டது இனி ஒன்றும் யோசிக்க வேண்டாம். பிரச்சினையை உருவாக்கினால் பிச்சு உதறி விடலாம்'' என்று சொல்லி விரலைச் சுண்டினான் யோகன்.

''இனி என்ன தைரியமா செயல்படுங்க. உனக்கு என்ன உதவி வேணுமென்றாலும் நானும் செய்கிறேன் என்றாள் மதுரா.

''சியாமளா அன்ரிக்கு சொல்வோமா தீபன்.''

''ஓம் கட்டாயம் சொல்ல வேண்டும் வாங்க போவோம்.''

வித்யாவைக் கண்டதும் ஆரத்தழுவிக் கொண்டு கொஞ்சினாள்.

''நாளை நடக்கப் போவதைச் சொன்னதும் சந்தோசப்பட்டாள் சியாமளா. இந்தத் தடவை நீ தவறவிட்டு விடாதே. நீ விட்டாலும் நான் விட மாட்டேன். இரண்டு பேரையும் சேர்த்து வைச்ச பிறகு தான் எனக்கு நிம்மதி. சிக்கல் ஏதாவது ஏற்பட்டால் இங்கே வந்திடுங்க. இந்த அறையை உங்களுக்கு ஒதுக்கித் தாறேன். வெளியே யாருக்கும் தெரியாமல் நான் பார்த்துக் கொள்கிறேன்.''

''என்னுடன் மட்டும் ஏன் அம்மா மனம் வருந்தும்படி நடந்து கொள்கிறா. சாந்தி, பாமினி, கோகுலன் யாருமே ஏன் என்னுடன் ஒட்டமாட்டேன் என்கிறாங்க. மாமாவுக்கும் அவர்கள் மேல் தான் அக்கறை. உறவுகள் இருந்தும் அநாதைபோல் தனித்து நிற்கிறேன் ஏன்? புரியவில்லையே? ஒட்டாத இந்த உறவுகளை விட்டு என் தீபனுடன் போயிடுறது தான் நல்லது. லண்டனில் இருந்து என்னைத் தேடி வந்திருக்கிறார். அவர் என்னைச் சந்தோசமாக வைச்சிருப்பார். போன ஜென்ம நினைவலைகள் தான் மற்றவர்களை என்னோடு ஒட்டவிடாமல் தடுக்கின்றனவோ? பூர்வ ஜென்ம பந்தங்கள் தொடர்கதையா? புத்த பகவானுக்குப் பல முற்

பிறப்புகள் பற்றிய நினைவுகள் வந்ததாக சொல்வது உண்மைதான். சாதாரண பெண்ணான எனக்கே போன ஜென்ம நினைவுகள் வரலாம் என்றால் ஆன்மீக ஞானியான புத்தருக்குப் பல பிறப்புகள் பற்றிய நினைவுகள் வந்ததில் ஆச்சரியம் இல்லை.''

நான் பாரதியாக போன ஜென்மத்தில் இருந்த போது என்னைப் பெத்த அம்மாவைப் பார்க்கணும் அதேபோல் தீபனும் போனஜென்ம வரதனின் அம் மாவைப் பார்க்கணும். ஒரே நேரத்தில் இரண்டு ஜென்மத் தாய்களைப் பார்ப்பது எல்லோருக்கும் கிடைக்கக்கூடிய ஒன்றல்ல. இரண்டு ஜென்மத் தாய் மாரையும் சந்திக்க வைச்சால் எப்படி இருக்கும்? ஐயோ சிலநேரம் என்னையும் தீபனையும் பேய் பிசாசுகள் என்று சொன்னாலும் சொல்லுவாங்க. வேண்டாம் இந்தவிஷப் பரீட்சை யாருக்கும் எதுவுமே சொல்லாமல் தீபனோடு போயிடுறது தான் ஒரே வழி. சியாமளாவைப் போல் மதுராவைப் போல் யோகனைப் போல் எல்லோரும் மறுபிறப்பை நம்புவாங்க என்று சொல்ல முடியாது இரண்டு பேரும் லவ் பண்ணுகிறாங்க அதை நிறைவேற்று வதற்காகத்தான் மறுபிறப்பு மறுஜென்மம் என்று கதை கட்டுவதாகச் சொல்லுவாங்க. நானும் தீப னும் பாரதி, வரதனின் மறுபிறப்பு என்பது உணர்வு பூர்வமான உண்மை. தீபன் கெட்டிக்காரன் சித்தி ரம் வரையத் தெரிந்தபடியால் கனவில் வந்த என் னைப் படமாக வரைஞ்சு கொண்டு என்னைத் தேடி வந்தார். தனியே என்படத்தை மட்டும்

வரைஞ்சு கொண்டு வந்திருந்தால் என்னை எப்படிக் கண்டு பிடிச்சிருக்க முடியும் என்படத்தோடு லொ, லோ, லோ என்று அலைஞ்சிருப்பார். புத்திசாலித் தனமாக கனவில் வந்த கோயில், ஆலமரம், தாம ரைக்குளம் இவைகளையும் வரைந்து வந்தபடியால் சுலபமாகக் கண்டுபிடிக்க முடிஞ்சுது. அதிஸ்டவச மாக லிங்கம் மாஸ்ரரும் சந்தித்த படியால் அலைச் சல் இல்லாமல் சந்திக்கக்கூடியதாக இருந்தது. எதற் கும் பிராப்தம் இருக்கவேணும் எவ்வளவு புத்தி சாலித்தனமாகச் செயல்பட்டாலும் பிராப்தம் இல் லாவிட்டால் தீபனால் என்னைக் கண்டுபிடிக்க முடியாமல் போயிருக்கும் அலைந்து திரிந்து விட்டு வெறுங்கையோடு லண்டன் போயிருப்பார். சொந் தங்கள் தொடர்கதைதான் அது முடிவே இல்லாதது என்பதற்கு நானும் தீபனும் நல்ல உதாரணம்.

விடிந்ததும் மனம் படபடத்தது சீ இந்த மனம் ஏன் இப்படி அடித்துக் கொள்கிறது. முருகா முருகா என்று மீண்டும் மீண்டும் உள்ளுக்குள் சொல்லிக் கொண்டே புறப்பட ஆயத்தங்கள் செய்தாள். எட்டு மணிக்கு தயாராகி விட்டாள் நெஞ்சு படக் படக் என்று அடித்துக் கொண்டது. சாமி அறைக் குள் போனாள். ''முருகா என் உறவைத் தேடிப் போகிறேன் பாரதியாக வரதனிடம் போகிறேன். வித்யாவாக தீபனிடம் போகிறேன். எங்களை வாழவை முருகா.''

சாமி அறையை விட்டு வெளியே வந்தாள் எதிரே தாய் வந்தாள் அம்மா நான் போகிறேன். என்னை ஆசீர்வதியுங்க என்று மனசுக்குள் வேண்டிக் கொண்டாள். தாய் தன்னைக் கடந்து போனதும் தன் அறைக்குள் போய் தாய் நாகபூசணித்தெய்வத்தைதொட்டு வணங்கினாள். ''போன ஜென்மத்தில் என் நெற்றியில் உன் சந்நிதானத்தில் குங்குமம் வைச்சவனுடன் நான் வாழவில்லை. இந்த ஜென்மத்திலாவது அவன்கூட என்னை வாழவையம்மா! உன்பிள்ளையாக உன்னிடம் கையேந்துகிறேன் தாயே. என் வரதனை என் தீபனை என்னிடம் தா அம்மா. என் மடியில் அவன் தூங்க வேண்டும் அவன் மார்பில் நான் சாய்ந்து களைப்பாற வேண்டும் இரண்டு ஜென்ம நினைவுகளுடன். போன ஜென்மத்தில் ஏன் எங்களைச் சேரவிடாமல் பிரித்தாய்? இந்த ஜென்மத்தில் ஏன் மறுபடியும் சந்திக்க வைத்தாய்? புரியவில்லையம்மா எனக்கு! மீண்டும் பிரிப்பதற்கென்றால் வேண்டாம் தாயே இப்போதே கொண்றுவிடு. என்னைச் சேர்த்து வாழவைப்பதற்கென்றால் எந்தத் தடங்கலும் இல்லாமல் தீபனின் கைளில் என்னைச் சேர்த்துவிடு. கருணையுள்ளதாய் என்று யாழ்ப்பாணத்தில் உள்ள மக்கள் எல்லோரும் சொல்கிறாங்க உன்னை. அது உண்மையென்றால் என்னையும் தீபனையும் சேர்த்து வையம்மா. உன்னிடம் கையேந்துவதைத் தவிர வேறு எதுவுமே என்னால் செய்ய முடியவில்லையம்மா!''

கண்களைத் துடைத்துக் கொண்டு திருநீற்றை எடுத்து நெற்றியில் இட்டுக் கொண்டாள். மனசு இலேசானது போல் இருந்தது மனசில் எந்தக் குழப் பமும் இல்லை.

வீட்டை விட்டு வெளியே வந்தாள் எதிரே இருந்து பஸ் வந்தது கையை நீட்டியதும் நின்றது. ஏறியதும் ஓர் இளைஞன் எழுந்து அவளுக்கு இருப் பதற்கு இடம் கொடுத்தான். ''தாங்ஸ்'' என்று சொல்லிவிட்டு அமர்ந்தாள். அடுத்த தரிப்பிடத்தில் அவன் இறங்கிக் கொண்டான். யாழ்ப்பாணம் நல்ல பூமி தான் ஒரு சிலபேர் செய்கின்ற தப்புகளால் அது தன் பழம் பெருமையையும் பண்பாட்டையும் இழந்து நிர்வாணமாக நடுத்தெருவில் நிற்காது. ஒரு மண்ணுக்குரிய பெருமையே அந்த மண்ணில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களின் பழக்கவழக்கங் களும் பழமை மாறாத பண்பாடுகளும் தான் நிலை நிறுத்தி வைக்கின்றன. புதிய தலைமுறைகள் எல் லாம் பழைய தலைமுறைகளின் வாரிசுகள் தான் பழைய தலைமுறைகள் தங்களிடம் கையளிக்கும் பண்டைய பாரம்பரியங்களை நலிவடைந்து போகா மல் காத்து அடுத்த தலைமுறையிடம் ஒப்படைக் கின்ற வரலாற்று சமூகக் கடமை ஒவ்வொரு தலை முறைக்கும் உண்டு. அதைத் தவறாமல் செய்தால் போதும். எந்தச் சக்தியாலும் ஒரு சமுதாயத்தின் பண்டைய பாரம்பரியங்களை அழிக்கவே முடியாது! யாழ்ப்பாணத்தின் தற்போதைய இந்த இக்கட்டான சூழ்நிலையில் இளைய தலைமுறைக்கு பெரிய சமூ

கக் கடமைப்பொறுப்பு இருக்கு. நிச்சயம் அவர்கள் நிறைவேற்றுவார்கள் என்று நம்பிக்கை நிறையவே காணப்படுகிறது.

பஸ்ஸை விட்டுக் கீழே இறங்கியதும் தீபன் நின்றான், அவனைக் கண்டதும் கவலைகள் எல்லாம் கலைந்துபோக தாமரைப் பூப்போல் மலர்ந்து சிரித்தாள்.

ஓ! நான் எவ்வளவு அதிஷ்டக்காரி இவ்வளவு அழகான இளைஞனைக் கணவனாக அடைய, துள்ளியது மனம்.

''போகலாமா?'' அவள் தான் கேட்டாள்.

''உம்''

சேர்ந்து நடந்தார்கள்.

வித்யா நாங்க இரண்டுபேரும் சேர்வதற்கு மறு ஜென்மம் எடுத்திருக்க வந்ததைப்பற்றி என்ன நினைக்கிறீங்க?''

''தெரியவில்லை நீங்க என்ன நினைக்கிறீங்க.''

''போன ஜென்மத்துக்கு முதல் ஜென்மம் இருவருமோ இல்லை இருவரில் ஒருவரோ பாவம் செய்திருக்க வேண்டும். அநேகமாக நான் உங்களைக் காதலித்து விட்டு ஏமாற்றி இருக்கலாம். ஆதலால் தான் போன ஜென்மத்தில் என்னைத் தண்டிச்

சிருக்கு தெய்வம். தன்கையை அவள் விரல்களுடன் பின்னிக் கொண்டான்.

''இல்லை தீப்ன்! நிச்சயமாக இருக்காது நீங்க என்னை ஏமாற்றி இருக்கமாட்டீங்க. அப்படிப்பட்ட மனசு உங்களுக்கு இல்லவே இல்லை. வேறு ஏதாவது காரணத்தை சொல்லுங்க நம்புகிறேன் இந்தக் காரணத்தை மட்டும் சொல்லாதீங்க. நான் நம்பவே மாட்டேன். போன ஜென்மத்தில் நீங்க ஏமாற்ற வில்லை உங்க மரணத்திற்கு நான் காரணமாக இருந்தேன். இந்த ஜென்மத்தில் எத்தனையோ மைல்களுக்கு அப்பால் இருந்து கடல் கடந்து என்னைத் தேடி வந்திருக்கிறீங்க அப்படி இருக்க மூன்றாம் ஜென்மத்தில் எப்படி நீங்க என்னை ஏமாற்றி இருக்கமுடியும்?''

மதுராவும் யோகனும் எதிர் கொண்டார்கள்·

வித்யா இன்று குளத்தங்கரை முருகனுக்கு விஷேட பூசையாம் சியாமளா அன்ரி சொன்னாங்க. இங்கே வாறதாகச் சொன்னாங்க. பாரதியின் அம்மாவும் வரதனின் அம்மாவும் வருவாங்க பார்த்திட்டுப் போகலாம் இப்படி ஒரு சந்தர்ப்பம் கிடைப்பது அரிது.

''ஓகே'' போவோம் தீபன் உங்களுக்குச் சம்மதம் தானே.

''என்ன வித்யா இது முதலில் உன் சம்மதத்தைச் சொல்லிவிட்டு தானா தீபனின் சம்மதத்தை கேட்கிறாய். இது நல்லாவே இல்ல. கட்டுப்பாட்டை

இப்பொழுதிலிருந்தே உன்கையில் எடுக்காதே நல்ல தல்ல சொல்லிவிட்டேன் என்றாள்'' மதுரா கேலி யாக.

''இல்லை இல்லை நான் அந்தநோக்கத்தில் ........................''

''மளுப்பாதே, மளுப்பாதே.''

எல்லோரும் கொல்லென்று சிரித்தார்கள்.

வித்யாவுக்கு வெட்கமாக இருந்தது.

''சரி சரி உன்கையில் தான் அதிகாரம் தீபனும் நிற்கின்ற நிலையைப் பார்த்தால் ஒத்துக்கொள்ளு மாப் போல் தான் இருக்கு சியாமளா அன்ரியும் வாறங்க புறப்படுவோம்.''

ஆலமரத்தடியில் தீபனும் வித்யாவும் ஒரளவு முகத்தை மறைத்துக் கொண்டு நின்றார்கள்.

சியாமளா எச்சரித்திருந்தாள் சிலநேரம் யாரா வது பாரதியையும் வரதனையும் ஞாபகம் வைத்தி ருந்தால் சந்தேகம் ஏற்படலாம் என்று.

வித்யா அதோ பார் நீலச்சேலை உடுத்திக் கொண்டு வருவதுதான் வரதனின் அம்மா.

தீபன் மனசுக்குள் தாயை வணங்கினான்.

சில நிமிடங்கள் கரைந்தன.

வெள்ளையில் நீலப்புள்ளி போட்ட சேலை உடுத்துக்கொண்டு வருவது தான் உன் அம்மா.

தளர்ந்து போயிட்டாங்க இல்லை?

வயசாயிட்டுது அப்படித்தான். ''சரி போகலாமா.

முருகனைக் கும்பிட்டுப் போவோம்.''

கூட்டத்தோடு நின்று முருகனை வணங்கினார்கள்.

''போன ஜென்மத்தில் எங்கள் இருவரையும் பிரித்த நீ இந்த ஜென்மத்திலாவது ஒன்று சேர்த்து வை'' மனமுருகி வேண்டிக் கொண்டாள்.

---

சியாமளா வீட்டில் பெரிய விருந்தே ஏற்பாடு செய்திருந்தாள்.

மாலை இரண்டு மணிக்கு ஓட்டோ வந்து வாசலில் நின்றது. வித்யாவும் தீபனும் ஏறிக் கொண்டார்கள்.

''மூன்று பேர் பிரயாணம் செய்யக்கூடாது. நீங்க போங்க நான் பஸ்ஸில் வருகிறேன்'' என்றான் யோகன்.

எல்லோருக்கும் கையசைத்தாள் வித்யா.

''லண்டன் போனபின்பு தானடி எனக்கு நிம்மதி'' என்றாள் மதுரா.

ஓட்டோ புறப்பட்டது.

''அன்ரி எவ்வளவு நிம்மதியாக இருக்கு இப்போ.''

உண்மை தான் மதுரா. பாரதியை நான் இழந்து பட்டபாடு இருக்கே வருஷக் கணக்கில் மனம்அழுது கொண்டே இருந்திச்சு. லவ் பண்ணுகிறவங்களிலும் பார்க்க அவங்க இரண்டு பேருக்கும் உதவி செய்கிறவர்களுக்குத்தான் ரென்சன் அதிகம். எப்டியாவது இரண்டு பேரும் சேர்ந்திட வேண்டும் என்று தவித்துக் கொண்டே இருக்கும் மனம்.

ஓட்டோவுக்குக் காசைக் கொடுத்து அனுப்பி விட்டு உள்ளே வந்தார்கள், வித்யாவுக்கு சற்றுப் பயமாகத்தான் இருந்தது.

''பெரியம்மா'' என்று குரல் கொடுத்தான்.

''வா உள்ளே தான் இருக்கிறேன்.''

''வா பிள்ளை.''

வித்யாவுக்கு வியப்பாக இருந்தது. தீபனைப் பார்த்தாள்.

பெரியம்மாவுக்கு ஏற்கனவே சொல்லி விட்டேன்.

அன்ரி என்று சொல்லிக் கொண்டே அருகே போனாள்.

பொருத்தமாகத் தான் தெரிவு செய்திருக் கிறான்.

"நீ வந்தது வீட்டில் தெரியுமா?"

"இல்லை அன்ரி."

"சரி உள்ளே போய் உடுப்பை மாத்தம்மா. வெளியே எங்கும் போயிடாதே!"

எந்த உடுப்பை மாற்றுவது என்று அறைக்குள் வந்து நின்று யோசித்தாள்.

வித்யா.

அறைக்குள் அவனுடன் தனியே நிற்பது வெட் கத்துடன் சற்று அச்சமாகவும் இருந்தது.

தீபன் அவளைத் தொடவே இல்லை.

புதிய சாரத்தையும் சேட்டையும் எடுத்து அவள் முன் நீட்டினான்.

"இதைப் போட்டுக் கொள்ளுங்க."

சாரத்தையும் சேட்டையும் வாங்கியவள் வியப் புடன் பார்த்தாள் அவனை.

"நாளைக்கு புதுசா ஸ்கேட் பிளவுஸ் வாங்கித் தாறேன் அதுவரைக்கும் போட்டுக் கொள்ளுங்க."

''என்ன சிரமமா இருக்கா?''

''இல்லை'' என்று இழுத்தாள்.

''ஸாரி! நான் வெளியே போகணும் இல்ல.''

தலையைக் குனிந்து கொண்டு சிரித்தாள் நாணத்துடன்.

பஸ்சுக்குக் காத்து நின்ற யோகனிடம் அவசரமாக வந்தாள் மதுரா.

''யோகன் வித்யாவுக்கு மாற்று உடுப்பு இல்லை.''

''கொஞ்சம் நில்லுங்க எடுத்துக் கொண்டு வருகிறேன்.'' சைக்கிளில் வீட்டுக்குப் பறந்தாள்.

''போனவேகத்தில் பார்சலுடன் வந்தாள்.''

''இந்தாங்க இதை வித்யாவிடம் கொடுங்க நான் தந்ததென்று.''

''நீங்களும் வாங்களேன் ஒரு மணித்தியாலத்தில் திரும்பி விடலாம்.''

சைக்கிளை சியாமளா அன்ரி வீட்டில் விட்டு பூட்டி திறப்பை எடுத்துக் கொண்டு யோகனுடன் பஸ்ஸில் ஏறினாள்.

தீபனே வரவேற்றான்.

''வித்யா எங்கே?''

''உள்ளே இருக்கிறாங்க.''

சாரமும் சேட்டும் அணிந்து கட்டிலில் சாய்ந்த படி கதைப்புத்தகம் படித்துக் கொண்டிருந்தாள்.

''வந்ததும் கதைப்புத்தகமா நல்லா இருக்கு!''
''வா மதுரா.''

''என்னடி உடுப்பு இது? ஆண்கள் மாதிரி. தட்டிவிட்டால் சரம் கீழே இறங்கிவிடும்.''

''என்ன செய்வது தீபன் தான் தந்தார்.''

''எல்லாம் காரணத்தோடு தான் வசதிஇல்ல.''

''சீ போடி கன்னா பின்னா என்று கற்பனை பண்ணாதே நீ. திபன் அப்படிப்பட்டவர் இல்லை இந்தச் சாரத்தையும் சேட்டையும் தந்திட்டு வெளியே போனவர்தான் உள்ளே வரவில்லை.''

''நீ சொல்கின்ற தொனியைப் பார்த்தால் உள்ளே இன்னும் வரவில்லையே என்ற கவலையின் சாயல் கலந்தது போல் இருக்கு.''

''வேண்டாம் மதுரா எனக்குக் கூச்சமாக இருக்கு.''

''வித்யா! தீபன் யார்? உன் கூட சேர்ந்து வாழப் போறவர் தானே!''

''என்றாலும் கூச்சமாக இருக்கு.''

''சரி விடு இந்தா இதைப் போட்டுக்கொள்.''

''ஓ தாங்ஸ் மதுரா. வந்ததும் நினைச்சேன் மதுராவிடம் இரண்டு சோடி உடுப்புகளைக் கேட்டு வாங்கி வந்திருக்கலாம் என்று நீயே கொண்டு வந்து தந்திட்டாய்.''

''வீட்டில் வரவேற்பு எப்படி?''

''தீபன் ஏற்கனவே பெரியம்மாவிடம் சொல்லி விட்டார். உள்ளே காலடிவைச்சதும் 'வா பிள்ளை' என்று அன்போடு அழைச்சாங்க. ஆச்சரியமாக இருந்திச்சு.''

கதவு தட்டும் சத்தம் கேட்டது.

''வாங்க தீபன்!''

இருவர் முன்னே தேநீர் கோப்பையை நீட்டினான்.

''ம்ம் வித்யா கொடுத்து வைச்சவள்.''

''தீபன் அடுத்து என்ன செய்யப் போகிறீங்க?''

''நாளை காலை பெரியம்மாவும் மாமாவும் வித்யா வீட்டுக்குப் போய் எங்க கல்யாணத்தைப் பற்றிப் பேசுவாங்க. அதற்கு உடன்பட்டால் அவங்க சம்மதத்துடன் லண்டனுக்கு போவோம். இல்லாவிட்டாலும் லண்டனுக்குப் போவோம்.''

''மிஸ் மதுரா நேரமாச்சு புறப்படுங்க.''

''பிறகு பஸ் கிடைக்காது,''

''தீபன் நீங்க கூட்டிக் கொண்டு போய் விட்டு வாங்க மதுராவை.''

''இல்லை வித்யா நான் பஸ்ஸில் போய்விடு வேன் பிறகு சந்திக்கிறேன்.''

பஸ் நிலையம் வரை மதுரா கூட வந்தான் தீபன்.

''மிஸ் மதுரா உங்க உதவிக்கு நான் கடமைப் பட்டிருக்கிறேன். உங்களுக்கு ஏதாவது உதவி தேவை என்றால் கேளுங்க செய்கிறேன். ஒரு சகோ தரனிடம் எந்தத் தயக்கமும் இல்லாமல் கேளுங்க. நிச்சயம் செய்வேன். என் கடமையாகக் கருதுகி றேன், வித்யாவுக்காகவாவது நான் உங்களுக்கு உதவி செய்ய வேண்டும் சொல்லுங்க மதுரா.''

''தாங்ஸ்தீபன் முதன்முதல் உங்களைப் பார்த்த போது வித்யா அதிஸ்டக்காரி என்ற நினைப்புத் தான் என்னுள் எழுந்தது. வித்யா ஓர் அனிச்ச மலர் போல் மென்மையானவள். சின்ன ஒரு துன்பத்தைக் கூட தாங்கும் மனபலம் இல்லாதவள். வீட்டில் அடிக்கடி ஏற்படும் சச்சரவுகளால் மனம் சோர்ந்து துவண்டு போவாள். அவள் மனம் நோகாமல் நடந்து கொள்ளுங்க. தாய் சகோதரங்கள் இருந்தும் ஒரு அநாதை மாதிரி வாழ்ந்து கொண்டிருக்கிறாள். உங்களிடம் நிறையவே அன்பை எதிர்பார்ப்பாள்.

சிறகே இல்லாத பறவை அவள் உங்க அன்பெனும் சிறகை அவளுக்கு கொடுங்க இன்பமாக பறந்து திரியவேண்டும் அவள் ஆசை தீரும் வரை.''

''மதுரா எனக்கு கொஞ்ச நாளாகத்தான் வித்யாவைத் தெரியும் ஆனால் அவள்கூட ஆண்டுக் கணக்கில் சிநேகிதியாக இருக்கிறீங்க. வித்யாவைப் பற்றி நிறையவே தெரிஞ்சு வைச்சுச் சொன்னீங்க ரொம்ப நன்றி. எந்தக் குறையும் வித்யாவுக்கு இருக்காது. நான் ஒரே பிள்ளை தான் அம்மா அப்பாவுக்கு. அவங்களும் வித்யாவை மருமகளாக இல்லை மகளாகவே நடத்துவாங்க.''

''தாங்ஸ் தீபன்! இவ்வளவு காலமும் பழகி விட்டு அவளைப் பிரிவது என்று வந்தால் வருத்த மாகத்தான் இருக்கு. பெண்ணாய் பிறந்தால் ஒரு வருக்கு வாழ்க்கைப்பட வேண்டும் தானே அப்படிப் பார்த்தால் வித்யாவுக்கு அன்பான வாழ்க்கை அமைஞ்சிருக்கு.''

''லண்டனில் இருந்து வந்து அழைத்துக் கொண்டு போறீங்க. கடவுள் உங்க இரண்டுபேரை யும் ஆசீர்வதிக்கட்டும்.''

பஸ்ஸை கைகாட்டி மறித்தான்.

ஏறிக் கொண்டாள்.

"சாந்தி அவள் இன்னும் வரவில்லையா?''

''என்னைக் கேட்டால்?''

''ஐந்து மணியாச்சு கழுதை எங்கே போய்த் தொலைஞ்சாள் வரட்டும் வரட்டும்.''

''நீ தான் அவளுக்கு இடம் கொடுத்துகெடுத்து விட்டாய். எங்கே போகிறேன் எப்போ வருவேன் என்று சொல்லி விட்டுப் போய் வருகிறாளா? உம் ஒன்றுமில்லை தான் விரும்பிய நேரத்தில் போகிறாள் விரும்பிய நேரத்தில் வருகிறாள். வீட்டில் இருக்கிறவங்க எல்லாரும் விசர்கள் என்று அவள் நினைப்பு.''

''நீ அவளைச் சொல்லித் திருத்தலாம் தானே.''

''நான் சொன்னால் அவள் எங்கே கேட்பாள்? என் வேலையைச் செய்ய எனக்கு நேரம் போதாமல் இருக்கு. இடையில் அவளை எப்படிக் கவனிப்பது?''

''அது தானே அவள்என்ன சின்னப்பிள்ளையா? வளர்ந்திட்டாள் ஒரு பொறுப்புணர்ச்சி வேண்டாமா? என்னையோ மற்றவர்களையோ ஏதும் கேட்கிறாளா? சாப்பிடுகிறாள் தூங்கிறாள் போகிறாள்வாறாள் யாருடனும் ஒட்டாத ஜென்மம்.''

''கண்ணைத் திறந்து வைத்துக் கொண்டே கனவு காண்பாள் இமை வெட்டாமல் யோசித்துக்

கொண்டே இருப்பாள் அடிக்கடி. பக்கத்தில் நாங்க யார் போனாலும் கவனிக்காமல் ஒரே அடியாக யோசித்துக் கொண்டே இருப்பாள். இரண்டு மூன்று தடவை கேட்டேன் ''என்ன யோசிக்கிறாய்'' என்று எழுந்துபோய்விடுவாள். ''சரியான நெஞ்சழுத்தக்காரி'' என்று பொரிந்து தள்ளினாள் பாமினி.

கடிகாரம் ஆறு மணியைத் தொட்டது.

கோகுலனின் சைக்கிள் உள்ளே வந்தது.

''வித்யாவை இன்னும் காணவில்லை'' என்றாள் தாய்.

''எங்கே போனாள்?''

''தெரியவில்லை''

''சொல்லி விட்டு போகவில்லையா?''

''அவளுக்கு அந்தப் பழக்கம் இருந்தால் தானே.''

''அப்போ விடம்மா! வருகின்ற நேரத்தில் வரட்டும். அவளைத் தேடி அலைய முடியாது.''

''என்னடா இப்படிச் சொல்கிறாய்?''

''பின்னே எங்கேயென்று போய்த் தேடுவது. ஆண்களே ஐந்து மணிக்கு முதலே சென்றி பொயின்ரை கடந்திடுறாங்க பிறகு யாருமே அந்தப்

பக்கமே போவதில்லை. இவளுக்கு மூளை இல்லையா?''

''என்னடா செய்வது? பெத்திட்டேனே போய் தேடிப் பாரடா.''

''எங்கே என்று தேடுவதம்மா?''

''எனக்கு என்னவோ பயமா இருக்கு.''

''சரி சரி போய் தேடுகிறேன். நாட்டு நிலமை தெரிஞ்சும் எங்கே போனாள்?''

சைக்கிளை எடுத்துக் கொண்டு தெருவுக்கு வந்தான். நேரம் மாலை ஆறு முப்பது.

''என்ன பாமினி? இவ்வளவு நேரமும் என்ன செய்கிறாள். நாங்கள் தேடுவோமே என்று அவள் யோசிக்க வேண்டாமா?''

சாந்தி எழுந்து வித்யா அறைக்குள் வந்து மேசையைத் தடவினாள்.

வித்யா எழுதிய கடிதம் கையில் அகப்பட்டது. பிரித்துப் படித்ததும் அதிர்ச்சியாக இருந்தது சாந்திக்கு.

என்னக்கா என்று கேட்டுக் கொண்டு பாமினி வந்தாள்.

அவளிடம் கடிதத்தை தந்தாள்.

''என்ன ஓடி விட்டாளா?''

''எப்படித் தெரியும் உனக்கு?''

''கடிதம் எழுதி வைச்சால் அதுதானே அர்த் தம்!''

''எனக்கு சந்தேகம் இருந்திச்சு கேட்டால் சொல்லவா போகிறாள்?''

''ரத்னாவைத் தெரியுமல்ல.''

''தெரியும்.''

''ஒருநாள் இவளைப் பார்த்ததும் ''தங்கச் சியா'' என்று கேட்டாள். ஓம் என்றேன். இவள் லவ் பண்ணிக் கல்யாணம் செய்வாள் என்று சொன் னாள். வித்யா முகவெட்டானவள் தான் இப்போ என்ன செய்வது?''

''நடக்கப் போவதைக் காணவேண்டியதுதான்!

ஆமி சென்றிப் பொயின்றில் அகப்பட்டு விட் டாளோ என்று தான் பயந்தேன் நல்லகாலம் அப் படி ஒன்றும் இல்லை.''

அலைந்து திரிந்து விட்டு கோகுலன் வந்தான்.

''என்னடா?'' தாய் கேட்டாள்.

''ஒரு இடமும் இல்லை போனவள் தானே எப்பவாவது வரட்டும் எனக்குக் களைப்பா இருக்கு கோப்பி கொண்டா?''

''என்னடா ஒரு பொறுப்பு இல்லாம— ——

என்னம்மா, என்ன செய்யச் சொல்கிறாய்? தெருவில் போவோர் வருவோரை என் தங்கச்சியைக் காணவில்லை கண்டீங்களா? என்று கேட்கச் சொல் கிறாயா? இல்லை ஆமி சென்றிப் பொயின்ரில் போய் இவளைப் பற்றி கேட்கட்டுமா கழுதை எங்கே தொலைஞ்சாளோ.''

சரி நான் மாமா வீட்டுக்குப் போய் வருகிறேன்.

''கோகுலன் அவளைத் தேடத் தேவை யில்லை.''

''ஏன்?''

''எங்கேயோ பத்திரமாக இருப்பாள்.''

கடிதத்தைக் கோகுலனிடம் நீட்டினாள் சாந்தி.

வாசித்தவனுக்கு சற்று அதிர்ச்சியாக இருந்தது.

சற்று நேரத்தில் மாமாவும் தாயும் வந்தார்கள்.

கடிதத்தைப் பார்த்ததும் கமலா ஊமையாகிப் போனாள்.

மாமா வந்த வேகத்திலேயே திரும்பினார்.

யாரும் யாருடனும் பேசவில்லை வீடு அமைதி யாக இருந்தது.

கதவில் இருமுறை மெல்லத் தட்டினான்.

மெல்லத் திறந்தாள்.

''வரலாமா!''

''வாங்க'' ஆடையை மாற்றி ஸ்கேட்டும் பிளவுசும் போட்டிருந்தாள்.

இரண்டு பேர் இருக்கக்கூடிய செற்றியின் ஒரு பக்கத்தில் அமர்ந்தான்.

''நீங்களும் இருங்க.''

செற்றியின் அடுத்த மூலையில் அமர்ந்தாள்.

எதிரே இருக்கும் செற்றியைக் காட்டி.

''அதில் இருக்கலாமே.''

''பரவாயில்லை.''

''பாரதியும் வரதனும் எழுதிய கடிதங்களை எல்லாம் படிச்சீங்களா?''

''படிச்சேன்.''

''ஜன்னல் ஊடாகப் பாருங்க நிலா தெரியுது.''

''அன்று வந்ததும் இதே நிலா தான். இன்று தெரிவதும் அதே நிலா தான். புரியவில்லையா?''

வரதன் கொல்லப்பட்டதாக பாரதி எழுதிய கடிதத்தின்படி அன்றைய தினம் பூரண நிலவு

பாரதி தற்கொலை செய்ததும் பூரண நிலவன்று தான் என்னுடைய டயறி குறிப்பின்படி முதன் முதல் என் கனவில் நீங்க வந்ததும் பூரண நிலவன்று தான். உங்க கனவில் எப்போ நான் வந்தேன்?

அன்றும் பூரணை தான் ஏன் என்றால் அன்று மாலையில் தான் மனோன்மணி அம்மன் கோவிலில் திருவிளக்குப் பூசை நடந்தது.

இரண்டு பேரும் ஒன்றாய் சேர்ந்திருக்கும் இன்றும் பூரணை தினம் தான்.''

''மொத்தத்தில் பூரண நிலவன்று தான் எல்லாச் சம்பவங்களும் நடக்குது.''

மானிட வாழ்க்கைக்கும் இந்தச் சந்திரனுக்கும் விஞ்ஞானத்தால் நிரூபிக்க முடியாத தொடர்பு இருந்து கொண்டே வருகுது என்று தான் நினைக்கிறேன்.''

என்ன நினைத்தாளோ ஜன்னல் அருகே போய் கம்பிகளைப் பிடித்துக் கொண்டு நிலவை உற்றுப் பார்த்தாள்.

அவள் அருகே வந்தவன் அவள் தோள்களில் கைகளைப் பதித்தான்.

மெல்லத் திரும்பி நிமிர்ந்து பார்த்தாள்.

அவள் இதழ் தாகத்தால் துடித்தன.

புரிந்து கொண்டவன் மெல்லக் குனிந்தான்.

மறுக்கவில்லை அவள்.

வெண்ணிலா இருவரையும் ஆரத்தழுவியது.

''வெண்ணிலா சொல்கிறது நீ என்றென்றும் எனக்கே சொந்தமென்று.''

அவள் காதினுள் மெல்லச் சொன்னான்.

கண்களை மூடி அவன் மார்பினில் சாய்ந்து கொண்டாள்.

கார் வித்யாவின் வீட்டின் முன்னே நின்றது பெரியம்மாவும் மாமாவும் உள்ளே வந்தார்கள். சாந்தி தான் ஜன்னல் ஊடாகப் பார்த்துவிட்டு வெளியே வந்தாள்.

''யார் வேணும்.''

''வித்யா வீடு...———'' என்று இழுத்தாள் பெரியம்மா.

''இது தான் நீங்க...————''

''வித்யா பற்றித்தான் கதைக்க வந்திருக்கிறோம்.''

இப்படி இருங்க அம்மாவைக் கூப்பிடுகிறேன்.

கமலா வந்தாள் தொடர்ந்து சாந்தி, பாமினி, கோகுலன் வந்தார்கள்.

''நீங்கள் தானே வித்யாவின் அம்மா,''

''ஓம்'' கதிரையில் அமர்ந்தாள் கமலா.

''வித்யா எங்க வீட்டில்தான் இருக்கிறாங்க.

என் தங்கச்சி மகன் லண்டனில் இருந்து யாழ்ப் பாணம் வந்திருந்தான். வந்த இடத்தில் வித்யாவை விரும்பி வீட்டுக்குக் கூட்டி வந்திட்டான். தகப்பன் லண்டனில் இஞ்சினியராக இருக்கிறார். வீடு கார் என்று வசதியானவர்கள். இவன் ஒரே பிள்ளை.''

''நீங்க பெரிய மனசு வைச்சு ஒத்துழைத்தால் இரண்டு பேருக்கும் கல்யாணம் செய்து வைக்கலாம் தயவு செய்து மாட்டேன் என்று மட்டும் சொல்லி விடாதீங்க. வாழவேண்டிய இரண்டு உள்ளங்களை யும் பிரிப்பது அழகல்ல. வித்யாவை எங்களுக்கு நல்லாப் பிடிச்சிருக்கு முழுமனசோடு மருமகளாக ஏற்றுக் கொள்ள நாங்க தயாராக இருக்கிறோம்.''

இப்படி வீடு தேடி வருவாங்க என்று எதிர் பார்க்காததினால் என்ன பேசுவதென்றே எவருக் கும் புரியவில்லை.

''வித்யா ராத்திரி என் அறையில் தான் தூங் கினாள்.''

''என்னம்மா யோசிக்கிறீங்க?''

''இல்லை! இவங்க மூன்று பேரும் வித்யாவுக்கு மூத்தவங்க இவங்க பல்கலைக்கழகத்தில் படித்துக்

கொண்டிருக்கிறாங்க. வித்யாவின் கல்யாணத்தை எப்படி இப்போ வைச்சுக் கொள்வது என்றுதான் ——————— ?''

''தீபன் அடுத்த வாரம் லண்டன் போகிறான் கையோடு வித்யாவையும் அழைத்துக் கொண்டு போகத்தான் அவன் விருப்பம். அவன் லண்டனில் இஞ்சினியருக்கு படிக்கிறான் படிப்பு முடிஞ்சதும் கல்யாணத்தை வைத்துக் கொள்ளலாம். அதுவரை வித்யாவும் லண்டனில் படிக்கட்டும்'' என்கிறான்.

''நீங்க இவ்வளவு தூரம் சொல்கிறீங்க எப்படித் தட்டிப் பேசுவது?''

''அம்மா உங்களிடம் சீதனம் அது இது என்று எதுவுமே நாங்க கேட்கமாட்டோம். உங்க மனப் பூர்வமான சம்மதத்துடன் வித்யாவைத் தன்கூட லண்டன் கூட்டிப் போகத்தான் தீபன் விரும்பு கிறான்'' என்றார் மாமா.

சாந்தி, பாமினி, கோகுலனைப் பார்த்தாள் கமலா.

''எங்களுக்கு சம்மதம் அவள் எங்கே இருந்தா லும் நல்லாய் இருந்தால் சரி.''

அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம். தங்கச்சி யும் புருசனும் வித்யாவைத் தங்கள் சொந்தப் பிள்ளை மாதிரி பார்த்துக் கொள்ளுவாங்க. மரு மகளைக் கொடுமைப்படுத்தும் பழக்கம் யாழ்ப்பா

ணத்து மக்களிடம் இல்லை. அது இந்தியாவில் தான் மாமியார் கொடுமை மருமகள் கொடுமை இருக்கு.

வித்யாவை நாங்க பார்க்கணும்.

''நிச்சயமாக. உங்க பிள்ளைதானே. இரண்டு பேரையும் கூட்டிக் கொண்டு வருகிறோம்.''

சாந்தி தேநீர் கொண்டு வந்து வைத்தாள்.

''சந்தோஷம் நாங்க புறப்படுகிறோம்.''

பெரியம்மா வந்து நடந்ததைச் சொன்னதும் வித்யாவுக்குக் கொள்ளை மகிழ்ச்சி.

தீபனுடன் யாழ்ப்பாணம் புறப்பட்டாள்.

மதுராவையும் சியாமளாவையும் சேர்த்துக் கொண்டு நகைக் கடைகளுக்கும் சேலைக்கடை களுக்கும் ஏறி இறங்கினாள்.

மதியம் மதுரா வீட்டில் விருந்தே வைத்தாள்.

அடுத்த நாள் எல்லோரும் நயினாதீவுக்கு வந் தார்கள்.

அவன் நீட்டிய கைகளைப் பற்றிக் கரையில் இறங்கினாள்.

பழைய நினைவுகள் ஊர்வலம் வந்தன.

தீபனும் வித்யாவும் அந்தப் பாறாங்கல்லை

வந்து பார்த்தார்கள். பாரதி வரதன் என்ற பெயர் தெளிவாகத் தெரிந்தது.

''வரதன் தான் கூர் ஆயுதத்தால் எழுதி இருப்பார் என்றாள்'' வித்யா.

கோயிலில் வழிபாடு செய்து கொண்டு சாமியாரிடம் வந்தார்கள். இரண்டு பேரையும் சாமியார் ஆசீர்வதித்தார்.

மற்றவர்களை கோயிலில் நிறுத்திவிட்டு இருவரும் மட்டும் அந்தப் பாறாங்கல்லு இருக்கும் இடத்துக்கு மீண்டும் வந்தார்கள்.

வித்யா முதலில் கல்லில் அமர்ந்து கொண்டாள்.

பிறகு ஏறிய தீபன் அவள் மடியில் தலைவைத்துப் படுத்தான்.

அவன் கன்னங்களை அணைத்துமுத்தமிட்டாள்.

''வரதன் எத்தனை ஜென்மங்கள் எடுத்தாலும் எனக்கு நீங்க. உங்களுக்கு நான்.

''ஒவ்வொரு ஜென்மத்திலும் என் மடியில் நீங்க இப்படித் தூங்க வேண்டும். உங்க மார்பினில் நான் சாய்ந்து சுகம் காணவேண்டும் கண்மூடி.''

''அந்தக் கடல் அலைகளைப் பாருங்க மேகங்களே இல்லாத நிர்மலமான நீலவானைப் பாருங்க அழகாக இல்லை!''

''இல்லை.''

''இல்லையா?''

''என் வித்யா தான் எனக்கு அழகு. இப்படி மடிமீது தலைவைத்துத் தூங்கும் சுகம் இருக்கே அதுதான் இன்பம்.''

''சீ போங்க.''

தாவணி சரிந்து அவன் முகத்தை மூடியது.

கண்ணாடி போன்ற சேலையை ஊடறுத்துப் பார்த்தான்.

அவசரமாகத் தாவணியை அள்ளி மூடினாள்.

சீ என்று அவன் கண்களை கையால் மறைத்தாள்.

''போவோமா?''

இன்னும் கொஞ்ச நேரம் இருப்போம்.

''தேடி வந்திடப்போறாங்க தீபன்போவோம்.''

கல்லை விட்டு இறங்கி நடந்தார்கள்.

''பாரதியும் வரதனும் இப்படித்தான் நடந்திருப்பாங்க இல்ல!''

''இரண்டு பேரும் அடுத்த ஜென்மத்திலும் இப்படிச் சேர்ந்து நடப்போம்.''

அவன் விரல்களுடன் தன் விரல்களைப் பின்னிக் கொண்டாள்.

மதுரா இரண்டு இளநீருடன் வந்தாள்.

''வரதனும் பாரதியும் என்ன சொன்னாங்க.?''

''சியாமளா ஏன் வரவில்லை என்று கேட்டாங்க?''

''மதுரா வந்திருக்கிறாங்க என்று சொல்லி இருக்கலாமே.''

குடித்து விட்டுப் புறப்படுங்கள் மற்றவங்க வள்ளத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறார்கள்.''

வள்ளம் நீரைக் கிழித்துக் கொண்டு விரைந்தது

அலைகள் வள்ளத்தில் மோதி தீபனின் முகத்தில் பட்டு வழிந்தது.

தாவணியால் துடைத்தாள் வித்யா.

வீட்டுக்கு வந்ததும்————

கடல் பயணம் அலுப்பாக இருந்தது தூங்கிப் போனாள்.

விடிந்ததும் பரபரப்பாக ஆயத்தமானார்கள்.

காரை இடைஇடையே மறித்து மதுராவும் சியாமளாவும் ஏறிக் கொண்டார்கள்.

உள்ளே வந்தவர்களை கமலாவும் சாந்தியும் வரவேற்றார்கள். சேலையோடு கையிலும் கழுத்திலும் நகைகளுடன் வந்த வித்யாவைப் பார்த்ததும் கமலாவே ஒரு விநாடி அசந்து போனாள்.

பளிச்சென்று மின்னினாள் வித்யா.

வித்யாவின் கையைப் பிடித்து உள்ளே அழைத்துச் சென்றாள் தாய்.

தாய் தன்னைக் கண்டிப்பாள் என்று பயந்தாள்.

''சாந்தியும் ப்ரமினியும் இருக்க நீ முந்திக் கொண்டு போவது மனசுக்கு ஒருமாதிரியாக இருந்தாலும் நீயே தேடிக்கொண்ட வாழ்க்கை சந்தோசமாக வாழ்ந்தால் அது போதும்.''

''பாமினி! அவனைப் பார்த்தாயா? செக்கச் செவப்பா குழுகுழு என்று அப்பிள் பழம்போல.''

''வித்யா கெட்டிக்காரி! கெம்பஸ், படிப்பு, வேலை என்று காலத்தை வீணடிக்காமல் சின்ன வயசில் வாழ்க்கையை அமைச்சுக் கொண்டாள் புத்திசாலி'' என்றாள் சாந்தி.

இருவரும் வித்யாவிடம் வந்தார்கள்.

''எப்போ லண்டன் போகிறாய்?''

நாளை காலை பத்து மணிக்கு பலாலியில் இருந்து கொழும்புக்குப் போகிறோம். கொழும்பில் இரண்டு அல்லது மூன்று நாளில் பாஸ்போட் கிடைச்சிடும். பாஸ்போட் கிடைச்ச உடன் லண்டனுக்குப் போய் விடுவோம்.''

''கல்யாணத்தை உடனே வைக்கப் போகிறாயா?''

''அவர் அப்பா அம்மாவைக் கேட்டுத்தான் முடிவு செய்ய வேண்டும் என்கிறார்.''

''கல்யாணத்தை எங்களுக்கு அறிவிப்பாய் தானே.''

''ஓம் அறிவிக்கிறேன்.''

''விஷ் யூ ஆல் த பெஸ்ற்.''

''தாங்ஸ் அக்கா.''

பாமினியிடமும் கோகுலனிடமும் விடை பெற்றுக் கொண்டு ஹோலுக்கு வந்து தீபன் அருகே அமர்ந்தாள்.

தாங்கள் கொண்டு வந்த பலகாரத் தட்டுக்களையும் வாழைப்பழத்தட்டையும் மேசையில் வைத்துவிட்டு ஆயத்தமானார்கள் போவதற்கு.

''வித்யா இனி எங்க வீட்டுப்பிள்ளை நாங்க வரப்போகிறோம்.'' என்றாள் பெரியம்மா.

வித்யா தீபனுடன் ஒட்டிக் கொண்டு நடந்தாள்.

காலைப்பொழுது இனிமையாக விடிந்தது.

வழியனுப்ப பஸ்நிலையத்துக்கு எல்லாரும் வந்திருந்தார்கள். ஒவ்வொருவராக விடைபெற்றுக் கொண்டு வந்து கடைசியாக மதுராவிடம் வந்ததும்

அவளைக் கட்டிக் கொண்டு குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

மதுராவாலும் கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியவில்லை சேர்ந்து அழுதாள்.

''வித்யா உன்மனம் போல் வாழ்வு கிடைச்சிருக்கு நீ ஆனந்தமாக வாழணும்.''

மேலே பேசமுடியாமல் அழுதாள்.

''தீபன் ரொம்ப நல்லவர் உன்னைப் பூப்போல் வைச்சிருப்பார். எந்தத் துன்பமும் உனக்கு இனி இல்லையடி.''

வித்யா தன் கையில் இருந்த மோதிரத்தைக் கழற்றி மதுராவின் விரலில் போட்டாள்.

''இந்த மோதிரத்தை நீ கழற்றவே கூடாது இது என் அன்புப் பரிசு இந்த மோதிரத்தை நீ பார்க்கும் போதெல்லாம் என் ஞாபகம் வரவேண்டும் உனக்கு. எனக்கு வித்யா என்றொரு உயிர்த் தோழி இருந்தாள். அவள் தான் விரும்பியவனுடன் வாழ்வதற்காக லண்டனுக்குப் போனாள் என்று ஞாபகப்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும்.''

தீபன் அருகே வந்தான்.

''மதுரா நாங்கள் லண்டன் போய் உங்களுக்கு விமான ரிக்கட் அனுப்புகிறோம் எனக்கு அக்காவோ தங்கச்சியோ இல்லை. நீங்கதான் வித்யாவுக்கு

தோழியாக இருந்து எங்க திருமணத்தை நடத்தி வைக்கவேண்டும்.''

''நிச்சயமாக வருவேன் என் வித்யாவின் திரு மணத்துக்கு நிச்சயம் வருவேன். ஆனால் நீங்க இரு வரும் தாய்மண்ணை மறந்திடக்கூடாது.''

''நாங்கள் எங்கே இருந்தாலும் யாழ்ப்பாணம் தான் எங்கள் தாய் வீடு. வருவோம். மீண்டும் வரு வோம். எங்கள் தாய் நாட்டைத் தேடி.''

பஸ் பலாலி விமான நிலையத்தைத் தேடிக் கொண்டு ஓடியது.

**கொ**ழும்பு விமான நிலையம் கலகலப்பாக இயங்கிக் கொண்டிருந்தது.

விமானம் மெல்லமெல்ல மேலே எழுந்து கொண் டிருந்தது வித்யா தீபனின் தோளில் சாய்ந்து கொண் டாள்.

''வித்யா.''

''உம்''

''ஏதாவது பேசேன் வித்யா.''

''எத்தனை ஜென்மங்கள் எடுத்தாலும் உங்க தோளில் சாயும் சுகம் வேண்டும்.''

விமானக் கண்ணாடி ஊடாக நிலா பால்போல் தெரிந்தது.

''அன்று வந்ததும் இதே நிலா.
இன்று வந்ததும் அதே நிலா.''
மெல்ல அவன் மார்பில் சாய்ந்தாள்.

இன்பங்களைச் சுமந்து கொண்டே விமானம் லண்டன் மாநகரைத் தேடிப் பறந்து கொண்டிருந்தது.

''அன்று வந்ததும் இதே நிலா''
''இன்று வந்ததும் அதே நிலா.''
''இருவர் கண்ணுக்கும் ஒரே நிலா''
''இணையை வைத்ததும் இந்நிலா''

இந்த நாவலில் வரும் பெயர்களும், ஊர்களும் சம்பவங்களும் யாவும் கற்பனையே.

முற்றும்

"ஒன்று வந்ததும் இந்த நிலை,
இன்று வந்ததும் அதே நிலை,"
[illegible]

[illegible]

"[illegible]"
"[illegible] நிலை."
"[illegible]"
"[illegible]"

இந்த நாவலில் வரும் பெயர்களும், [illegible]
சம்பவங்களும் யாவும் கற்பனையே.

முற்றும்



யாழ்ப்பாணம் அன்னையே
வணங்குகின்றோம் தாயே
இது எங்கள் தாய் மண். இதை அழகாக
வைத்திருப்பது எங்கள் ஒவ்வொருவருடைய
மறுக்க முடியாத கடமை. வீடுகள், வளவுகள்
மட்டுமல்ல வீதி ஓரங்களும் இந்த மண்ணில்
வாழும் மக்களால் தூய்மையாக வைத்திருக்க
வேண்டிய பொறுப்பு இருக்கிறது.
நாங்கள் எல்லோரும் எங்கள் கைகளைக்
கோர்த்துக்கொள்வோம். மாற்ற முடியாதது
எதுவுமே இல்லை. ஒற்றுமையாக இருப்போம்.
வெல்ல முடியாதது என்று எதுவுமே இல்லை
தாயை வணங்குவோம். தாயில்லாமல்
நாம் இல்லை - மீண்டும் ---
யாழ்ப்பாணம் அன்னையே
வணங்குகின்றோம் தாயே.

வந்ததும் இதே நிலா